பக்கங்கள் : இருபத்து நான்கு

[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே




# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 புரட்டாதி 13 வியாழக்கிழமை (29.09.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 285


# சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கிய விசாரணை

## உள்ளகப் பொறிமுறையில் ஐ.நா. உறுதியான நிலைப்பாடு



(நியூயோர்க்)

இலங்கையில் இடம்பெற்ற போர்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான உள்ளக விசாரணைப் பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகள் உள்வாங்கப்பட வேண்டும் என்ற விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபை ஒருபோதும் பின்நிற்கப் போவதில்லை என அவ் அமைப்பின் பொதுச் செயலாளர் பான் கீ மூனின் பிரதி ஊடகப் பேச்சாளர் அறிவித்துள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கை இணைக்க அரசாங்கம் முயற்சிக்கிறது

### மகிந்த காட்டம்




(கொழும்பு)

அரசமைப்பு மறுசீரமைப்பினூடாக வடக்கு, கிழக்கு மாகாணங்களை மீண்டும் இணைப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்து வருவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

அம்பாறையில் அண்மையில் நடைபெற்ற 24ஆம் பக்கம் பார்க்க....

## பினாமி சொத்துக்களை மீட்கவே மகிந்த தரப்பு கடும் முயற்சி!

### தம்பர அமில தேரர் குற்றச்சாட்டு



(கொழும்பு)

பினாமிகளின் பெயர்களில் வைத்துள்ள தங்களின் சொத்துக்களை மீட்டெடுப்பதற்காகவே மகிந்த ராஜபக்ஷ தரப்பு மீண்டும் ஆட்சிக்கு வரத்துடிக்கிறது. அந்தப் பினாமிகள் சொத்துகளை திருப்பிக் கொடுக்க மறுப்பதால அவற்றை 24ஆம் பக்கம் பார்க்க....

## விடைபெறுகிறார் இந்தியத் தூதுவர்



(கொழும்பு)

இலங்கைக்கான இந்தியத் தூதுவராக சூன் 23ஆம் பக்கம் பார்க்க....

## தேசிய விளையாட்டு போட்டி இன்று யாழில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

42ஆவது தேசிய மட்ட தடகள விளையாட்டுப்போட்டி இன்று யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இன்று ஆரம்பமாகும் தடகளத் தொடர் எதிர் 23ஆம் பக்கம் பார்க்க....

## முதலிடம் பெறும் சந்தர்ப்பத்தை மகிந்த அரசினால் இழந்தோம்

### சபாநாயகர் கரு ஜெயசூரிய சுட்டிக்காட்டு



(கொழும்பு)

அரசாங்கத்தின் வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக தகவல் அறியும் சட்டமூலத்தை நிறைவேற்றினோம்.

எனினும் சார்க் வலயத்தில தகவல் அறியும் உரிமை சட்டமூலத்திற்குள் செல்கின்ற இறுதிநாடாக இலங்கை பதிவாகிறது. 2001 ஆம் ஆண்டே இதனைக் கொண்டு வந்திருந்தால் சார்க் பிராந்தியத்தில் நாம் முதலாவது நாடாக இருந்திருப்போம் என்று சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

சர்வதேசதகவல்அறியும்தினத்தை முன்னிட்டு 23ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்தவின் பாதுகாப்பு பிரதானிக்கு பிணை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு பிரதானியாக செயற்பட்ட மேஜர் நெவில் வன்னியாராச்சிக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று பிணை வழங்கியுள்ளது.

மேலும், ரூபாய் 50ஆயிரம் பெறுமதியான ரொக்கப் பிணையிலும் தலா ஒரு மில்லியன் பெறுமதியான 10 23ஆம் பக்கம் பார்க்க....

## நாட்டை வேடுவர்களிடம் ஒப்படைத்துவிட்டு எல்லோரும் சேர்ந்து இந்தியா போவோம்

### ஞானசார தேரருக்கு அமைச்சர் மனோ பதில்

(கொழும்பு)

இந்நாட்டில்வாழும்தமிழர்களை இந்தியாவுக்கு விரட்டி அடிக்க வேண்டி வரும் என பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் கூறியுள்ளார்.

இந்தியாவுக்கு அனுப்புவதானால், இங்கே வாழும் சிங்களவர், தமிழர் எல்லோரும்தான் இந்தியா போக வேண்டும். நான் போகத்தயார் ஆனால், தனியாகப் போக மாட்டேன். இவரையும் கூட அழைத்துக் கொண்டு தான் இந்தியா போவேன். விஜய இளவரசன் மத்திய இந்தியாவிலிருந்து இலங்கையின் மேற்கு கரைக்கு வந்தார், அவருடன் அவரது நண்பர்களும் வந்தார்கள். இங்கு 23ஆம் பக்கம் பார்க்க....

## டிப்ளோமாதாரர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

கற்பித்தல் தொடர்பான தேசிய போதனாவியல் டிப்ளோமாதாரி ஆசிரியராக இலங்கை ஆசிரிய சேவையின் 3-I (அ) ஆம் தரத்திற்கு நியமிக்கப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதன்படி வடக்கு மாகாணப் பாடசாலைகளின் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு நியமனம் பெற்ற 241 தேசிய போதனாக் கல்வி டிப்ளோமாதாரர்களுக்கு எதிர்வரும் 4ஆம் திகதியன்று அலரிமாளிகையில் ஆசிரியர் நியமனம் வழங்கப்படவிருக்கிறது.

மேற்படி நியமனத்திற்காக நியமிக்கப்படவிருக்கும் தேசிய போதனாவியல் டிப் 24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 4ஆம் ஆண்டு நினைவதனில்

## அமரர் சுந்தரம் விக்னேஸ்வரன்

(ஓய்வுநிலை பாதுகாப்பு உத்தியோகத்தர்)

குறிப்பு: பிறந்த நாள் நினைவு 31.10.1955

மண்மகிழ:31-10-1955 கண்நெகிழ:13.10.2012

திதி:சதுர்த்தசி




ஆண்டுகள் நான்கு
அழுதுவிட்டோம் எம் உயிரே
ஆறாத்துயர் சுமந்து அகத்தினில்
உமைப் பிரிந்து ஈரவிழி
நீர் சுமந்து மீண்டும் உங்கள்
முகம் பார்ப்போமா இப்புவியில்
மீளாத்துயிலில் நெடிதுறங்கி விட்டவரே
ஆறாத் துயரமதில் மனைவி மகன் நாம்
இங்கு பரிதவித்து நிற்கின்றோம்.

மாலியவத்தை, சங்கானை/
சங்கத்தானை, சாவகச்சேரி

-குடும்பத்தினர்

(6054)


# மூத்த ஊடகவியலாளர் திருச்செல்வம் காலமானார்



மூத்த ஊடகவியலாளர் ஈ.ஆர்.திருச்செல்வம் நேற்று புதன்கிழமை நண்பகல் யாழ்ப்பாணத்தில் காலமானார். அவருக்கு வயது 83. இலங்கையில் மதிக்கப்படும் மூத்த ஊடகவியலாளர்களுள் ஒருவரான ஈ.ஆர். திருச்செல்வம் கொல்கத்தா பல்கலைக்கழகத்தின் கலைப்பட்டதாரி என்பதுடன் கல்வியியலிலும், அரங்கியலிலும் பட்டப்பின் டிப்ளோமா தகைமையையும் பெற்றிருந்தார்.

இடதுசாரிச் சிந்தனையைக் கொண்டிருந்த அவர் அறுபதுகளின் ஆரம்பத்தில் "ஈழநாடு" பத்திரிகையின் ஆசிரிய பீடத்தில் இணைந்து தனது ஊடகப் பணியை ஆரம்பித்தார்.

"சிந்தாமணி" வார இதழின் பத்தி எழுத்தாளர். "திசை" பத்திரிகையில் ஆசிரியபீட அலுவலர். ஈழநாதம பத்திரிகையின் சிரேஷ்ட உதவி ஆசிரியர். யாழ்.பல்கலைக் கழக புறநிலைப் படிப்புகள் அலகின் இதழியல் கற்கைநெறியின் பிரதான விரிவுரையாளர் என்ற பல் பரிமாணங்களில் தன்னை அடையாளப்படுத்தியவர்.

தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிப் புலமை கொண்ட ஈ.ஆர்.திருச்செலவம் யாழ்.மத்திய கல்லூரியின் பழைய மாணவர் என்பதுடன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகவும் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

அவர் எழுதிய "இதழியல் அடிப்படைகள்" என்ற ஊடக வழிகாட்டி நூல் அண்மையில் வெளியிடப்பட்டிருந்தது.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் யாழ்ப்பாணம் ஆசீர்வாதம் ஒழுங்கையில் உள்ள அவரது இல்லத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெறும். (ந)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தினதும் குமரன் விளையாட்டுக் கழகத்தினதும் உயர்த்தும் கரங்கள் செயற்திட்டம் ஊடாக மல்கன் வீதி, புத்தூரில் பதினைந்து வீடுகளை அமைத்து நன்கொடையாக வழங்கிய பொன்மனப் பேராளன்

## இராசையா குவேந்திரநாதன்

அவர்களின் சேவையை கௌரவித்து 29.09.2016 இன்று யாழ்ப்பாணம் தேசிய கல்வியற்கல்லூரி சமூகத்தால் நடத்தப்படும் கௌரவிப்பு விழா சிறப்பாக நடைபெற வாழ்த்துவதுடன் சமூக சேவையாளரின் கௌரவிப்பு விழாவை மேற்கொள்ளும் கல்வியற்கல்லூரி சமூகத்தினரையும் வாழ்த்துகின்றோம்.

அன்புடன் வாழ்த்துவோர் -

கோண்டாவில் கிழக்கு, ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தினரும் குமரன் விளையாட்டு கழகத்தினரும்.

(சி-5936)



## வீடு வாடகைக்கு தேவை

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் வாகனத் தரிப்பிடத்துடன் கூடிய வீடு வாடகைக்கு தேவை.

கச்சேரியை அண்டிய பகுதி விரும்பத்தக்கது.

தொடர்பு:-0776722055

(6055)



# புதிய வெளிச்சம்

பேராசிரியர் Dr ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன் அவர்களின்
M.A., M.Phil., Ph.D (English), M.Ed., M.A., Ph.D (Tamil).

## "சிறப்பு நிகழ்ச்சி"
## Motivational Speech

நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

காலம் : 02 ஒக்டோபர் 2016 மாலை 5.30 மணி
இடம் : வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம்

## அனுமதி இலவசம்



ஏனைய நிகழ்வுகள் :

யாழ்ப்பாணம்,
வன்னி,
திருக்கோணமலை,
மட்டக்களப்பு.

உதருவி வலம்புரி

தொடர்புகளுக்கு :
நவஜீவன் அனந்தராஜ் 0778293366



# பகிரங்க கேள்வி கோரல்

## யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் (வ-து)

யாழ்.மா.க.தொ.கூ.ச.சம்மேளனத்திற்கு சொந்தமான ஆழ்கடல் மீன்பிடி படகு (JFN 0001) மற்றும் குளிரூட்டி வாகனம் NP LA (87xx) என்பதனை பகிரங்க கேள்வி கோரல் மூலம் குத்தகைக்கு வழங்கப்பட இருக்கின்றது. இவற்றை பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் 10.10.2016ற்கு முன்னதாக தமது கேள்வி கோரலை மூடிய கடித உறையில் இட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"பகிரங்க கேள்வி கோரல்"** என குறிப்பிட்டு தலைவர், யாழ். மா.க.தொ.கூ.ச.சம்மேளனம், இல.100, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு மு.ப 10.00 மணிக்கு முன்பதாக கிடைக்க கூடியவாறு விண்ணப்பம் மேற்கொள்ளுதல் வேண்டும்.

ஆழ்கடல் மீன் பிடி படகிற்காக உறுதிபிணையுடன் ரூபா 200,000/- முற்பணமும் மாதாந்த குத்தகையாக ரூபா 50,000/- மேலும் எதிர்பார்க்கப்படுகின்றது.

குளிரூட்டி வாகனத்திற்கான உறுதிபிணையுடன் ரூபா 100,000 /- முற்பணமும் மாதாந்த வாடகையாக ரூபா 40,000 /- மேலும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**தொடர்புகளுக்கு :**
**தலைவர்,**
**யா.மா.க.தொ.கூ.ச.சமா. சம்மேளனம் (வ-து),**
**யாழ்ப்பாணம்.**

(சி-5933)

021 222 9797, 077 9229 842

# தகவல் அறியும் உரிமை அனைத்து பிரிவுகளுக்கும் திறந்து விடப்பட வேண்டும்



## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

**ஜனநாயகம், சுதந்திரம், மனித உரிமைகள் உள்ளிட்ட அனைத்து அம்சங்களையும் போசித்து பாதுகாக்கும் நாடென்ற வகையில் தகவல் அறியும் உரிமையானது நாட்டின் அனைத்து பிரிவினருக்கும் திறந்துவிடப்பட வேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

சர்வதேச தகவல் அறியும் நாள் தொடர்பில நேற்று கொழும்பு ஜெய்க் ஹில் ரன் ஹோட்டலில் ஆரம்பமான சர்வதேச மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் உரையாற்றியபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தகவலை அறிந்துகொள்ளும் உரிமையை, சமூகத்தின் அடிப்படை உரிமையை உறுதிப்படுத்துதல் தொடர்பாக நீண்ட காலமாக அரசியல் மேடைகளிலும் சிவில் அமைப்புக்களாலும் பொது மக்களிடையேயும் விவாதிக்கப்பட்டிருந்த போதிலும் கடந்தகால அரசுகள் நிறைவேற்றத் தவறிய அச்செயற்பாட்டை தற்போதைய அரசினால் நிறைவேற்ற முடிந்திருப்பதாக தெரிவித்தார்.

அரச செலவினங்களுக்காக பொதுமக்களின் நிதியைப் பயன்படுத்தும்போதும் அதனை முகாமைத்துவம் செய்யும்போதும் ஏற்படும் முறைகேடான பயன்பாடுகள் மற்றும் தவறான நிதி முகாமைத்துவம்காரணமாக நாட்டு மக்களுக்கு ஏற்படும் அநீதி மற்றும் நாட்டின் முன்னோக்கிய பயணத்துக்கு ஏற்படும் தடைகளும் தகவல் அறிந்து கொள்ளும் உரிமையை சமூகத்தின் அடிப்படை உரிமையாக உறுதிப்படுத்தப்படுத்துவதால் நீங்கிவிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஊடக சுதந்திர சட்டம், அரசியலமைப்பு, உரிமைகள் ஆகியன எவ்வளவுதான் உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் இன்று பெரும்பாலான ஊடகங்கள் அவற்றின் உரிமையாளர்களினதும் முகாமைத்துவத்தினதும் விருப்பு வெறுப்புகளுக்கமையவே செயற்படுகின்றன என்பதை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, ஊடக சுதந்திர உரிமைகளுக்கான வாய்ப்புகளை வழங்குவது அரசியல்வாதிகளின் பொறுப்பாகுமெனவும் அரச அலுவலர்கள் அதனை முறைமைப்படுத்துவதுடன் நாட்டு மக்களின் நலனுக்காக ஊடக சுதந்திரத்தைப்பயன்படுத்துவது அனைத்து இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களினதும் பொறுப்பாகுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# இந்த அரசாங்கம் தொடர்ந்தால் நாம் பலவற்றை அடைந்திடலாம்

## மாவை எம்.பி. தெரிவிப்பு

(கரணவாய்)

தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டதன் மூலம் நாம் பல நன்மைகளை அடைந்துள்ளோம். தொடர்ந்து இத் தேசிய அரசாங்கம் இருக்குமாயின் நாம் பலவற்றைப் பெற்று பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைவோம் என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் நேற்று புதன்கிழமை விளையாட்டு கழகங்கள் பொது நிறுவனங்களிற்கு பொருட்கள் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



மருத்துவராக வருபவர்கள் யாழ்ப்பாணத்தில் தமது கடமைகளைச் செய்யாது கொழும்பையே நாடியுள்ளார்கள். அந்த நிலை மாறவேண்டும்.

தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் பல நன்மைகளை நாம் பெற்று வருகிறோம். தொடர்ந்து இத் தேசிய அரசாங்கம் இருக்குமாயின் நாம் பலவற்றைப் பெற்று பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைவோம்.

எமது இளைஞர்கள் மது போதைப்பொருட்களுக்கு அடிமையாக உள்ளார்கள் எனப் பத்திரிகைகள் மூலம் அறிய முடிகிறது. இது மாற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-60)

# பிரதமர் ரணில் இன்று நியூசிலாந்திற்கு விஜயம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நியூசிலாந்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

இன்று நண்பகல் அளவில் பிரதமர் நியூசிலாந்து புறப்பட்டுச் செல்வார் என பிரதமர் அலுவலகத்தகவல்கள் தெரிவிக்கின்றன.



இலங்கை பிரதமர் ஒருவர் மேற்கொள்ளும் முதலாவது உத்தியோகபூர்வ நியூசிலாந்து விஜயம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்பு, பொருளாதாரம், பிராந்திய பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு காரணிகள் தொடர்பில் அந்நாட்டு பிரதமர் ஜோன் கீயுடன் பிரதமர் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

நியூசிலாந்து பிரதமரின் உத்தியோகபூர்வ அழைப்பிற்கு அமைய பிரதமர் இந்த விஜயத்தை மேற்கொள்கின்றார்.

பால் மா உற்பத்தி தொடர்பிலும் ஏனைய சில விடயங்கள் தொடர்பிலும் இந்த விஜயத்தின் போது இரு தரப்பு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படவுள்ளன. (இ-7-10)

# அஹிம்சை போராட்டத்திற்கும் ஆயுதவலு இருக்க வேண்டும்

அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பு (10 ஆம் பக்கம் பார்க்க...)

# யோஷித வெளிநாடு செல்ல நீதிமன்று நேற்று அனுமதி



யோஷித ராஜபக்ஷ வெளிநாடு செல்வதற்கு நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

யோசித ராஜபக்ஷ மீது நிதி மோசடி குற்றம் சுமத்தப்பட்டு வழக்கு நடைபெற்று வருவதால் அவர் வெளிநாடு செல்வதற்கு தடை விதித்து கடுவலை நீதிமன்றம் உத்தரவிட்டிருந்த நிலையில், மேல் நீதிமன்றம் வெளிநாடு செல்ல அனுமதித்து நேற்று தீர்ப்பளித்துள்ளது.

அவுஸ் திரேலியாவில் வைத்திய பரிசோதனை செய்யவுள்ளதாக கோரி குறித்த மனுவை கொழும்பு மேல் நீதிமன்றில் யோஷித ராஜபக்ஷ சமர்ப்பித்ததையடுத்து குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த உத்தரவினை கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று பிறப்பித்துள்ளது. (இ-7-10)

# கல்வி அமைச்சின் நிதிப் பொறுப்பாளர்களை நீக்குமாறு பிரதமர் அமைச்சருக்கு உத்தரவு

(கொழும்பு)

நிதிப்பிரிவு பொறுப்பாளர்களை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நீக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்திற்கு உத்தரவிட்டுள்ளார்.

கிரமமற்ற பணிகள், உரிய நேரத்தில் பணிகளைப் பூர்த்தி செய்யாமை, கையூட்டல் பெற்றுக் கொண்டமை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இவர்களுக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கல்வி அமைச்சின் நிதிப் பிரிவு பொறுப்பாளர்களைப் பணி நீக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்துமபண்டாரவுடன் இணைந்து அதிகாரிகள் பணி நீக்கப்படுவதனால் ஏற்படக் கூடிய வெற்றிடத்திற்கு புதிய அமைச்சர்களை நியமிக்குமாறு கல்வி அமைச்சருக்கு பிரதமர் பணிப்புரை வழங்கியுள்ளார்.

13 ஆண்டுகள் பாடசாலை கல்வியைக் கட்டாயப்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு நல்ல திட்டங்களை நல்லாட்சி அரசாங்கம் அமுல்படுத்தியுள்ள நிலையில் இவ்வாறான செயற்றிறனற்ற அதிகாரிகளினால் அரசாங்கத்தின் முயற்சிகள் பாதிக்கப்படும் என பிரதமர், கல்வி அமைச்சருக்கு அறிவித்துள்ளார். (இ-7-10)

# National College of Education Diploma Holders for Teaching Appointment

MISS R.PIRATHEEPA - 925580473V
MISS G.KARTHIKA - 928121445V
MISS J.JENNATHU RUMMANA - 927301580V
MRS W.MARY POWSIKA - 928330427V
MRS S.SULOSINI - 925732850V
MRS B.THANUSHA - 917133735V
MRS B.MARY ROSHANTHINY - 928003060V
Miss S Anusha - 906232596V
Miss R.Mery Nishanthiny - 935054117V
Miss S Nirogini - 905343491V
Miss V Vinuabira - 886273878V
Miss S P Roche - 928470687V
Miss K Tharsiny - 918351841V
Miss S Inthuja - 906863014V
Mr K.Laxsan - 922892691V
Mr G.Niroshan - 921733240V
Mr R.Jaganivasan - 922782849V
Mr G.Velruban - 922913650V
Miss N.Fathima Nismiya - 925811536V
Mr J.Pirasanth - 913054806V
Ms. P. BIRINTHA - 925352683V
Ms.E.KAJANTHINI - 916833270V
Ms.M.ANUSHANA - 928571553V
Ms.J.NARMATHA - 927182564V
Ms.K.MANCHULA - 926053760V
Ms.M. MUKUNTHAN - 922957586V
Ms.J.YAMINI - 925192040V
Ms.G.THUVARAHA - 928121089V
Ms.V.CHANDRIKKA - 915771092V
Mr.P.RAVISHANTH - 900853971V
Ms.T.JANANTHINY - 925713295V
Ms.S.MATHIMALAR - 927963736V
Ms.P.JEYANTHUSA - 917882134V
Ms.S.THEVASAHIRI - 927032074V
Ms.M. MAHENTHIRARASHA - 923210243V
Ms.N.THARSHIKA - 915993419V
Miss Vasanthagoway S. - 907964132V
Miss R. Romika - 927153343V
Miss J. Sobiya Lenin - 926093398V
Miss P. Sulakshana - 926513320V
Miss A. Sinthuja - 908302494V
Miss A. Jaliny - 916101716V
Mr. A. Senthuran - 930291870V
Miss I. Babyshamila - 926643258V
Miss Y. Tharsika - 926414380V
Miss R. Priyanka - 925864790V
Mr. S. Sarmilan - 912312275V
Miss S. Banuja - 926622595V
Miss M. Mahintha - 925214191V
Miss Y. Sutharasana - 917700672V
Miss N. Popy - 925330060V
Miss S. Nishanthini - 915643760V
MISS. K.YOGESWARI - 928333469V
MISS. G.GNANARUBY - 918490892V
MISS. GJANANI - 925150657V
Ms.P. THAYANITHY - 886642890V
Ms.S. GOBIKA - 906943026V
MISS. K.KIRISHANTHY - 926844040V
MISS. A.REWATHI - 925130150V
A.BANOOSA - 926661590V
MS. R.INTHUSHA - 895272418V
B.DUSHANTHY - 927422492V
T.THANOSIKA -
MR. K.MATHIVATHANAN - 920241220V
MR. B.KUKESAN - 902751548V
MS. S.MAREEN JUTHITH - 927310058V
MS. R.SAYANTHINI - 917542783V
MR. S.EDMANRAJ - 910310356V
MR. K.KEGULAN - 910741829V
MR. L.THARSIKAN - 913131234V
MS. T.THANUSA - 918121552V

MS. S.MARY NIVETHA - 916190018V
MS. S.SIVARANJINY - 927304015V
MS. A.KAJAANY - 905903640V
MS.J.NIRANGINY - 915373127V
MS.M.ARCHCHANA - 925740632V
MS.S.SAHAYAMARY DIAS - 907473570V
MS.M.KEERTHISHA - 907192407V
MS.M.NIRANSANI - 926061640V
MR.A.LAWRENCE STEEPHAN - 902232923V
MS. A.DELVIN THILIKA LOGU - 927290847V
MS. K.SANSUTHA - 935293014V
MS.P.THAMILINY - 915983430V
MS.M.ARUL JEYANTHY - 905894463V
MS. K.Sugnaya - 906930900V
MS.P.JENOSHA - 917852421V
MS.R.SARANYA - 915460771V
MS.T.VATHANA - 918043322V
MS.R.AKILMATHY - 908082885V
MS.U.DILANY - 886983018V
MS.Y.KAMSHIKA - 917852790V
MS.S.SUREKA - 915503306V
R.Tharshana - 917721351V
K. Sharmila - 917132682V
S.Piremalatha - 925663344V
S.Jeyatharshani - 916304129V
P.Jivitha - 927974614V
S.Nirojini - 928320464V
I.Kirupana - 926714066V
S.Pratheepa - 908450485V
S.Sahana - 925914010V
V.Vinothiny - 928333906V
K.Pakirthini - 917362971V
Y.Kalpana - 916793555V
K.Kalyani - 935133947V
Miss. S. sayijenani - 935180589V
Miss. T. Mekala - 935203503V
Miss. V. Kanista - 927214156V
Miss.S. Niransani - 928571432V
MISS. M.PRIYANTHINI - 906074010V
MISS. T.THARMINI - 915762727V
MISS. S.SANKARY - 925581860V
MR. R.KAJANAN - 912753026V
MR.S.MOHANNARAM - 910320130V
MR.K.VENUTHAS - 922892130V
MISS.B.MATHUMAI - 917751781V
MISS.V.VAHINI - 916171196V
MS. M. MARYKALISTA - 926393863V
MS. S. KOPIKA - 915763944V
MS.S. DARINA LAMBERT - 926963414V
MR.W. SULAXSAN - 922864179V
MS.R. KAJANTHINI - 916073747V
MR.T.VINOVITHURTHAN - 921594232V
MS. N.YALINY - 928323765V
MS.T. DILANI - 915892434V
MS. P. VITHIYA - 906461528V
MS. M.THAMILINI - 927950928V
MS. A. ANUSHA - 915564976V
MS. S. SHAHNAS BANU - 935171237V
MR. A. KARTHEEPAN - 922362327V
MR. S. RAJANIKARAN - 883342097V
MR. R. KATHIRAVAN - 913190912V
Miss. T. Kayathiry - 935070244V
Mr. M. Ponvel - 921312350V
Miss. V. Thuvaraga - 916252935V
Mr. M. Muraleetharan - 920573592V
Miss. V. Gayali - 925622842V
Miss. V. Mayoori - 887192162V
Miss. S. Pratheepa - 922683106V
Mr. S. Gnanakaran - 913103041V
Mr. S. Ravichandran - 921532911V
Mr. S. Thinesh - 910741586V

Miss. S. Tharshana - 925944319V
Miss. S. Jothika - 927771080V
Miss. R. Logini - 908081315V
Miss. M.M.F. Shafrina - 906892600V
Miss. A. Arunthathy - 916852592V
Miss. N.Santhiya - 905894153V
Miss. M.A. Fathima Benazir - 898193993V
Miss. H. Banusha - 917532117V
Miss. S. Fathima Sabeeha - 928204456V
Miss. M. Munazza - 907391833V
Miss. A.J. Fathima Faznas - 925091090V
Miss. A.H. Zam Hareefa - 925133990V
Miss. P. Vasuki - 927341700V
Mr. N.M. Insaf Hasan - 893322620V
Miss. S.T.F. Riswana - 916522045V
Miss. M.I. Fathima farzana - 927832445V
Miss. S.L. Fathima Firosha - 928431738V
Mr. D. Neil Thevasuthan - 892621039V
Mr. A.P. Senpeetro - 920843255V
Miss.M.H.F.Hassan - 926362160V
Miss. S.Shalini - 917662827V
Miss.S.F.Shahnaz - 918414371V
Mr.H.M.M.Nisfan - 903502088V
Miss.U.L.F.Nifra - 917481040V
A.S.Kalidhashiya Begam - 928032698V
MS. K.PIRINTHA - 927153319V
MR. T.Hema - 936111459V
MS. L.Senremiga - 925683752V
MS.B.Ampiga - 926402560V
MS. B.Nishanthy - 917301875V
MS. S. SUGANYA - 927582430V
MS. M.Gopitha - 935240620V
MS.S.Ushiththa - 928520358V
MS.S.Rathika - 896943804V
B.F.fasmiya - 925643157V
MS.M.Elilvani - 928440702V
MS.R.Ragavi - 935160472V
MS.S.Lasintha - 917172935V
MS.G.Kirushnaveny - 927631873V
MS.T.Kishalini - 926433695V
MS. Y.Pirasanna - 9169937304V
MS.B.VIGINA - 925162728V
MS.R.ASVINI - 935231857V
MS.T.Gunajini - 926162195V
MS.T.Thevatharmala - 927851571V
MS.S.Sangeetha - 916832419V
MS.T.THARSHIKA - 927901382V
MS.G.NIROJINI - 927093043V
MR.N.THAVAJIKAN - 922451869V
MS.R.THARSIKA - 928464377V
MS.K.Saranya - 915470971V
MS.K.Jananie - 927242139V
MS.K.Darsika - 915913725V
M.Fathima Rumman - 935763339V
MS.V.Kowsika -926171240V
MS.V.Suganja - 928051218V
MS.J.Densiga - 917792143V
I.Prathika - 927151464V
MS.P.Gowsiga - 926452614V
MS.G.Virgin debra - 927903881V
MS.M.Jalini - 925574074V
E.R.Moraies - 910451030V
P.Inkaran - 911753049V
S.Madurani Fernando - 916083408V
MS.V.PRASANYA - 926813498V
MS.T.MOHANATHARSHINI - 928591859V
MS.A.Abila - 898152243V
MS.T.SULAKSHANA - 928333361V
MS.S.NIROJINY - 928632938V
Miss. T. Sayigeetha - 915474152V
Miss.A.Sujeevamary - 928410668V




இமையாணன் அறிவாலய சனசமூக நிலையம் நடத்திய சாதனையாளர் கௌரவிப்பு விழா அண்மையில் நடைபெற்றது.(படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)

## ஜோதிடத் தகவல்

### பெண்மையும் அது இன்மையும்

ஜென்ன இலக்கினமும் சந்திர இலக்கினமும் ஒரு பெண்ணின் ஜாதகத்தில் ஆண் ராசிகளில் இருந்தால் ஆணைப் போன்ற ஒருவரும் செயலும் உண்டாகும். மேற்படி வீடுகளில் பாபர்கள் இடம் பெற்று இருந்தால் அழகு இல்லாதவளாகவும் பொல்லாத குணம் உடையவளாகவும் இருப்பாள்.


After A/Ls... UGC அங்கீகாரம் கொண்ட | UK Degree பட்டப்படிப்புகளை யாழ்ப்பாணத்தில் பூர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்பு...

edexcel PEARSON London South Bank University WOLVERHAMPTON CIOB RICS




BM Business Management
CSD Computing & Systems Development
CE Civil Engineering
QS Quantity Surveying
BMS Biomedical Science
LLB Law

BA (Hons) / BSc (Hons) / BEng (Hons) & LLB (Hons)

UGC Recognized TVEC Approved

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

JAFFNA 077 710 2131 077 960 3753
COLOMBO 077 283 4595

18 YEARS of Trust & Excellence in Higher Education

BUILDING CAREERS - TRANSFORMING LIVES

Jaffna Campus
16, Point Pedro Road, Jaffna

ISO 9001:2008 CERTIFIED

HOTLINE : 021 2219910 Visit us on Facebook | info@bcas.lk | www.bcas.lk


## இராசி பலன்

29.09.2016
(புரட்டாதி 13, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
சதுர்த்தசி பின்னிரவு 4.25 மணிவரை
பூரம் முன்னிரவு 8.46 மணிவரை
சுபநேரம் 7.32-9.02 மணிவரை
இராகுகாலம் 1.32-3.02 மணிவரை
அருணந்தி சிவாச்சாரியார் குருபூசை, கேதாரேஸ்வர விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>திருவோணம், அவிட்டம் இரவு 3.12 மணிக்கு கன்னி-சந் | | |
| | | | ராகு<br>சந் |
| செவ் | சனி | சுக் | குரு<br>சூரி<br>புத |

**மீனம்:** உங்களின் கருத்துக்களுக்கு வரவேற்பு கிடைக்கும், வருமானம் வரும் வழியில் நாட்டம் காட்டுவீர்கள், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மேடம்:** தாழ்ந்த சுபாவமுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**இடபம்:** சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகி மனநிம்மதியைக் கொடுக்கும், நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்:** எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு, புதிய நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**கும்பம்:** செல்வாக்கான நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பால்ய நண்பர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கடகம்:** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், வார்த்தைகளில் நிதானம் தேவை, குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம்.

**மகரம்:** பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், போசன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**சிம்மம்:** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், உங்களின் வார்த்தைகளை பலரும் ஏற்று நடக்க முன்வருவர், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**தனுசு:** பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், தொழிலில் இருந்த இடையூறுகள் விலகும், பயணங்களால் பலனுண்டு, புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து பேசுவார்கள், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள்.

**துலாம்:** உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**கன்னி:** உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு, கற்பனை மிகுதியான நாள், எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.

# வடக்கில் இரண்டாயிரத்து 291 பேர் டெங்கு நோய்த்தாக்கத்திற்கு இலக்கு

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் தகவல்



படங்கள்:-உ.சாளின்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் இரண்டாயிரத்து 291 பேர் இந்த வருடத்தில் டெங்கு நோய் தாக்கத்திற்கு இலக்காகியுள்ளதாக வடமாகாண சுகாதார சுதேச சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆர். கேதீஸ்வரன் தெரிவித்தார்.

மத்திய சுகாதார அமைச்சும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவினரும் இணைந்து ஏற்பாடு செய்த தேசிய நுளம்பு ஒழிப்பு வாரத்தின் அங்குரார்ப்பண வைபவம் நேற்று முன்தினம் பிற்பகல் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தலைமையுரை ஆற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். யாழ். மாவட்டத்தில் 1753 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 68 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 150 பேரும் மன்னார் மாவட்டத்தில் 108 பேரும் வவுனியா மாவட்டத்தில் 212 பேரும் இதுவரையான காலப்பகுதியில் டெங்கு நோயின் தாக்கத்திற்கு இலக்காகியுள்ளார்கள் என்ற அதிர்ச்சித் தகவல் வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் வடகீழ் பருவ மழை பெயர்ச்சிக்குப் பின்னரும் தென்மேல் பருவ மழை பெயர்ச்சிக்குப் பின்னரும் டெங்கு நோயின் பரம்பல் அதிகரிப்பது வழமை. அந்த அடிப்படையில் எங்களுடைய பிரதேசத்தில் எதிர்வரும் மாதம் முதல் வடகீழ் பருவ பெயர்ச்சி மழை ஆரம்பிக்கவிருக்கிறது. பொதுவாக எங்களுடைய பிரதேசங்களில் நவம்பர், டிசெம்பர், ஜனவரி மாதங்களில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரிப்பது வழமை.

இதற்கமைவாக எதிர்வரும் நவம்பர், டிசெம்பர், ஜனவரி மாதங்களில் இதன் தாக்கம், பரம்பல் என்பன அதிகரிக்கக் கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன.

எனவே டெங்கு கட்டுப்பாட்டைத் தீவிரமாக முன்னெடுக்க வேண்டிய கட்டுப்பாட்டில் நாங்கள் இருக்கிறோம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வினை தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பணியகத்தின் தலைவர் வைத்திய கலாநிதி நசீசேர மற்றும் வடமாகாண சுகாதார, சுதேச வைத்திய சேவைகள் அமைச்சர் பா.சத்தியலிங்கம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்டு சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்திருந்தனர். மேலும் இதன்போது இராணுவம் மற்றும் பணியாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர். (இ-4)




## 'வாசிப்பும் மேம்பாடும்'

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இந்தியாவின் தமிழ் நாடு பேராசிரியர் திருமதி ஜெய்ந்தஸ்ரீ பாலகிருஷ்ணன் வழங்கும் "வாசிப்பும் மேம்பாடும்" எனும் சிறப்புரை இடம்பெறவுள்ளது.

இச்சிறப்புரை நாளை மறுதினம் முதலாம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3மணியளவில் இணுவில் பொது நூலக கலாசார மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

தலைவர் ம.கபிலன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வித்திணைக்கள மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் (அபிவிருத்திப்பிரிவு) திருமதி பி.செல்வின் இரேனியஸ் கலந்து கொள்ளவுள்ளார்.(இ-3)

## சத்சங்கம்

யாழ்ப்பாணம் இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தின் சத்சங்கம் நிகழ்ச்சி எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை பிரார்த்தனை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் சென்னை இராமகிருஷ்ண மட சுவாமி தர்மிஷ்டானந்தஜி மகராஜின் ஆன்மீக உரை இடம்பெறவுள்ளது. (இ-3)

## 'வைத்தியசாலை சதுக்கம்' அமைக்க காணி கோரல்

யாழ்.போதனா வைத்தியசாலையின் மேற்கு பகுதியை 'வைத்தியசாலைசதுக்கம்' ஆக மாற்ற குறித்த காணியை தந்துதவுமாறு வடமாகாண காணி அமைச்சரிடம் யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் எஸ். சத்தியமூர்த்தி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு சுகாதாரம் தொடர்பாக கருத்துக்களை தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.போதனா வைத்தியசாலையில் விபத்து சிகிச்சை பிரிவை அமைப்பதற்கு 590 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைத் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. 2 மாடிகள் கட்டப்பட்டு வருகின்றன. அந்த வேலைகள் ஜூலை மாதமளவில் நிறைவடையும். மேலும் 4 மாடிகள் கட்டக்கூடியதாக இருக்கின்றது. இதற்காக மத்திய அரசின் அனுமதியும் கோரப்பட்டுள்ளது.

மேலும் புதிய மகப்பேற்று விடுதி அமைப்பதற்கு இந்த வருடம் ஆயிரத்து 900 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. கேள்விக்கோரலின் பின் ஒப்பந்தகாரருக்கு வழங்கப்படவுள்ளது.

அத்துடன், யாழ். போதனா வைத்தியசாலைக்கு மேற்கு பகுதியை "வைத்தியசாலை சதுக்கமாக" மாற்றுவதற்கான கோரிக்கை ஒன்றை வடமாகாண முதலமைச்சரிடம் முன்வைத்துள்ளோம். குறித்த காணிப் பகுதியை மாகாண அமைச்சு வழங்கினால் வைத்தியசாலை சதுக்கமாக அதை மாற்ற முடியும். அவ்வாறு மாற்றுவதனால், வைத்தியசாலையின் வளர்ச்சிக்கு அது இன்றியமையாததாக இருக்கும்.

அதற்கான திட்ட வரைபுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. மாகாண காணி அமைச்சு சரியான முறையில் காணியை வழங்கினால் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும் என மேலும் தெரிவித்தார். அதற்கு பதிலளித்த முதலமைச்சரும் இணைத்தலைவருமான சி.வி.விக்னேஸ்வரன் குறித்த கோரிக்கை கடிதம் கிடைத்துள்ளதாகவும்ஆராய்ந்ததன் பின்னர் பதிலளிப்பதாகவும் தெரிவித்தார். (இ-9)

## மீளக்குடியமர்ந்த மக்களுக்காக 44 மில்லியன் ரூபாய் செலவில் 244 சுயதொழில் கடன் திட்டங்கள்

புனர்வாழ்வு, மீள்குடியேற்றம்,சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கும் புனர்வாழ்வு அதிகாரசபை மேற்கொண்ட முயற்சியின் காரணமாக 2015 ஆம் ஆண்டில் இருந்து புதிய முறையிலான சுயதொழில் கடன் திட்டங்களை மாற்றியமைத்து வருமானம் தரக் கூடிய சிறிய திட்டங்களை உருவாக்கியுள்ளது. இத்திட்டங்களை அமுல்படுத்துவது முதல் திட்டங்கள் தயாரிக்கும் முறைமை, கணக்கு வைக்கும் முறைமை, மூலப்பொருட்களைப் பயன்படுத்தும் வகை, சந்தைவாய்ப்புக்களைப் பயன்படுத்தும் திறன் மற்றும் சேமிப்புப் பழக்கத்தை வளர்க்கும் இயல்புகள், திட்டங்களைக் கண்காணிக்கும் (Monitoring) நுட்பங்கள், வங்கிக் கடனைத் திருப்பிக்கட்ட வேண்டிய தேவை,அதன் அத்தியாவசியம் என்பவற்றைத் தெளிவாக சிறந்த வளவாளர்களைக் கொண்டு தரமான கருத்தரங்குகளை நடத்தி அதன் பின்னரே இக்கடன்கள் வழங்கப்படுகின்றன.

அத்துடன்பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கும்போது அரசாங்க அதிபர்,பிரதேச செயலாளர், விஞ்ஞான தொழில் நுட்ப உத்தியோகத்தர் ஆகியோருடன் கலந்துரையாடி அவர்களின் ஆலோசனைகளுடன்பயனாளிகளும்திட்டங்களும் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

ஏனையோர் முன்னர் கடன் வழங்க மறுத்த வங்கிக்கிளைகள் கூட தற்போது கடனை வழங்க முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்திற்கமைவாக2015ஆம்ஆண்டிலிருந்து புதிய நடைமுறையில் மொத்தமாக 244 வாழ்வாதாரத்திட்டங்கள் இனங்காணப்பட்டு 44 மில்லியன் ரூபாவினை வழங்கி மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கு உதவியாக இத் திட்டம்தற்போது வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இத்திட்டங்கள் மூலம் ஆகக்கூடியது 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா 4% வட்டியில் நீண்டகாலக்கடனாக இலங்கை வங்கி மூலம் வழங்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. மீளக் குடியமர்ந்த மக்களுக்கு அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமைகின்றது. இன்று சுமார் 244 திட்டங்கள் மீளக்குடியமர்ந்த மக்களினால் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்திப் போதிய வருமானத்தைப் பெற்று தங்களது வாழ்க்கைத்தரத்தை வளம் பெறச் செய்துள்ளனர்.

இப்புதிய வகையிலான திட்டங்களை இலங்கை வங்கி பூரணமாக ஒத்துழைப்பு வழங்கி மீளக்குடியமர்ந்த மக்களுக்கான வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு உறுதுணையாக இருக்கின்றது என யாழ்ப்பாணம் புனர்வாழ்வு உதவியாளர் கு.கோபிராஜ் தெரிவித்தார். (இ)

## மாணவர்களுக்கான அரங்கத்திறன் விருத்தி பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் சண்டிலிப்பாய் கலாசார பிரிவின் ஒழுங்குபடுத்தலில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட 10 பாடசாலை மாணவர்களுக்கான அரங்கதிறன் விருத்தி பயிற்சிப் பட்டறையானது இன்று 29 ஆம் திகதி வியாழக்கிழமை, நாளை 30 ஆம் திகதி, எதிர்வரும் 3 ஆம் திகதி திங்கட்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இப்பயிற்சி பட்டறையின் வளவாளர்களாக நாடக கலைஞரும் வலிகாமம் கல்வி வலயத்தின் ஆரம்பப்பிள்ளை பருவ அபிவிருத்தி உதவிக் கல்விப்பணிப்பாளர் ச,கிருபானந்தன், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் நாடகத் துறை ஆசிரியரும் புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளருமான எஸ்.ரி.குமரன், தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் நாடக ஆசிரியரும் ஆரோகண அரங்க கல்லூரியின் இயக்குநருமான அபூரன், மானிப்பாய் இந்துக்கல்லூரியின் நாடகத் துறை ஆசிரியரும் புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாக பணிப்பாளருமான எஸ்.ரி. அருள்குமரன் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கவுள்ளனர். இப் பயிற்சிப் பட்டறையில் தலைமைத்துவம், கற்பனையாக்கம், எண்ணக்கரு விருத்தியாக்கம், நடிப்பு, நெறியாள்கை, இசை நாடகம்-கூத்து தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இப்பயிற்சிப் பட்டறையில் மானிப்பாய் மகளிர் கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி, சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி, இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம், நவாலி மகா வித்தியாலயம், மெமோறியல் ஆங்கில பாடசாலை போன்ற பாடசாலைகளில் தலா 5 மாணவர்கள் வீதம் கலந்து கொள்ளவுள்ளனர் என பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ-7-10)

# சர்வதேச முதியோர் வாரவிழா

சர்வதேச முதியோர் வாரவிழா நாளை மறுதினம் முதலாம் திகதி சனிக்கிழமை தொடக்கம் 07.10.2016 வரை முற்பகல் 10.00-12.30, பிற்பகல் 02.30-மாலை 6.00 வரை கைதடி அரச முதியோர் இல்லத்திறந்த வெளி அரங்கில் அரச முதியோர் இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது. முதலாம் நாள் மாலை நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

2 ஆம் நாள் காலை நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களப்பணிப்பாளர் திருமதி.நளாயினி இன்பராஜ் பங்குபற்றுவார். அதேவேளை இல்ல உத்தியோகத்தர் மதிப்பளிப்பு நிகழ்வு நடைபெறும். மாலை நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் கலந்து கொள்ளவுள்ளார். 3 ஆம் நாள் காலை நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சமூக சேவைகள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் பா.முகுந்தன் கலந்து கொள்வார். மாலை நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண முதலமைச்சரின் அமைச்சு பிரதம செயலாளர் ப.ஜெயராஜ் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

4 ஆம் நாள் காலை நிகழ்வில் வட மாகாண முதலமைச்சரின் அமைச்சு உதவிச் செயலர் பொ.சிறீவர்ணன் கலந்து கொள்வார். மாலை நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண முதலமைச்சரின் அமைச்சு திட்டமிடல் பணிப்பாளர் த.சர்வானந்தா கலந்து கொள்ளவுள்ளார். 5 ஆம் நாள் காலை யாழ். பல்கலைக்கழக சமூகவியற்றுறை பேராசிரியர் நா.சண்முகலிங்கனும் அவரது மாணவர்களும் வழங்கும் நிகழ்வுகள் இடம்பெறும். மாலை நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சமூக சேவைத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ் கலந்து கொள்ளவுள்ளார்.

6 ஆம் நாள் காலை நிகழ்வாக பொது மக்களுக்கான நடமாடும் மருத்துவமுகாம் நடைபெறும். மாலை நிகழ்வில் பிரதம விருந்தினர் சாவகச்சேரி உதவிப் பிரதேச செயலர் செல்விர.நவரத்தினம் கலந்து கொள்ளவுள்ளார்.

7 ஆம் நாள் காலை நிகழ்வாக இன்தமிழ் இனியன் செ.ஸ்ரீனிவாசனின் ஆத்மீக நிகழ்வு நடைபெறும். மாலை நிகழ்வாக 2 மணிக்கு விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெறும். பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். தினமும் கலை நிகழ்வுகளும் இன்னிசை நிகழ்வுகளும் நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (இ-254-134)

# சர்வதேச அஹிம்சா தின சிறப்பு நிகழ்ச்சி

யாழ்.இந்திய துணைத் தூதரகமும் அகில இலங்கை காந்தி சேவா சங்கமும் இணைந்து நடத்தும் சர்வதேச அஹிம்சா தின சிறப்பு நிகழ்ச்சி மகாத்மா காந்தியடிகளின் 147 ஆவது பிறந்த தினமான எதிர்வரும் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெற வுள்ளது. இந்நிகழ்வில்பிரதம விருந்தினராக கோயம்புத்தூரைச் சேர்ந்த பேராசிரியர் கலாநிதி திருமதி ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன் கலந்து கொண்டு' அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்' என்ற தலைப்பில் பேருரை நிகழ்த் தவுள்ளார். 'காந்தீயம்' பத்திரிகை வெளியீடு, கட்டுரைப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான பரிசளிப்பு மற்றும் யாழ்ப்பாணக் கலைஞர்களின் சிறப்புக் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வுக்கு முன்பதாக காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ளமகாத்மாகாந்தி அடிகளாரின்திருவுருவச்சிலைக்குமலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இடம்பெறும். இந்நிகழ்வுக ளில்பொது மக்களும் ஆர்வலர்களும் கலந்து கொள்ள முடியும் என அகில இலங்கை காந்தி சேவா சங்க பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார். (இ)

# 147வது காந்தி ஜெயந்தி தின கட்டுரைப் போட்டி முடிவுகள்

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் மகாத்மா காந்தியடிகளின் 147 ஆவது ஜெயந்தி தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மத்தியில் நாடளாவிய ரீதியில் நடத்திய கட்டுரைப் போட்டியின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இம்மாணவர்களுக்கான பரிசளிப்பு எதிர்வரும் 02.10.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் யாழ்.இந்தியத் துணைத் தூதரகம், அகில இலங்கை காந்தி சேவா சங்கத்துடன் இணைந்து வழங்கும் சர்வதேச அஹிம்சை தின சிறப்பு நிகழ்வில் இடம்பெறும்.

**ஆரம்பப் பிரிவு**

முதலாமிடம்- விஸ்ணுவர்த்தன் யுவர்சன் (யா/உடுப்பிட்டி அமெரிக்கன்மிசன் கல்லூரி), இரண்டாமிடம்- முகம்மட் றசீன் யுஸ்றி அகமட் (அல் பாத்திமியா வித்தியாலயம், அக்கரைப்பற்று), மூன்றாமிடம்- தமிழினி இராமகிருஷ்ணன் (யா/வலந்தலை தெற்கு அ.மி.த.க. பாடசாலை, காரைநகர்).

**கனிஷ்ட பிரிவு**

முதலாமிடம்- பானுஜா மோகனராஜ் (யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), இரண்டாமிடம்- ஹரிணி சவுந்தரராஜன் (ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி, திருகோணமலை), மூன்றாமிடம்- யுவர்ணா விஸ்ணுவர்த்தன் (யா/நெல்லியடி மத்திய கல்லூரி).

**சிரேஷ்ட பிரிவு**

முதலாமிடம்- அஷாரிஹா அசோகன் (யா/வேம்படிபெண்கள் உயர்தரப்பாடசாலை), இரண்டாமிடம்- மூர்த்தி விதுர்ஷன் (யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), மூன்றாமிடம்- பிரியணி சிவதாஸ் (கிளி/இந்துக் கல்லூரி).

**அதி சிரேஷ்ட பிரிவு**

முதலாமிடம்-நிறோஜினி வரதராசன் (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), இரண்டாமிடம்- பிரமியா சிறிதரன் (திருக்கோவில் மெ.மி.த.மகா வித்தியாலயம்), மூன்றாமிடம்- ரோசானி சிங்கராசா (வ/வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்) என அச்சங்கத்தின் பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார். (இ)

# அரச நிர்மாணிகள் பொதுக்கூட்டம்

வடமாகாண அரசாங்க நிர்மாண நிர்மாணிகள் சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிமுதல் யாழ்ப்பாணம் பொது நூலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி. விஜயகலா மகேஸ்வரன், யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா மற்றும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)




நவராத்திரி தினத்தை முன்னிட்டு வெளிவரவுள்ள நவராத்திரி பாமாலைக்கு மாணவர்கள் தங்கள் கவிதைகளை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும்.

ஆசிரியர்
நவராத்திரி பாமாலை,
இல..3, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.


# முதியவர்களுக்கான விளையாட்டுப்போட்டி

முதியோர்களுக்கான மாவட்டமட்ட விளையாட்டுப் போட்டி இன்று வியாழக்கிழமை காலை 9மணிக்கு கைதடி நவீல்ட் பாடசாலை மைதானத்தில் நடைபெறும். யாழ். மாவட்ட சமூக சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர் வ.செல்வம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி ந.இன்பராஜ்,சிறப்பு விருந்தினர்களாக கைதடி அரச முதியோர் இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன், கைதடி நவீல்ட் பாடசாலை அதிபர் திருமதி இ.வாசுகி, கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட முதியோர்பேரவைத் தலைவர் இ.மயில்வாகனம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் முதியோருக்கான விளையாட்டுக்களாக வேக நடை, நீர்நிரப்புதல், பலூன் ஊதி உடைத்தல், கிடுகு பின்னுதல், சங்கீதக் கதிரை போன்ற விளையாட்டுக்கள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3-134)


**PHARMACIST (EXTERNAL) EXAMINATION & CERTIFICATE IN PHARMACY**

G.C.E.A/L விஞ்ஞான பாடத்தில் ஒரே தடவையில் இரசாயனவியல் (Chemistry) உட்பட மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்கள் மருந்தாளர் வெளிவாரிப் பரீட்சைக்குப் பதிவு செய்யலாம். ஏற்கனவே பதிவு செய்தவர்களுக்கு Feb /2017 இல் (New Curriculum) பரீட்சை நடைபெறவுள்ளது. இந்தப் பரீட்சைக்கு 2005 ஆம் ஆண்டிற்கு முன்னர் பதிவு செய்த (Old Curriculum) பரீட்சார்த்திகளும் இறுதித் தடவையாகப் பரீட்சை எடுக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதற்கான பயிற்சி வகுப்புக்கள் யாழ்ப்பாணக் கல்லூரியில் கிழமை நாட்களான புதன், வெள்ளிக்கிழமைகளிலும் மற்றும் வார இறுதி நாட்களான சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலையில் நடைபெற்று வருகின்றன.

G.C.E.O/Lபரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான CERTIFICATE IN PHARMACY 6 மாதப் பயிற்சி வகுப்புக்கள் (Sep 2016 - Feb 2017) சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகலில் மருந்தகங்களில் பணியாற்றும் உதவியாளர்களுக்கும் (Pharmacy Assistant) மருத்துவப் பிரதிநிதிகளுக்கும் (Medical Representative) நடைபெற்று வருகின்றது. 6 மாதப் பயிற்சியின் பின்னர் சான்றிதழ் வழங்கப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு:
மருந்தாளர் பரீட்சை இணைப்பாளர்,
யாழ்ப்பாணக் கல்லூரி, (வெளிவாரிப்பட்டப் படிப்பு)
464, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.NO: 077 625 6292



அன்பு வாசகர்களே!
உங்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்

நீங்கள் அறிந்த
◆செய்திகள்
◆புகைப்படங்கள்
◆நிகழ்வுகள்
◆பேசும் படங்கள்

போன்றவற்றை வலம்புரியில் வெளிவரச் செய்வதற்கு உங்கள் கைத்தொலைபேசியில் உள்ள VIBER செயலி மூலம் தகவல்களை இலகுவாக பரிமாறிக் கொள்ளுங்கள்.

VIBER செயலி இல
076 636 3378

Viber



இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 3<br>கி.பா: 14.25 செவ் 7இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:BA அபிவிருத்தி உத்தியோகத்தர் (அரச)<br>எதிர்பார்ப்பு: ஆசிரியர் கூடிய விருப்பம்<br>தொ.இ: B/5142 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 3<br>கி.பா: 25.25<br>உயரம்: 4'<br>தகைமை/தொழில்:A/L தனியார் வைத்தியசாலை Nurse<br>எதிர்பார்ப்பு: அரச தொழில், உள்நாடு/வெளிநாடு<br>தொ.இ: G/2141 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 2<br>கி.பா: 42 செவ் 2இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:DBF,CBF Bank stals Assistant<br>தொ.இ: B/5147 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 4<br>கி.பா: 25<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:Cima 3rd Level<br>எதிர்பார்ப்பு: விவாகரத்துப் பெற்றுள்ளார்<br>தொ.இ: G/2147 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 2<br>கி.பா: 41.5 செவ் 8இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:Bsc பொறியியலாளர் (அவுஸ்திரேலியா PR)<br>எதிர்பார்ப்பு: விஞ்ஞான பட்டதாரி<br>தொ.இ: B/5148 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 3<br>கி.பா: 58<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:0/L<br>எதிர்பார்ப்பு: சொந்த வியாபாரம்/ வெளிநாடு விருப்பம்<br>தொ.இ: G/2150 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 3<br>கி.பா: 4.75 செவ் 2இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: பிராந்திய முகாமையாளர்<br>தொ.இ: B/5149 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 1<br>கி.பா: 31 செவ் 12 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில் A/L (Student visa) UK<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/2153 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai jaffna@gmail.com
021 720 1005,021 221 5434

# பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு முதல்கட்டமாக தலா 25 ஆயிரம் ரூபா வழங்க நடவடிக்கை

## வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு

கிளிநொச்சி பொதுச்சந்தையில் ஏற்பட்ட தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு முதற்கட்டமாக தலா 25 ஆயிரம் ரூபா வழங்குவதற்கு மீள் குடியேற்ற அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார். இது தொடர்பில் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி பொதுச் சந்தையில் ஏற்பட்ட தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களை நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணிக்கு கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபை மண்டபத்தில் சந்தித்துக் கலந்துரை யாடியதுடன் பாதிக்கப்பட்ட கடைத் தொகுதியையும் சென்று பார்வையிட்டுள்ளார்.

இந்தச்சந்திப்பின் போது கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ந.பிரபாகரன்,கரைச்சிப் பிரதேச சபையின் செயலாளர் எஸ்.கம சநாதன்,முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே , மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளரை தொலைபேசியில் தொடர்பு கொண்டதாகவும் இதன்போது அமைச்சின் செயலாளர் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு முதற்கட்டமாக தலா 25 ஆயிரம் ரூபா வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்திருக்கின்றார்.

இதேவேளை வடக்கு மாகாண சபையினால் 45 தற்காலிக கடைகளை அமைப்பதற்கு ஒன்பது மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு இருப்பதாகவும் தெரிவித்த வடக்கு மாகாண ஆளுநர் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களின் வங்கிக் கடைகளை ஒரு வருட காலத்திற்கு நிறுத்தி வைப்பதற்கு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் பொதுச்சந்தை வியாபாரிகளை பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் சந்தித்து கலந்துரையாடினார்.நேற்று 10 மணியளவில் குறித்த பகுதிக்கு விஜயம் செய்த பாராளுமன்ற உறுப்பினர், பாதிக்கப்பட்ட பிரதேசத்தினை பார்வையிட்டதுடன், பாதிக்கப்பட்டவர்களின் குறைகளையும் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் பாராளுமன்ற உறுப்பினரிடம் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்தனர்.

தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர்,

100 மில்லியன் ரூபா செலவில் புதிதாக கட்டடம் அமைப்பது தொடர்பில் உறுதியான நிலைமை காணப்படுவது தொடர்பில் உறுதிப்படுத்தி தருமாறு மக்கள் கோரியதாகவும் அடுத்த வருட நிதி ஒதுக்கீட்டில் குறித்த நிதியில் புதிய கட்டடம் அமைப்பது தொடர்பில் ஜனா திபதியிடம் இருந்து உறுதியை பெற்றுத் தருமாறு கோரியதாகவும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் காலங்கள் பண்டிகை காலங்களாகையால் வர்த்தகர்கள் வியாபாரம் மேற்கொள்வதற்கு அரச வங்கிகள் ஊடாக இலகு கடன் முறை ஒன்றினை பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடு செய்து தருமாறும் மக்கள் கோரியதாகவும் அவர் தெரிவித்தார். குறித்த விடயம் தொடர்பில் ஜனாதிபதியிடம் பேசி நல்லதொரு பதிலை வழங்க உள்ளதாகவும் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தீயணைப்பு படை அவசியமாக தேவைப்படுவதாகவும், கட்டடங்கள் நெருங்கி காணப்படுவதால் அது இன்றி அமையாத ஒன்றாக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இது தொடர்பில் அமைச்சருடன் பேசி தற்காலிகமான தீர்வு ஒன்றை பெற்றுக்கொடுக்க உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதன்போது குறித்த பகுதியில் கரைச்சி பிரதேச செயலாளர் கோ.நாகேஷ்வர் மற்றும் கரைச்சி பிரதேச சபை செயலாளர் கம்சநாதன் ஆகியோரும வருகை தந்திருந்தமை குறிபிடத்தக்கதாகும். (2-5-281)





## தேங்காய் மட்டைகளை தாட்டல் செயல்முறை

தென்னைப்பயிர் செய்கைச்சபையினால் அரை ஏக்கரும் அதற்கு மேற்பட்ட தென்னந்தோட்ட விஸ்தீரணத்தில் காய்க்கும் தென்னை மரங்களுக்கு இடையில் 8 அடி நீளம் 4 அடி அகலம் 3 அடி ஆழமுள்ள குழிகளை தென்னையின் 6அடி தூரம் தள்ளி வெட்டி அதற்குள் 350 தேங்காய் மடடைகளைத் தாட்டல் செயல முறை செய்தால் ஏக்கருக்கு 15000 ரூபா மானியப்பணம் வழங்கப்படும். இத்திட்டத்தில் இணைய விரும்புவர்கள் கிளிநொச்சி கமநல சேவை நிலையத்தில் அமைந்துள்ள தென்னைப் பயிர்ச்செய்கை சபையுடன் புதன்கிழமைகளில் தொடர்பு கொள்ளுமாறு கிளிநொச்சி தெனனை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ.சத்தியேந்திரன் அறிவித்துள்ளார்.(2-254)

## மாந்தை கிழக்கில் 914 வீடுகள் அமைக்கப்பட வேண்டிய தேவை

முல்லைத்தீவு மாந்தை கிழக்கில் உள்ள பதினைந்து கிராம அலுவலர் பிரிவில் 2 ஆயிரத்து 32 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 396 பேர் மீளக்குடியமர்ந்துள்ளதாக கடந்த 26 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்று முடிந்த மாந்தைகிழக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்காக ஆயிரத்து 570 நிரந்தர வீடுகள் இதுவரையில் அமைக்கப்பட்டுள்ளன. இன்னும் 914 வீடுகள் அமைகக்கப்பட வேண்டியுள்ளன. இதனைவிட 455 வீடுகள் பகுதி திருத்தப்பட்டுள்ளதுடன், மேலும் 63 வீடுகள் திருத்திக் கொடுக்க வேண்டியுள்ளது. 2ஆயிரத்து 334 குடும்பங்களுக்கு மலசலகூட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதுடன், இன்னமும் 50 குடும்பங்களுக்கு தேவையாகவுள்ளது. மேலும், 44 தனிப்பட்ட கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளதுடன், மேலும் 815 கிணறுகள் அமைக்க வேண்டியுள்ளது. பிரதேச செயலரால் இந்த விபரங்கள் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-5-281)

## தூக்கில் தொங்கிய நிலையில் யுவதி ஒருவர் சடலமாக மீட்பு

(திருவையாறு)

இளம்யுவதி ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 9 மணியளவில் முல்லைத்தீவு இந்துபுரம் முறிகண்டிப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

இந்துபுரம் முறிகண்டிப் பகுதியில் யுவதி ஒருவர் வீட்டின் அறைக்கதவை பூட்டிவிட்டு தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவ்வேளை அறையினுள் சத்தம் கேட்ட நிலையில் வீட்டில் இருந்தவர்கள் கதவை உடைத்து உட்சென்றபோது யுவதி தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். (2-5-273)




## "மூத்த பிரஜைகள் விழா"

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கம் நடத்தும் மூத்த பிரஜைகள் விழா எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முல்லைத்தீவு வள்ளுவர்புரத்தில் யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் தலைவரும் சட்டத்தரணியுமான எ.எஸ்.அற்புதராஜ் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் சி.எ.மோகன்வாஸ்.சிறப்பு விருந்தினராக புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரதேச செயலாளர் எஸ்.பிரணவநாதன்,கௌரவ விருந்தினராக கோம்பாவில் கிராம சேவையாளர் கே.தமிழ்ச்செல்வன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் பார்வையற்ற மூத்த பிரஜைகள் கௌரவிப்பு, கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறும். (2-5)

## உதவிக்கொடுப்பனவு பெறுவோருக்கான கால அட்டவணை தொடர்பான விபரம்

### துணுக்காய் பிரதேச செயலாளர் அறிவிப்பு

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட 20 கிராமங்களில் வாழ்கின்ற மக்களில் நலிவுற்ற மக்களுக்கு சமூக சேவைகள் அமைச்சு மற்றும் சமூக சேவைகள் திணைக்களம் ஆகியவற்றினூடாகவும் ஏனைய வகையிலும் உதவித்தொகைகளை பெறுவோருக்கு அவை வழங்கப்படும் கால அட்டவணை தொடர்பான விபரத்தை துணுக்காய் பிரதேச செயலாளர் இந்திரராஜா பிரதாபன் அறிவித்துள்ளார்.இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

ஒவ்வொரு மாதமும் உதவிக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.இதற்கமைய பொதுமக்கள் தமக்கான கொடுப்பனவுகளை வழமையாக தாம் பெறுகின்ற இடங்களுக்குச் சென்று பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் பொதுசன மாதாந்த உதவித் தொகை ஒவ்வொரு மாதமும் 4ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரையும் முதியோர் கொடுப்பனவு 15ஆம் திகதி தொடக்கம் 21ஆம் திகதி வரைக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கான கொடுப்பனவு ஒவ்வொரு மாதமும் 10ஆம் திகதி தொடக்கம் 20ஆம் திகதி வரையும் வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-5-15)

## யுத்த சூழ்நிலையில் உயிர்நீத்த மாணவர்களின் நினைவாக ஒக்டோபர் 1 இல் இரத்ததான முகாம்

(மல்லாவி)

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டும் நாட்டில் இடம்பெற்ற யுத்த சூழ்நிலையில் உயிர்நீத்த மாணவர்களது நினைவாக "உணர்வுள்ளவர்கள் வாருங்கள் உறவுகளுக்கு உயிர்தாருங்கள்" எனும் தொனிப்பொருளில் மாபெரும் இரத்ததான முகாமொன்றை கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் 2015ஆம் ஆண்டுக்கான உயர்தர பிரிவு பழையமாணவர்கள் ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்த இரத்ததானமுகாம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9மணி தொடக்கம் பிற்பகல் 4மணிவரை ஏ-9 வீதியிலுள்ள கிளிநொச்சி பழைய வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவர் சமுதாயத்தினால் 3ஆவது வருடமாக பல்வேறு தரப்பினரின் ஆதரவுடன் இம்முறை முன்னெடுக்கப்படுகின்றது.

ஏ-9 வீதியில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை அமைந்திருப்பதால் விபத்துக்குள்ளாகும் மாவட்ட மக்கள் உட்பட ஏ-9 வீதியில் வாகனங்களில் பயணித்து விபத்துக்குள்ளாகும் பயணிகளும் குறித்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு உயிர்கள் காப்பாற்றப்படுகின்றன.

ஆயினும் சில சந்தர்ப்பங்களில் விபத்துக்குள்ளானவர் குருதி இழப்பினால் உயிர் இழந்த சம்பவங்களும் ஏற்பட்டுள்ளன.

எனவே பெறுமதிமிக்க மனித உயிர்களை காக்கும் முகமாக மாபெரும் இரத்ததான முகாம் நடைபெறுவதாக ஒழுங்கமைத்துள்ள மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.(2-5-15)

### முல்லைத்தீவு மாவட்டத்தில் 4 பிரதேச செயலக பிரிவுகளில்

# கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நிரந்தரமாக நியமிக்கப்படவில்லை

## அபிவிருத்தி திட்டங்கள் தொடக்கம் நுண்கடன் திட்டங்கள் வரை முன்னெடுப்பதில் இடர்பாடு - மக்கள் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு மாவட்டத்தின் கீழ் உள்ள 6 பிரதேச செயலக பிரிவுகளில் 4 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு நிரந்தர கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (RDO) இல்லாத நிலை காணப்படுவதாகவும் இதனால் கிராம மட்டத்திலான பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் தொடக்கம் நுண்கடன் திட்டங்கள் வரை செயற்படுத்த முடியாத நிலை காணப்படுவதாகவும் மேற்படி பிரதேச மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

வன்னியில் இடம்பெற்று முடிந்த இறுதிப் போர் நடவடிக்கை காரணமாக முற்றாக சிதைவடைந்துள்ள முல்லைத்தீவு மாவட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கு பல்வேறு தடைகள் காணப்படுகின்றன.

இதில் குறிப்பாக அரச அதிகாரிகளை பொறுத்த மட்டில் துறை சார்ந்த பிரிவுகளுக்கு நிரந்தர உத்தியோகத்தர்கள் பல பிரிவுகளுக்கு நியமிக்கப்படவில்லை.

குறிப்பாக கிராமங்களின் அபிவிருத்தியுடன் தொடர்புடைய கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவில்லை.

இதில் மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான், கரைதுறைப்பற்று, வெலிஓயா ஆகிய 4 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் நிரந்தர கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவில்லை.

மத்திய அரசாங்கம், மாகாண சபை ஆகியவற்றினூடாகவும் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோரினால் கிராம மட்டத்தில் அபிவிருத்திக்காக ஒதுக்கப்படும் நிதியை பயன்படுத்தி முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் அபிவிருத்தி சங்கங்கள் ஆகியவற்றினை மேற்பார்வை செய்வதற்கும் நிரந்தர கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இல்லாததனால் வருட முடிவை நெருங்கிய நிலையிலும் பல வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படாமல் உள்ளன.

தற்போது கிளிநொச்சி மாவட்ட கரைச்சி, பூநகரி ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் கடமையாற்றும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கரைதுறைப்பற்று, ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு ஒரு சில நாட்கள் பதில் கடமையாற்றுவதற்கு வருகை தருகின்றனர்.

மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் கடமையாற்றும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் வாரத்தில் சில நாட்கள் பதில் கடமையாற்றுகின்றார்.

வெலி ஓயா பிரதேச செயலாளர் பிரிவுக்கு நிரந்தரமாகவோ அல்லது பதிலாகவோ கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கடமையாற்றுவதில்லை.

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தியோகத்தருக்கான கடமையை இப் பிரதேச செயலக பிரிவில் கடமையாற்றும் ஏனைய முகாமைத்துவ உதவியாளர்கள் தமது கடமைவேலைப் பளுவிற்கு மத்தியிலும் மக்களின் நலனுக்காக கடமையாற்றி வருகின்றனர்.

எனவே முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் இதனைக் கவனத்தில் எடுத்து நடவடிக்கை மேற்கொண்டு உதவ வேண்டும் என பாதிக்கப்பட்ட பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-5-15)






மு/ஸ்ரீசுப்பிரமணியம் வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் கலை இலக்கிய விழாவும் பரிசளிப்பு விழாவும் வித்தியாலய அதிபர் இ.செல்வநாயகம் தலைமையில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி கலையரங்கில் நடைபெற்ற போது...
(படங்கள்:- மல்லாவி செய்தியாளர்)

## பாடசாலை முன்பாகவுள்ள இராணுவ முகாமை அகற்றி காணியை உரிமையாளரிடம் ஒப்படைக்குக

### மாந்தை கிழக்கு பிரதேச செயலக அபிவிருத்திக் குழு கூட்டத்தில் தீர்மானம்

(பனிக்கன்குளம்)

பாலிநகர் மகா வித்தியாலயத்திற்கு முன்பாகவுள்ள இராணுவ முகாமை அகற்றி காணியை காணி உரிமையாளர்களிடம் கையளிப்பது என்று மாந்தை கிழக்கு பிரதேச செயலக அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் தீர்மானம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

மாந்தை கிழக்கு பிரதேச செயலக அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று காலை 9 மணியளவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன் போதே மேற்கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பாலிநகர் மகா வித்தியாலயம் பாலிநகர் ஆரம்ப வித்தியாலயம் ஆகியவற்றுக்கு முன்பாக இராணுவ முகாம் காணப்படுகின்றது.

பாடசாலைக்கு முன்பாகவுள்ள பொதுக்காணி மற்றும் தனியாருக்குச் சொந்தமான காணி இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டு இராணுவமுகாம் அமைக்கப்பட்டுள்ளது.

பாடசாலைக்கு முன்னால் இராணுவமுகாம் காணப்படுவதனால் மாணவர்கள் மாலை நேர வகுப்புக்களுக்கு செல்லமுடியாத சூழல் காணப்படுவதுடன் தற்காலிகமாகவிருந்த இராணுவ முகாம் தற்போது பலப்படுத்தப்பட்டு வருவதாகவும் பாலிநகர் மகாவித்தியாலய அபிவிருத்தி குழு செயலாளர் தெரிவித்தார்.

மாணவர்கள் இயல்பான சூழலில் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு குறித்த இராணுவ முகாம் தடையாகவுள்ளதாக தெரிவித்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முல்லைத்தீவு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா, இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேறி முகாம் உள்ள காணிகள் மீண்டும் உரியவர்களிடம் கையளிக்கப்பட வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இந்நிலையில் மாந்தை கிழக்கு பிரதேச செயலக அபிவிருத்திக்குழு கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பான ஒரு இறுக்கமான தீர்மானத்தை எடுக்குமாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் வேண்டுகோள் விடுத்தார்

மாந்தை கிழக்கு பிரதேச செயலக அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

இதன்போது இதன் விளைவு தொடர்பாக அனைவராலும் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு பின்னர் பாடசாலைக்கு முன்பாகவுள்ள இராணுவ முகாமை அகற்றுவதற்கும், காணியை காணி உரிமையாளர்களிடத்தில் கையளிப்பது என்றும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. (2-5-281)

## நட்டாங்கண்டல் வைத்தியசாலைக்கு நிரந்தரமாக வைத்தியரை நியமியுங்கள்

### மாந்தை கிழக்கு பிரதேச அபிவிருத்திக்குழு கூட்டத்தில் கோரிக்கை

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாந்தைகிழக்கு நட்டாங்கண்டல் வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியரை நியமிக்குமாறு பிரதேச மக்கள். பிரதிநிதிகள் ஆகியோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாந்தை கிழக்கு பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டம், கடந்த 26 ஆம் திகதி நடைபெற்ற போது, இந்தக் கோரிக்கை விடப்பட்டது.

தற்போது பணியிலுள்ள வைத்தியர் எதிர்வரும் ஒக்டோபர் மாதத்துடன் இடமாற்றம் பெற்றுச் செல்லவுள்ளதால், அந்த இடத்துக்கு விரைவில் நிரந்தர வைத்தியரை நியமிக்க வேண்டும்.

மீள்குடியேற்றத்தின் பின்னர் வைத்தியசாலையில் அடிப்படை வசதிகள் உருவாக்கப்படவில்லை. விடுதி வசதிகள் மவைத்தியசாலையில் காணப்படவில்லை.

பாம்புக்கடிக்கு கூட மேலதிக சிகிச்சைக்கு செல்லவேண்டியுள்ளது. போர்க்காலத்தில் கூட இவ் வைத்தியசாலையில் சிறந்த சிகிச்சை வசதிகள் காணப்பட்டதாக கூறினர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த முல்லைத்தீவு மாவட்ட பிரதி சுகாதாரப் பணிப்பாளர் எஸ்.பூங்கோதை, இந்த வைத்தியசாலையின் வளப்பற்றாக்குறை கட்டங்கட்டமாக நிவர்த்தி செய்யப்பட்டு வருகின்றது.

வைத்தியசாலையில் காணப்படுகின்ற வைத்தியர் உட்பட ஆளணிப் பற்றாக்குறை காரணமாகவே வைத்திய சாலையின் இயங்குதிறன் பாதிக்கப்பட்டுள்ளது. ஆளணிகள் பற்றாக்குறை நீங்கும்போது தான் வைத்தியசாலை சிறப்பாக இயங்கும்.

ஆனாலும், மக்களுக்கான சிகிச்சைகளும் மேலதிக சிகிச்சைகளுக்கான வசதிகளும் வைத்தியசாலையில் உருவாக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-5-281)

## மனித உரிமைப் பாதுகாவலர்களுக்கான பயிற்சிநெறியும் சான்றிதழ் வழங்கலும்

(பனிக்கன்குளம்)

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான அமைப்பும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா காரியாலயமும் இணைந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் மனித உரிமைப் பாதுகாவலர்களுக்கான விசேட அடிப்படைப் பயிற்சிப்பட்டறையும் பங்குபற்றியவர்களுக்கான சான்றிதழ் வழங்கலும் கடந்த 26 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்க மண்டபத்தில் இடம் பெற்றது.

மூன்று நாட்களைக் கொண்ட இப் பயிற்சி நெறியானது வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இடம் பெற்றதுடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் செப்டெம்பர் 22, 23, 26 ஆகிய தினங்களில் முழு நேர பயிற்சியாக அமைந்ததாகவும் இதன் மூலம் குறித்த மாவட்டங்களினை உள்ளடங்கிய மாவட்ட மட்ட மனித உரிமைப் பாதுகாவலர்களை கொண்ட குழுக்களை நிறுவி எதிர்காலத்தில் மனிதவுரிமை மீறல்களைப் பாதுகாப்பதற்கும் அதற்கெதிராக விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி தொடர்புகளை ஏற்படுத்தி கொடுப்பதே நோக்கமெனவும் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்ட மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் இணைப்பாளராக தற்போது பணியாற்றிக் கொண்டிருக்கும் ரோகித பிரியதரசன தெரிவித்தார்.

இப்பயிற்சியில் முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு துணுக்காய் , கரைதுறைப்பற்று, ஒட்டுசுட்டான் , புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேச செயலகங்களில் பணியாற்றும் தன்னார்வ பணியாளர்கள், இளைஞர்கள் மற்றும் யுவதிகள் அடங்கிய 30 பேர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-5-281)

# அஹிம்சை போராட்டத்திற்கும் ஆயுதவலு இருக்க வேண்டும்

## வடக்கு மாகாண அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**கடந்த கால ஆயுதப் போராட்டத்தின் வலு தற் போதைய எமது அஹிம்சைப் போராட்டத்துக்கு இருக்க வேண்டும். அதற்கு எம் இனத்தவர்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும். அப்போதுதான் எமது உரிமைகளை வென்றெடுத்து தலைநிமிர்ந்து வாழ முடியும் என வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

யாழ்.மாவட்டத்தில் உள்ள புனர்வாழ்வு பெற்ற போராளிகள், யுத்தத்தில் பிள்ளைகளை இழந்த முன்னாள் போராளிகளின் குடும்பங்கள், அரசியல் கைதிகளின் குடும்பங்கள், ஏனைய போராட்டக் குழுக்களில் இருந்து உயிர் நீத்த போராளிகளின் குடும்பங்கள் ஆகியோருக்கான உதவிப் பொருட்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்றைய தினம் யாழ்.ஆனைப்பந்தியில் உள்ள மாகாண கிராம அபிவிருத்தி பணிமனையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் உள்ள முன்னாள்போராளிகள், அரசியல் கைதிகளின் குடும்பங்கள், மாவீரர்களின் குடும்பங்கள், யுத்தத்தால்கணவனை இழந்தவர்கள்போன்றவர்களின் விபரங்கள் சேகரிக்கப்பட்டு அவர்களுக்கான உதவிகளை வழங்கி வருகிறோம்.

இந்த வேலைத்திட்டங்களை நல்லாட்சிக்கு பின்னர் தான் ஆரம்பித்தோம் என்று சிலர் நினைக்கக் கூடும். ஆனால் அதற்கு முன்னரே ஆரம்பித்து செயற்படுத்தி வருகிறோம். உதவித்திட்டங்களைப் பெற்றுக்கொள்வதற்காக இதுவரை 16 ஆயிரம் குடும்பங்கள் விண்ணப்பித்துள்ளன.

எமது இனத்துக்காக தம் உயிர்களை தியாகம் செய்த வெவ்வேறு போராட்டக்குழுக்களின் குடும்பங்களும் இந்த வருடம் விசேட விதமாக உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இன்றைய காலகட்டத்தில் எமது இனத்தின் விடிவுக்காக தமது உயிரைத் தியாகம் செய்வதற்கு யாரும் தயார் இல்லை. எமக்காக உயிரை கொடுத்தவர்களின் குடும்பத்தினர் பல்வேறு துயரத்தின் மத்தியில் வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் உயிருடன் இருந்திருந்தால் தமது குடும்பங்களை பாதுகாத்திருப்பார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## இராணுவத்தின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு புதிய கட்சியாம்



(கொழும்பு)

ஆட்சிக்கு வந்த எந்த அரசாங்கமும் இராணுவத்தின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கவில்லை. எதிர்வரும் தேர்தல்களில் தேசிய இராணுவ கட்சி ஒன்றை உருவாக்கி போட்டியிடவுள்ளோம் என மேஜர் அஜித் பிரசன்னா தெரிவித்தார்.

தாய் நாட்டுக்காக இராணுவத்தினர் அமைப்பு நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் சேவைசெய்யும்இராணுவத்தினரின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஆட்சிக்கு வந்த எந்த அரசாங்கமும் நடவடிக்கை எடுத்ததில்லை.

ஆனால் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர்இராணுவத்தைப் பாதுகாப்பதாகவும் அவர்களுக்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதாகவும் தெரிவித்தே ஆட்சிக்கு வருகின்றனர்.

தற்போது இந்த அரசாங்கத்தில் இராணுவத்தினர் சிறையிலடைக்கப்படுகின்றனர். அண்மையிலும் மன்னாரில் இராணுவ வீரர்கள் சிலர் கைதுசெய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டுள்ளனர்.

அதேபோன்று எக்னெலிகொட வழக்கில் புலனாய்வு துறையைச்சேர்ந்த 9 பேர் கைதுசெய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர்.

கடந்த அரசாங்க காலத்தில் அமைச்சராக இருந்த மேர்வின் சில்வாவின் மகன் மாலக் சில்வா இராணுவ வீரர் ஒருவர் மீது தாக்குதல் மேற்கொண்டார்.

அப்போது இன்று இராணுவத்தினருக்காக கூக்குரல் இடும் உதய கம்மன்பில, விமல் வீரவன்ச, பந்துல குணவர்த்தன போன்றவர்கள் இதற்காக வாய்திறக்கவில்லை.

தற்போது பந்துல குணவர்த்தன இராணுவ வீரர் ஒருவரை பிணையில் எடுப்பதற்காக 20 இலட்சம் ரூபா பணம் சேகரித்துள்ளார். அதனை நாங்கள் வரவேற்கின்றோம்.

ஆனால்புலனாய்வுத்துறையைச் சேர்ந்த இராணுவ வீரர்கள் சிறையில் இருக்கும் போது நலன் விசாரிப்பதற்கு கூட இவர்கள் செல்லவில்லை. அத்துடன் அவர்களில் 4பேர் அண்மையில் பிணையில் விடுவிக்கப்படும்போது கூட்டு எதிர்க்கட்சியைச்சேர்ந்த ஒருவர் மாத்திரமே நீதிமன்றத்துக்கு வந்திருந்தார்.

ஆனால் நாமல் ராஜபக்ஷ சிறையிலடைக்கப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்படும் போது கூட்டு எதிர்க்கட்சியினர் பாரியளவில் மக்களை ஒன்றிணைத்துக்கொண்டு நீதிமன்ற வளாகத்துக்கு வந்திருந்தனர்.

கூட்டு எதிக்கட்சியில் இருக்கும் விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில போன்றவர்கள் இராணுவ வீரர்கள் தொடர்பில் மேடைகளில் பேசுவதெல்லாம் அவர்களின் சுய அரசியல்நோக்கத்திற்காகவேயன்றி இராணுவத்தின் மீது கொண்ட மரியாதைக்கல்ல.

எனவே இராணுவ வீரர்களின் நலநோம்புக்காகவும் அவர்களின் உரிமைகளை பாதுகாக்கவும் தேசிய இராணுவ கட்சி என்ற பெயரில் கட்சியை அமைத்து இராணுவ குடும்பத்தாரை அதில் இணைத்துக்கொள்ளவுள்ளோம்.

அத்துடன் இந்த கட்சியை அமைக்கவிடாமல் கூட்டு எதிர்க்கட்சி என்னை தடுத்து வருகின்றது. அதற்காக நான் ஒருபோதும்பின்வாங்கப்போவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## நிதி சேகரிப்பவர்கள் இடையே முரண்பாடு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் ஒருவரின் குடும்பத்திற்கு 20 இலட்சம் ரூபா இழப்பீடாக வழங்க வேண்டும் என முன்னாள் மேஜர் விமல் விக்கிரமவிற்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில், ஓய்வு பெற்ற மேஜர் விமல் விக்கிரமவிற்காக நிதி சேகரிக்கும் நடவடிக்கையில் தாய் நாட்டுக்காக இராணுவத்தினர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன உள்ளிட்டவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

எனினும், நிதி சேகரிப்பில் ஈடுபட்டுள்ள தரப்பினர்களுக்கு இடையே கடும் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் தாய் நாட்டுக்காக இராணுவத்தினர் அமைப்பின் ஏற்பாட்டாளர் சட்டத்தரணி மேஜர் அஜித் பிரசன்ன, பந்துல குணவர்தனவிற்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தார்.தாம் ஆரம்பித்த செயற்பாட்டை அவரின் நடவடிக்கையென தெரிவித்து குறித்த நிதியை வழங்குவதற்கு முனைவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை, குறித்த குற்றச்சாட்டு தொடர்பாக வேறு ஒரு தினத்தில் கருத்து தெரிவிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## வரட்சி ஏற்பட்டாலும் கூட மின்சாரம் தடைப்படாது

நாட்டின் நீர் மின் நிலையங்களை அண்டிய நீர் நிலைகளில் நீர் மட்டம் பாரியளவில் குறைவடைந்துள்ளது. எனினும் மின்சாரத் தடை ஏற்படக்கூடிய சாத்தியம் தற் போதைக்கு இல்லை என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

மேலும், எதிர்வரும் வாரங்களில் மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் வரட்சியான காலநிலை நிலவினால் இதனை எதிர்நோக்கத் தயார் எனவும் குறிப்பிட்டுள்ளது.

நீர் மின் நிலையங்களில் 100 வீத உற்பத்தி காணப்படும் போது செயற்படுத்தாது விடும் டீசல் மின் உற்பத்தி நிலையங்களை செயற்படுத்துவதன் மூலம் ஒட்டுமொத்த இலங்கைக்கும் மின்சாரத்தை விநியோகம் செய்ய முடியும் எனவும் கூறியுள்ளது.

நாட்டின் சில பகுதிகளில் திடீரென மின்சாரம் தடைப் படுவது திட்டமிட்ட மின்தடை அல்ல எனவும்அவை பராமரிப்பு பணிகளுக்காக மின்சாரம் துண்டிக்கப்படும் சந்தர்ப்பங்களாகும் எனவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பொதுவாக இந்த மாதங்களில் வரட்சியான காலநிலை நிலவும் என்ற போதிலும் நவம்பர், டிசெம்பர் மாதங்களில் மழை பெய்யும் என இலங்கை மின் பொறியியலாளர் சங்கத்தின் தலைவர் அதுல வன்னியாராச்சி தெரிவித்தார். ,

இதனால் மின்சாரத் தடை பற்றி அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் வரையில் வரட்சி நீடித்தால் மின்சார விநியோகம் தொடர்பில் சிக்கல்கள் ஏற்படலாம் எனவும் அவர் தெரிவித்தார்.(இ-7-10

# 2017 ஆம் ஆண்டு மார்ச்சுக்குள் எட்கா உடன்படிக்கை கைச்சாத்து

## இந்திய முதலீடு அதிகரிக்கும் என்கிறார் மலிக்

(கொழும்பு)

இலங்கை- இந்தியாவிற்கு இடையிலான பொருளாதார தொழில்நுட்ப கூட்டுறவு உடன்படிக்கையான எட்கா அடுத்து வருட முதல் காலாண்டிற்குள் கைச்சாத்திடப்படுமென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்த உடன்படிக்கை தொடர்பிலான பேச்சுவார்த்தை அடுத்து வருடம் மார்ச் மாதமளவில் நிறைவுபெறும் என்பதோடு, இரு நாடுகளினதும் இணக்கப்பாட்டுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுமென சர்வதேச வர்த்தகம் மற்றும் மூலோபாய அமைச்சர் மலிக் சமரவிக்ரம தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய



வர்த்தக அமைச்சர் நிர்மலா சீத்தாராமனுடனான பேச்சுவார்த்தை பயனுள்ள வகையில் அமைந்திருந்ததாகவும், இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவை மேலும் வலுப்படுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

எட்கா உடன்படிக்கை தொடர்பில் இரு நாடுகளினதும் கரிசனைகள் குறித்து ஆராய்ந்ததன் பின்னரே ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுமெனவும், இதனூடாக 1.2 பில்லியன் மக்களை உள்ளடக்கிய சந்தையை பெற்றுக் கொள்ள முடியுமெனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்தியாவுடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் சில குறைபாடுகள் காணப்படுவதாகவும், இலங்கைப் பாரம்பரிய உற்பத்திகளிலிருந்து விலகி இந்திய சந்தைக்கு எது தேவையோ அதனை உற்பத்தி செய்வது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

எதிர்வரும் நான்கு வருடங்களில், இந்தியா, இலங்கையில் இரண்டு பில்லியன் டொலர்கள் பெறுமதியான முதலீட்டை மேற்கொள்ளுமெனவும், இது தொடர்பிலான உறுதிமொழியை இந்திய வர்த்தக அமைச்சர் வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் மலிக் சமரவிக்ரம மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சமூக வலைத்தளங்கள் மாணவர்களின் கல்வியில் ஏற்படுத்தும் விளைவுகள்




இன்றைய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உலகிலே புதிய பரிமாணமாக, இணையத் தொழில்நுட்பத்தின் அபரிதமான வளர்ச்சியாக சமூக இணையத்தளங்கள் காணப்படுகின்றன. இது இணைய வளர்ச்சிப் பாதையிலே மிகப் பிந்திய தொழில்நுட்பமாகவும் இணையத்தின் இரண்டாவது பதிப்பாகவும் (Web 2.0) விளங்குவதோடு இன்று மனித இனத்தின் சிந்தனைப் போக்கை மாற்றி அமைப்பதில் ஒரு முன்னோக்கிய பாய்ச்சலை ஏற்படுத்துவதில் இச் சமூக இணையத் தளங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

பொதுத் தளத்திலே மக்களை இணைக்கும் நோக்கில் தொடங்கப்பட்ட இச் சமூக வலைத்தளங்கள் அனுபவப் பகிர்வு, பொழுது போக்கு, கல்வி, அரட்டை, கருத்துப் பரிமாற்றம், ஒத்த கருத்துடையவர்களை ஒன்றிணைத்தல் என்பவற்றையும் தாண்டி தேர்தல் பிரசாரம், நீதிக்கான போராட்டக்களம் என பன்முகத் தன்மையிலே இயங்கிவருகின்றது.

இத் தளங்கள் சமூக அளவிலும், தனிநபர் உறவாடல் நிலையிலும் இருந்த அடிப்படைப் பண்புகளை அடியோடு மாற்றி இருக்கின்றது. தனிமனித இருப்பு, அடையாளம், சமூக உறவாடல், பண்பாட்டு விழுமியங்கள், கல்வி, அரசியல் பரம்பல், கருத்துருவாக்கம் என அனைத்து நிலைகளிலும் இதன் பங்களிப்பு காணப்படுகின்றது.

சமூக வலைத்தளங்களானது இன்று வாழ்வோடு ஒன்றிணைந்ததாகவும், தவிர்க்கப்பட முடியாத ஒன்றாகவும் மாற்றமடைந்திருக்கின்றது. மாஸ்லோவின் தேவைக் கூம்பின் (Maslow's Needs of Hierarchy) அடிப்படையிலே நோக்குகின்ற போது இவை உயர் மட்டத்திலே மிக மதிப்புமிக்க தேவையாக உணரப்பட்டு இருக்கின்றது.

இச் சமூக வலைத்தளங்கள் எழுத்து (Text), காட்சி (Visual), பல்லூடகம் (Multi Media) என பல்வேறு வடிவங்களில் மக்களை இணைக்கும் இணைப்புப் புள்ளியாக உள்ளன. Face Book, Twitter, Google+, You Tube, Linked In, My Space, Orkut, Webo, Wiki என நீளும் சமூக வலைத் தளங்கள் கோடிக்கணக்கான பயனாளர்களை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது.

இத்தளங்களிலே Face Book ஆனது முன்னணியில் திகழ்கின்றது. அதாவது 1.71 பில்லியன் மாதாந்தப் பாவனையாளர்களையும் (Monthly Active users MAUS), 1.13 பில்லியன் நாளாந்தப் பாவனையாளர்களையும் (Daily Active Users DAUs) கொண்டு உலகின் மிகப் பெரிய மெய்நிகர் நாடாக (The World's Virtual Nation) திகழ்கின்றது.

இத்தகைய சமூக இணையத் தளங்களின் அதிகரித்த பாவனைக்கு கணனி, கைத்தொலைபேசி, Net Book, Tablet போன்ற தொழில்நுட்ப சாதனங்களின் கிடைப்பனவு என்பதோடு அதிகரித்த தொலைபேசிப் பாவனையும் காரணமாக அமைகின்றது. சமூக வலைத்தளங்களில் Face Book பாவனையாளர்களில் 1.57 பில்லியன் தொலைபேசி (Mobile Active Users-MOUs) ஊடான பாவனையாளர்கள் ஆவர். (FB Newsroom 2016)

இவற்றுடன் ADSl, Fiber,-to-the -home (FTTH), wifi, wimax, mobile Brodband போன்ற தொடர்பாடல் தீர்வுகள் அதிக வசதிகளையும் சலுகைகளையும் வழங்கி வருகின்றமை இத்தகைய இணையத்தளங்களின் அதிகரித்த பாவனைக்கு காரணமாக அமைகின்றது.

இச் சமூக வலைத்தளங்கள் மாணவர்களைச் சமூகமயப்படுத்துவதிலே முக்கிய பங்கினைக் கொண்டுள்ளதோடு வேகமாக வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்ப உலகிலே மாணவரின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளிலே குறிப்பாக கட்டிளமைப் பருவப் பிள்ளைகளின் கல்வியில் பாரிய மாற்றங்களை உருவாக்கிவருகின்றது.

சகபாடிக் கலந்துரையாடல் (Peer Interaction), தகவல் பரிமாற்றம் (Infomation Sharing), அறிவு உருவாக்கம் (Knowledge Creation), ஒன்றிணைந்து இயங்குதல் (Collaboration) என்பவற்றின் ஊடாக சமூக அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கான இணையத்தை அடிப்படையாகக் கொண்ட கருவியாகும் (Web Base Tools), அதற்கான அடிப்படைகளையும் கொண்டிருக்கின்றது.

பிள்ளைகள் அவர்களின் உணர்வுகள் ஏனையவர்களுடன் இடைவினையுறவு கொள்கின்ற போதுதான் அறிவாற்றல் விருத்தியானது ஏற்படுகின்றது. மாணவர்களின் சுறுசுறுப்பான பங்குபற்றல் என்பது கற்றலுக்கான முக்கிய வழியாகும். இவற்றிற்கான தளத்தினை இச்சமூக ஊடகங்கள் கொண்டிருக்கின்றன. மாணவர்கள் தமது அறிவு, திறன், மனப்பாங்குகளை விருத்தி செய்வதற்கும் ஏனையவர்களுடன் இணைந்து கற்பதற்குமான வாய்ப்புக்களை இச்சமூக வலைத்தளங்கள் வழங்குகின்றன. அத்துடன் பாரம்பரியமான வகுப்பறைக்கு வெளியிலும் தங்கள் கற்றல் நடவடிக்கைகளை விரிவாக்கி கொள்வதற்குமான வாய்ப்புக்களை இச்சமூக இணையத்தளங்கள் வழங்குகின்றன.

இச்சமூக வலைத்தளங்கள் பல்வேறுபட்ட சாதகமான விளைவுகளோடு பல பாதக விளைவுகளையும் கொண்டிருக்கின்றன. இவை எதிர்மறையான சிந்தனைகளையும், கற்றலைப் பாதிக்கின்ற தன்மைகளையும் கொண்டிருக்கின்றன. அத்தோடு அவர்களைத் திசை திருப்பி தமது கற்றல் செயற்பாடுகளை முடிவுறுத்தவும் காரணமாக அமைகின்றது. அதேநேரம் மாணவர்கள் அதிக நேரம் இணையத்தில் நேரத்தினைச் செலவிடுவதன் காரணமாக தமது சமநிலைத் தன்மையினை இழந்து கல்விச் செயற்பாடுகளில் தடையினை ஏற்படுத்துகின்றது.

இன்று பெரும்பாலான பிள்ளைகள் இணையத்தள ரீதியான கேடுறுத்தல்கள், துஷ்பிரயோகங்கள் (Cyber Bullyinng) மூலமாக பல்வேறு பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர். அநேக பிள்ளைகள் இணையத்தள பாவனையின் மூலம் ஏற்படுகின்ற இத்தகைய பாதிப்புக்கள் பற்றிய விழிப்புணர்வு அற்றவர்களாகவே காணப்படுகின்றனர். இதன்மூலம் பாதிப்புக்களில் சிக்குண்டு கொள்கின்றனர்.

தமது பிரத்தியேகமான தகவல்களை இணையத் தளத்திலே பதிவேற்றம் செய்யும் போது அவை தவறாகப் பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. பிரத்தியேக தகவல்களைத் திருடுதல் (Hacking), கடவுச்சொல் திருட்டு (Phis hing) என்பவற்றின் மூலம் ஒருவரின் இணையப் பக்கங்களை தவறாகப் பயன்படுத்தல், கருத்துக்களை மாற்றுதல் போன்ற பல்வேறு பாதிப்புக்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது.

இவற்றின் மூலம் எல்லோருக்கும் பொதுவான பிரச்சினையாக காணப்படுவதோடு குறிப்பாக கட்டிளமைப் பருவப் பிள்ளைகள் உயர்தரப் பாடசாலை மாணவர்களிடையே பல்வேறுபட்ட விளைவுகளை ஏற்படுத்துவதனைக் காணலாம்.

இன்று வழிகாட்டலும் ஆலோசனை சேவையின் முக்கியமான விடயமாக சமூக இணையத்தளப் பாவனை காணப்படுகின்றது. இந்தியா போன்ற நாடுகளிலே சமூக இணையத்தளங்கள் தொடர்பாக மாணவருக்கு பாடசாலை மட்டத்திலே விழிப்புணர்வினை ஏற்படுத்தல் வேண்டும் என்ற கருத்தானது சமூக ஆர்வலர்களாலும், கல்வியாளர்களாலும் வலுவாக முன்வைக்கப்படுகின்றது. எனவே இத்தகைய நிலைமைகள் எமது கல்விச் சமூகத்திலே எமது பிள்ளைகளிடையே எத்தகைய விளைவுகளை ஏற்படுத்துகின்றது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டிய தேவை இன்று உணரப்பட்டுள்ளது.


கல்வித் தரிசனம்

இச் சமூக வலைத் தளங்கள் பிள்ளைகளிடையே பழக்க வழக்கங்கள், வாழ்க்கை முறைகள், தொடர்பாடல் முறைகள், கற்றல் முறைகள் என்பவற்றிலே பல்வேறுபட்ட மாற்றங்களினை உண்டாக்கி வருகின்றது. அந்த வகையிலே இன்றைய உலகளாவிய போக்கில் இணைந்து கொள்வதற்கும், தொழில்நுட்ப முன்னேற்றங்களை நுகர்வதற்கும் சமூக இணையத்தளங்கள் மிக அவசியமானதாகக் காணப்படுகின்றது. இவற்றை நாம் தேவையற்ற ஒன்றாகக் கருதுகின்ற போது புதிய தொழில்நுட்ப உலகினை விட்டு தூரச் செல்லக் கூடிய நிலையானது தோற்றம் பெறுகின்றது. இன்றைய கல்வி நடவடிக்கைகளிலும் பொது வாழ்விலும் சமூக வலைத் தளங்கள் தவிர்க்கப்பட முடியாததொரு விடயமாக மேலெழுந்துள்ளது. இந்நிலைமைகள் பிள்ளைகளிற்கு பயனுள்ள விதமாக அமைகின்ற அதேவேளை மிகப் பெரிய பாதிப்புக்களையும் கொண்டிருக்கின்றது. இவை பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது என்பதற்காக அவற்றைத் தடை செய்வது என்பது பிள்ளைகளின் முன்னோக்கிய வளர்ச்சியை தடை செய்கின்ற செயற்பாடாகவே அமையும். எனவே இவற்றின் ஊடான நன்மை தீமைகளை விளங்கிக் கொண்டு அவற்றை வினைத்திறனாகப் பயன்படுத்துவதன் மூலமே தொழில்நுட்பம் தருகின்ற நல்ல விடயங்களை ஆரோக்கிய மான முறையிலே பெற்றுக் கொள்ள முடியும்.

மாணவர்களின் கல்வியிலே சமூக வலைத்தளங்கள் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்ற இந்த ஆய்வுக் கட்டுரையானது

❖ சமூக இணையத் தளங்கள் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளில் கொண்டிருக்கின்ற கல்விசார் பயன்களை அறிந்து கொள்ளுதல் மற்றும் இவை கற்றல் நடவடிக்கைகளிற்கான எத்தகைய வளங்களைக் கொண்டிருக்கின்றன என்பதை அறிந்து கொள்ளுதல்.

❖ சமூக வலையத் தளப் பாவனை மூலமாக ஏற்படுகின்ற இணையத்தள ரீதியான துஷ்பிரயோகங்கள் மற்றும் கேடுறுத்தல்கள் தொடர்பாக அறிந்து கொள்ளுதல். இதன் மூலம் பெற்றோர், பிள்ளைகள் மற்றும் சமூகத்தினரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலமாக அத்தகைய பாதிப்புக்களை குறைத்தல்.

❖ சமூக இணையத் தளங்களை கற்றல் நடவடிக்கைகளிலும் பொது வாழ்க்கையிலும் வினைத்திறனாகவும் பயனுள்ள விதத்திலும் பயன்படுத்துவதற்கான தீர்வுகளை முன்வைத்தல் என்பதை நோக்கமாகக் கொண்டு அமைந்திருக்கின்றது.

சமூக வலைத் தளங்கள் தொடர்பான அறிமுகம்

Penuel and Riel என்பவரது கருத்துப்படி "சமூக வலைத் தளங்கள் என்பது ஒரு தொகுதி மக்களிடையே ஏற்படுகின்ற தொடர்பாடலும், அவர்களுக்கிடையே காணப்படுகின்ற உறவு முறைகளுமாகும்" இத்தகைய கருத்து நிலையானது இன்று விரிவடைந்து இணைய ரீதியான. இணையத்தை அடிப்படையாகக் கொண்டு (Vertual Community). சமூகங்கள் அல்லது கற்பனைச் சமூகங்கள் (Imaginated Community) என்ற அளவிலே விரிவடைந்திருக்கின்றது.

இத்தகைய நிலைமையினை சாத்தியமாக்கியது இச் சமூக வலைத்தளங்களே ஆகும். இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியானது உலகை ஓர் கிராமமாக மாற்றி இருக்கின்றது. எல்லைக் கோடுகள் தளர்ந்து மனிதர்களை, உலகை இணைக்கும் இந்த வலைத் தொழில்நுட்பம் இன்னும் எண்ணற்ற மாற்றங்களை உருவாக்கி வருகின்றது. இது இணைய வளர்ச்சிப் பாதையிலே முக்கியமானதோர் பரிமாணமாக விளங்குகின்றது.

இன்று சமூக வலைத் தளங்கள், சமூக ஊடகங்கள் என்ற நிலையிலேயே நோக்கப்படுகின்றது. சமூக வலைத்தளங்கள் என்ற சமூக ஊடக வடிவம் தனிநபர் தொடர்பாடல் என்ற நிலையைத் தாண்டி இதன் பயன்பாடுகள் இவை மட்டும் தான் என்று வரையறுத்துக் கூற முடியாத அளவிற்கு பல்வேறு பயன்களை அளிக்கக்கூடிய ஊடகமாகக் காணப்படுவதோடு கருத்து வெளிப்பாடு, ஜனநாயகக் குரல் எதிரொலிக்கும் மேடை, புதிய சிந்தனைகளை உருவாக்கும் களம் என இவற்றின் பங்களிப்பானது வியாபித்துள்ளது.

"சமூக வலைத்தளங்கள் விஞ்ஞானம், தொழில்நுட்பம் என்பவற்றுடன் புதிய கலை, கலாசாரம் வாழ்க்கை முறைகள், அரசியல், பொருளாதாரம், கல்வி போன்ற பல துறைசார்ந்த அறிவின் தோற்றுவாயாகவும், தொடர்பாடலுக்குரிய புரட்சிகரமான வழியாகவும் காணப்படுகின்றது.

ம.ஜெயராஜசிங்கம்
ஆசிரியர்
யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்

# தீவிரவாதிகளின் புகலிடங்களை பாகிஸ்தான் உடன் மூட வேண்டும்

## பாகிஸ்தானுக்கு அமெரிக்கா எச்சரிக்கை

(வோஷிங்டன்)

**தீவிரவாதிகளுக்கு பாதுகாப்பு அளிக்கும் புகலிடங்களை உடனடியாக மூட வேண்டும் என்று பாகிஸ்தானுக்கு அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.**

காஷ்மீரின் ஊரி இராணுவ முகாமில் கடந்த 18 ஆம் திகதி நடந்த பாகிஸ்தான் ஆதரவு தீவிரவாதிகள் தாக்குதலில் 20 பேர் உயிரிழந்தனர்.

இந்த தாக்குதலில் பாகிஸ்தானுக்கு தொடர்பு இருப்பதாக கூறப்படும் குற்றச்சாட்டை பாகிஸ்தான் மறுத்துள்ளது. ஊரி தாக்குதல் சம்பவத்தை அடுத்து இந்தியா. பாகிஸ்தான் இடையே பதற்றம் நிலவிவருகிறது. இந்த நிலையில் தீவிரவாதிகளுக்கு புகலிடம் அளிக்கும் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக வெள்ளை மாளிகையின் துணை செய்தி தொடர்பாளர் மார்க் டோனர் கூறியதாவது.

தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கையை பாகிஸ்தான் மேற்கொள்ளும் என நம்புகிறோம். மேலும் அவர்கள் தீவிரவாதிகளுக்கு ஆதரவளிப்பதை நிறுத்திக்கொள்ள வேண்டும். குறிப்பாக அயல் நாடுகளை குறிவைத்து தாக்கும் தீவிரவாதிகளுக்கு ஆதரவளிக்கும் பாகிஸ்தான் அந்த செயலை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

தீவிரவாதிகளின் புகலிடங்களை மூட வேண்டும். இரு நாடுகளின் பதற்றத்தை குறைக்க இந்தியா- பாகிஸ்தான் நாடுகள் நேரடி பேச்சு வார்த்தையில் ஈடுபடவேண்டும்.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவுடன் இரு தரப்பு நெருங்கிய உறவு வைத்துள்ளோம். மேலும் அந்நாட்டுடன் வர்த்தக தொடர்பையும் வைத்துள்ளோம். இதே நிலையை பாகிஸ்தானுடனும் தொடர விரும்புகிறோம். மேலும் பாதுகாப்பு ஒத்துழைப்பை இந்தியாவுக்கு வழங்கவும் முன்வந்துள்ளோம். எனவே பாகிஸ்தான் தீவிரவாதிகளுக்கு புகலிடம் தரக்கூடாது. இவ்வாறு டோனர் தெரிவித்துள்ளார். (இ-7)

## ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னர் கியூபாவிற்கு அமெரிக்கத்தூதுவர்



(ஹவானா)

அரை நூற்றாண்டு காலத்துக்கு பிறகு சீரடைந்துவரும் உறவுகளை பலப்படுத்தும் வகையில் கியூபா நாட்டுக்கான அமெரிக்காவின் புதிய தூதுவரை அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா நேற்று நியமித்தார்.

அமெரிக்காவும், அதன் அயல் நாடான கியூபாவும் அரை நூற்றாண்டுக்கும் மேலாக பரம எதிரிகளாக இருந்தன.

1959 ஆம் ஆண்டு அமெரிக்காவின் ஆதரவுடன் அங்கு நடைபெற்றுவந்த ஆட்சியை பிடெல் காஸ்ட்ரோ தலைமையிலான கம்யூனிஸ்ட் புரட்சிப் படை தூக்கியெறிந்த பின்னர் இருநாடுகளுக்கும் இடையில் தீராப்பகை நிலவி வந்தது.

கியூபாவுடன் நட்பு பாராட்டுவது என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா முடிவு செய்து அதற்கான முயற்சிகளையும் செய்தார். 54 ஆண்டுகள் கழித்து அமெரிக்காவில் கியூபா நாட்டு தூதரகம் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் திறக்கப்பட்டது. அதேபோன்று கியூபாவில் அமெரிக்க தூதரகம் திறக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா அண்மையில் கியூபாவுக்கு சென்றார்.

கியூபாவின் முன்னாள் ஜனாதிபதி பிடெல் காஸ்ட்ரோவின் தம்பியான தற்போதைய ஜனாதிபதி ரவுல் காஸ்ட்ரோவை, ஒபாமா சந்தித்தார்.

இந்த சந்திப்பின்போது இருநாட்டு நல்லுறவு உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டன.

இந்த நிலையில், வெளியுறவுத்துறை இராஜதந்திர உறவுகளை மீள்கட்டமைப்பு செய்வதில் தேர்ச்சி பெற்றவரான ஜெப்ரி டிலாரென்ட்டிஸ் என்பவரை அமெரிக்காவின் கியூபாவுக்கான புதிய தூதுவராக ஒபாமா நேற்று நியமித்தார்.

கியூபா தலைநகரான ஹவானாவில் திறக்கப்பட்டுள்ள அமெரிக்க தூதரகத்தில் ஜெப்ரி டிலாரென்ட்டிஸ் தற்போது மூன்றாம்நிலை உயரதிகாரியாக பணியாற்றி வருகிறார்.

இந்த நியமனத்துக்கு அமெரிக்க பாராளுமன்றத்தின் ஒப்புதலை பெறவேண்டியுள்ள நிலையில் ஒபாமாவின் இந்த அறிவிப்பை எதிர்த்து குடியரசு கட்சி எம்.பிக்கள் வாக்களிக்கக்கூடும் எனத் தெரிகிறது. (இ-7)

## சீனாவை தாக்கிய மற்றுமொரு புயல்



சீனாவின் பியூஜியான் மாகாணத்தை மணிக்கு 120 கிலோமீற்றர் வேகத்தில் தாக்கிய அதிவேகப் புயலுக்கு நான்கு பேர் பலியாகியுள்ள நிலையில் அங்கு பாடசாலைகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவை இந்த மாதத்தில் மட்டும்இருபுயல்கள்சூறையாடியுள்ள நிலையில் மணிக்கு சுமார் 120 கிலோமீற்றர் வேகத்தில் சீனாவை நெருங்கி கொண்டிருந்த 'மெகி' புயல் அந்நாட்டின் வடமாகாணமான பியூஜியான் அருகே நேற்று அதிகாலை சுமார் 4.40 மணியளவில் கரையை கடந்தது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இம்மாகாணத்தின் கரையோரப் பகுதிகளில் வசித்துவந்த ஒரு இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் நேற்று முன்தினம் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர். கடலுக்குள் மீன் பிடிக்கச் சென்ற சுமார் 31 ஆயிரம் படகுகள் உடனடியாக கரைக்கு திரும்பி வருமாறு எச்சரிக்கை விடப்பட்டிருந்தது. நேற்று முன்தினம் மாலைமுதல் பியூஜியானில் இருந்து புறப்பட்டு செல்லும் 24 விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில், பலத்த மழையுடன்நேற்று அதிகாலை கரையை கடந்த புயல் உண்டாக்கிய பாதிப்புக்கு 4பேர் பலியானதாகவும்,500 இற்கும் அதிகமானவர்கள் காயம் அடைந்ததாகவும் உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.மழையைத்தொடர்ந்து மாகாணத்தின் பல பகுதிகளில் வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டுள்ளதால் பியூஜியான் எல்லைக்குட்பட்ட பாடசாலை. கல்லூரிகளுக்கு நேற்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## கடுமையான ஊழல் எதிர்ப்புச் சட்டம் தென்கொரியாவில் நடைமுறைக்கு



தென்கொரியாவில் கடுமையான ஊழல் எதிர்ப்பு சட்டமொன்று நேற்று புதன் கிழமை முதல் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

பரவலான ஊழல் செயற்பாடுகளை வேரோடு ஒழிப்பதற்கான மிகப்பெரிய மைல் கல்லாக இச்சட்டம் விளங்கும் என பல தரப்பினரும் இதற்கு பாராட்டு தெரிவித்துள்ளனர்.

இச்சட்டமானது, நான்கு மில்லியன் அரசாங்க ஊழியர்கள் மற்றும் 50 மில்லியன் சனத்தொகை கொண்ட நாட்டிலுள்ள கல்வி நிறுவன ஊழியர்கள் ஆகியோரை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது.

சிறந்த பெறுபேறுகளை வழங்குவதற்காக பெற்றோரிடம் இலஞ்சம் கோரும் ஆசிரியர்கள், சாதகமான விளம்பரங்களை வழங்க பணம் பெறும் ஊடகவியலாளர்கள் மற்றும் அதிகாரத்துவ செயல்முறைகளை வேகப்படுத்துவதற்காக அதிகாரிகளை விலைக்கு வாங்கும் வர்த்தகர்கள் ஆகியோரை இச்சட்டம் இலக்கு வைத்துள்ளது.

இச்சட்டத்தின்படி இவ்வாறானவர்களுக்கு அன்பளிப்புகளை பெற தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கு அபராதம் விதிக்கவும், சிறைத் தண்டனை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஆப்கான் படையினர் இடையே கடும் மோதல்; 12 பேர் பலி!

(குண்டூஸ்)

ஆப்கானிஸ்தான் படையினர் இடையே மோதல் காரணமாக 12 வீரர்கள் பலியானார்கள்

ஆப்கானிஸ்தான் நாட்டில் பல்வேறு பயங்கரவாத அமைப்பினரை ஒடுக்கும் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், குண்டூஸ் நகரின் வட பகுதியில் உள்ள புறக்காவல் நிலையம் ஒன்றில் படையினர் இடையே சகோதர மோதல் ஏற்பட்டுள்ளது.

இந்த மோதலில் கடந்த திங்கட்கிழமை இரவு 12 வீரர்களை கொன்று விட்டு. 2 வீரர்கள் தலிபான் பயங்கரவாத அமைப்பில் சேர்ந்து விட்டனர். இதை மூத்த பொலிஸ் கமாண்டர் அஜிஸ் கமவால். குண்டூஸ் நகரில் நேற்று முன்தினம் உறுதி செய்தார்.

ஆப்கானிஸ்தானில் உள்நாட்டு படைகளிலும் பன்னாட்டு படைகளிலும் சகோதர மோதல் ஒரு பிரச்சினையாக உருவெடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பாகிஸ்தானில் நடைபெறும் சார்க் மாநாட்டை புறக்கணிப்பதாக உறுப்பு நாடுகள் அறிவிப்பு

பிராந்திய ஒற்றுமையும், பயங்கரவாதமும் ஒன்றிணைந்து பயணிக்க முடியாது என்று தெரிவித்து பாகிஸ்தானில் நடக்க உள்ள சார்க் நாடுகள் மாநாட்டை புறக்கணிப்பதாக இந்தியா அறிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்திய வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் விகாஸ் ஸ்வரூப் வெளியிட்டுள்ள அறிக்கையில் எல்லை தாண்டிய பயங்கரவாதம் அதிகரித்திருப்பது குறித்து சார்க் நாடுகளின் தலைமைப் பொறுப்பை வகிக்கும் நேபாளத்திடம் இந்தியா வருத்தம் தெரிவித்துள்ளது.

இதனால், பாகிஸ்தானில் எதிர்வரும் நவம்பரில் நடத்தத்திட்டமிடப்பட்டுள்ள சார்க் நாடுகளின் 19ஆவது மாநாட்டினை வெற்றிகரமாக நடத்தி முடிக்க முடியுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

பிராந்திய ஒத்துழைப்பு உள்ளிட்ட விவகாரங்களில் திடமான நம்பிக்கை கொண்ட நாடு என்ற அடிப்படையில், பயங்கரவாதம் இல்லா நிலையில் மட்டுமே இதை எட்ட முடியும் என்று இந்தியா நம்புகிறது. இதனால் பாகிஸ்தானில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள சார்க் மாநாட்டில் பங்கேற்க இயலாத சூழல் தோன்றியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் நடக்கும் இந்த மாநாட்டில் பங்கேற்பது குறித்து மேலும் சில சார்க் நாடுகளும் கேள்விகளை எழுப்பியுள்ளதாகவும் இந்திய வெளியுறவுத்துறை தரப்பில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை பாகிஸ்தானில் நடக்கும் சார்க் மாநாட்டில் பங்கேற்க மாட்டோம் என இந்தியா வழியில் பங்களாதேஷம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக, நேபாளத்தில் உள்ள சார்க் அமைப்பின் தலைமையகத்திற்கு ஷேக் ஹசீனா தலைமையிலான பங்களாதேஷ் அரசு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது,

சார்க் அமைப்பை உருவாக்கிய உறுப்பு நாடு என்ற வகையில் பிராந்திய கூட்டுறவு தொடர்பான பொறுப்புகளை நிறைவேற்றுவதில் பங்களாதேஷ் உறுதியாக உள்ளது. ஆனால், பரஸ்பர உறவுகளுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் எங்கள் நாட்டின் உள்விவகாரங்களில் ஒருநாட்டின் தலையீடு வளர்ந்துவரும் நிலையில் சார்க் மாநாட்டை வெற்றிகரமாக நடத்தும் சூழல் தற்போது இல்லை என்பதால் இந்த மாநாட்டில் பங்களாதேஷம் பங்கேற்காது.

பங்களாதேஷ் அரசின் சார்பில் அனுப்பப்பட்ட கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியா மற்றும் பங்களாதேஷத்தை தொடர்ந்து பாகிஸ்தானில் நடக்கும் சார்க் மாநாட்டை பூட்டான் அரசும் புறக்கணித்தது.

இஸ்லாமாபாத் நகரில் நடக்கும் சார்க் மாநாட்டில் பங்கேற்க மாட்டோம் என பூட்டான் நாடும் தீர்மானமாக அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக, நேபாளத்தில் உள்ள சார்க் அமைப்பின் தலைமையகத்திற்கு பூட்டான் அரசின் சார்பில் கடிதம் ஒன்றும் அனுப்பப்பட்டுள்ளது. சார்க் அமைப்பின் உறுப்பு நாடு என்ற வகையில் பிராந்திய கூட்டுறவு தொடர்பான பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் நாங்கள் உறுதியாக உள்ளோம்.

ஆனால், தெற்காசிய பிராந்தியத்தில் சமீப காலமாக அதிகரித்துவரும் தீவிரவாத அச்சுறுத்தலால் இஸ்லாமாபாத் நகரில் நடைபெறும் சார்க் மாநாடு வெற்றிகரமாக அமையாது என்பதால் இந்த மாநாட்டில் பங்கேற்பதில்லை என்று தங்கள் நாடு தீர்மானித்துள்ளதாக பூட்டான் அரசின் சார்பில் அனுப்பப்பட்டுள்ள அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# காவிரி விவகாரம் குறித்து டில்லியில் முத்தரப்பு பேச்சு

(டில்லி)

தமிழகம்-கர்நாடகம் இடையேயான காவிரி நீர்ப்பிரச்சினையில் சுமுக தீர்வை எட்டுவதற்காக மத்திய நீர்வளத்துறை அமைச்சர் உமா பாரதி தலைமையில் டில்லியில் இன்று முத்தரப்பு பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது. காவிரியிலிருந்து விநாடிக்கு 6 ஆயிரம் கன அடி வீதம் தமிழகத்திற்கு தண்ணீர் திறந்துவிடும் படி உத்தரவிட்ட உச்சநீதிமன்றம் இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண இருமாநில முதலமைச்சர்களுடன் மத்திய அரசு பேச்சுவார்த்தை நடத்த ஆணையிட்டது. அதன்படி இன்று முற்பகல் 11.30 மணிக்கு டில்லியில் மத்திய நீர்வளத்துறை அமைச்சர் உமா பாரதி தலைமையில் முத்தரப்பு பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது.

இதில் கலந்துகொள்ளும் படி தமிழகம் மற்றும் கர்நாடக முதலமைச்சர்களுக்கு மத்திய நீர்வளத்துறை செயலாளர் சசிசேகர் அழைப்பு அனுப்பியுள்ளார். இருமாநிலத்திலும் நீர்வளத்துறைக்கு பொறுப்பு வகிக்கும் அமைச்சர் மற்றும் அதிகாரிகளையும் கூட்டத்திற்கு அழைத்து வரும் படி அவர் கடிதம் எழுதியுள்ளார். இக்கூட்டத்தில் தமிழகத்தின் சார்பில் பொதுப் பணித்துறை அமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி மற்றும் தலைமை செயலாளர் ராமமோகன்ராவ் உள்ளிட்டோர் பங்கேற்கவுள்ளனர்.

காவிரியில் தமிழகத்திற்கு வழங்க வேண்டிய நீர் முழுவதையும் வழங்க வேண்டும் என்றும் காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்க வேண்டும் என்றும் தமிழக அரசின் சார்பில் வலியுறுத்தப்படவுள்ளது. ஆனால் 2 கோரிக்கையையும் கர்நாடக அரசு எதிர்க்கும் என தெரிகிறது. காவிரி மேற்பார்வைக்குழு மற்றும் உச்சநீதிமன்ற உத்தரவுப்படி தமிழகத்திற்கு தண்ணீர் திறக்க கர்நாடக அரசு மறுத்து வருகிறது. இந்த நிலையில் மத்திய அமைச்சர் முன்னிலையில் இன்று இடம்பெறவுள்ள பேச்சுவார்த்தை முக்கியத்தும் வாய்ந்ததாக கருதப்படுகிறது. பேச்சுவார்த்தையில் எடுக்கப்படும் முடிவுகள் நாளை உச்சநீதிமன்றத்தில் அறிக்கையாக தாக்கல் செய்யப்படவுள்ளது. அதன் அடிப்படையில் உச்ச நீதிமன்றம் அடுத்த உத்தரவை பிறப்பிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அசம்பாவிதங்களைத் தடுப்பதற்கு பெங்களூரில் 144 தடை உத்தரவு



உச்சநீதிமன்ற உத்தரவுப்படி காவிரியிலிருந்து தமிழகத்துக்கு நீர் திறக்காத கர்நாடகாவுக்கு கண்டனம் தெரிவித்த உச்சநீதிமன்றம் நேற்று முதல் 3 நாட்களுக்கு தண்ணீர் திறக்க உத்தரவிட்டுள்ளது.

இந்த நிலையில் கர்நாடக விவசாயிகள் தமிழகத்தை கண்டித்தும், உச்சநீதிமன்ற உத்தரவுக்கு எதிராகவும் மாண்டியாவில் போராட்டம் நடத்தினர்.

காவிரியில் தண்ணீர் திறக்கக்கூடாது என்று வலியுறுத்தி விவசாயிகள் முழக்கங்கள் எழுப்பி வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். பெங்களூரிலும் போராட்டங்கள் நடைபெற தொடங்கியுள்ளன. இதேபோல் கர்நாடக காவிரிப் பாசனப் பகுதிகளில் போராட்டங்கள் தொடர்கின்றன.

இந்த சூழ்நிலையில் கலவரங்கள் ஏதும் நடைபெறாமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பெங்களூரில் நேற்று முதல் 30 ஆம் திகதி நள்ளிரவு வரை 144 தடை உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது. (இ-7)







யாழ். ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலாபூஷணம் சு.செல்லத்துரை மங்கல விளக்கேற்றுவதையும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட ஆசிரியர் திருமதி செ.பிரபாலினி உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# மரண அறிவித்தல்

## துரையப்பா செல்வராசா(கிளி)



ஏழாலை மேற்கு, ஏழாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா செல்வராசா (கிளி) 27.09.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் துரையப்பா-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் அருணாசலம்-அரியமலர் தம்பதியரின் மருமகனும் கலைமகளின் அன்புக்கணவரும் திவ்யா (தரம்10 யா/யூனியன் கல்லூரி, மாணவி) அன்பு தந்தையும் ஜெயராணி, காலஞ்சென்ற தங்கராசா மற்றும் தவேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற அம்பலவாணர் மற்றும் செல்வராணி, ஞானேஸ்வரி மற்றும் ஜெகதீஸ்வரன், காலஞ்சென்ற ஜெயரூபன், ஜெயதரன் (சவுதி), கலைமதி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் மதிவதனி, அகிலாவதி, வரதராஜன் (பிரான்ஸ்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.09.2016 இன்று வியாழக்கிழமை 3 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஏழாலை மேற்கு,
ஏழாலை.

தகவல்:-
குடும்பத்தினர்

# இலங்கையின் கடன் சுமையை குறைக்க நான்கு நாடுகள் உதவி

## நிதியமைச்சர் ரவி தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையின் கடன் சுமையை குறைப்பதற்கு உதவுவதாக உலக நாடுகள் சில உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளதாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, ஜேர்மன், பிரான்ஸ் மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகளே பிரதானமாக நாட்டின் கடன் சுமையை குறைப்பதற்கு உதவியளிப்பது தொடர்பில் உறுதியளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அந்தந்த நாடுகளின் தூதுவர்களுடனான கலந்துரையாடலின்போது இது தொடர்பிலான உறுதிமொழியை அவர்கள் வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

குறித்த நான்கு நாடுகளும் பொருளாதார அபிவிருத்தி மற்றும் உலக சந்தையை வலுப்படுத்துவதை இலக்காக்கொண்டு கடந்த 1961ஆம் ஆண்டு உருவாக்கிய பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு மிகவும் பலம்வாய்ந்த ஒன்றாக காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த அமைப்பின் ஊடான கடன் கொடுக்கல் வாங்கல்களின் போது வட்டி விகிதங்கள் ஒரு பரிமாற்றம் ஊடாகவே மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

நாட்டின் தற்போதைய கடன் தொகை 8,500 பில்லியன் ரூபா எனவும், இதில் 42 வீதம் வெளிநாட்டு கடன் எனவும் குறிப்பிட்ட அவர், இந்த கடனை மீளச் செலுத்துவது தொடர்பில் இந்த கலந்துரையாடலின்போது அவதானம் செலுத்தப்பட்டதாகவும் அமைச்சர் ரவி கருணாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
28
04
1988



மறைவு
29
09
2008

அமரர் ஜீவானந்தன் பிரகாஷ்
திதி-(30 புரட்டாதி )அமாவாசை



எட்டு ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
ஆறிடுமோ உம் நினைவுகள்
கோடி கோடியாய்க் கொட்டிக்கொடுத்தாலும்
உம் நினைவுகள்நெஞ்சை விட்டு அகன்றிடுமோ
உங்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றேன்.

20 A, செட்டித் தெருலேன்,
நல்லூர்.

என்றும் உமது நினைவில்
வாழும் அம்மம்மா
M.சரோஜினிதேவி.

# ஆருடம் கூறும் பறவையினம் இலங்கையில்



(கொழும்பு)

காலநிலை குறித்து ஆருடம் கூறும் ஒருவகை பறவையினம் இலங்கையில் தென்பட்டுள்ளது.

மீன்கள் மற்றும் பூச்சிகளை உணவாக உட்கொள்ளும் இந்த பறவை kadatta எனப்பெயரைக்கொண்டுள்ளது. குறித்த பறவையினை காண்பது அரிதான ஒன்றாகும்.

எனினும், குறித்த பறவையினம் தற்போது கதிரகாமம் பகுதியில் பல்வேறு இடங்களில் காணமுடிவதாக பொது மக்கள் கூறியுள்ளனர்.

வெப்பம் அதிகமான பகுதிகளில் இந்த பறவைகளின் நடமாட்டம் அதிகமாக இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

வெப்பமான காலநிலையின் போது ஏரிகளின் அருகில் இருக்கும் இந்த பறவை பொது இடங்களில் காண்பது ஆருடத்தை கூறுவதற்காக என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரட்சியாக காலநிலை நீடிக்கும், மழைக்கான பருவநிலை மாற்றங்கள் ஏற்பட தாமதம் ஏற்படலாம் என்பதை வெளிப்படுத்தவே குறித்த பறவையினத்தின் வருகை அமைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7-10)

# நவம்பர் நடுப்பகுதியில் வெளியேறுகிறார் சின்ஹா

(கொழும்பு)

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் வை.கே.சின்ஹா எதிர்வரும் நவம்பர் மாத நடுப்பகுதியில் கொழும்பில் இருந்து வெளியேறவுள்ளார்.

இலங்கையில் மூன்றாண்டு பதவிக் காலத்தின் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ள இந்தியத் தூதுவர் வை.கே.சின்ஹா, பிரித்தானியாவுக்கான இந்தியத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான அதிகார பூர்வ அறிவிப்பை இந்திய வெளிவிவகார அமைச்சு நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது.

துறைசார் இராஜதந்திரியான வை.கே.சின்ஹா விரைவில் தனது புதிய பதவியை ஏற்றுக் கொள்வார்.

இதற்காக அவர், எதிர்வரும் நவம்பர் மாத நடுப்பகுதியில் கொழும்பில் இருந்து வெளியேறுவார்.

அதேவேளை, இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவராக தரன்ஜித் சிங் சந்து ஏற்கனவே இந்திய வெளிவிவகார அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)


## புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின்

'புனர்வாழ்வு அதிகார சபை'
நடத்தும்
சுயதொழில் கடன் திட்டத்தின் உற்பத்திப் பொருட்களின்

## கண்காட்சியும் மலிவு விற்பனையும்

இடம்:-சங்கிலியன் தோப்பு, நல்லூர்
காலம்:-30.09.2016-01.10.2016
நேரம்:-மு.ப.9.00-பி.ப.7.00 (5982)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

# பலாலி விமான நிலைய அபிவிருத்திக்கு இந்தியாவிடம் உதவி கோரும் இலங்கை

(கொழும்பு)

**பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்கு இந்திய அரசாங்கத்தின் உதவியை இலங்கை அரசாங்கம் கோரியுள்ளது என அனைத்துலக வர்த்தக மற்றும் மூலோபாய அபிவிருத்தி அமைச்சர் மலிக் சமரவிக்கிரம் தெரிவித்தார்.**



கொழும்பு வந்துள்ள இந்தியாவின் மத்திய வர்த்தக இணை அமைச்சர் நிர்மலா சீத்தாராமனுடன் இணைந்து கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

"இலங்கையில் இந்தியா பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டுள்ளது.

பலாலி விமான நிலைய அபிவிருத்தி தொடர்பாக இலங்கை அமைச்சரவை இன்னும் இரண்டு மூன்று மாதங்களுக்குள்முடிவு ஒன்றை எடுக்கும்" என்றும் அவர் தெரிவித்தார்.

பலாலி விமான நிலையத்தை பிராந்திய விமான நிலையமாக அபிவிருத்தி செய்யும் திட்டம் அரசாங்கத்திடம் இல்லை என்று அண்மையில் பிரதி அமைச்சர் நிரோசன் பெரேரா நாடாளுமன்றத்தில் கூறியிருந்தார்.

அத்துடன், பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பான உடன்பாடு எதுவும் இந்திய நிறுவனத்துடன் செய்து கொள்ளப்படவில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நாடாளுமன்றத்தில் தகவல் வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# இந்திய அமைச்சரின் வருகைக்கு எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டம்



இந்திய மத்திய வர்த்தக இணை அமைச்சர் நிர்மலா சீத்தாராமனின் இலங்கை பயணத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, கொழும்பில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

புறக்கோட்டை புகையிரத நிலையத்தின் முன்பாக, தேசிய சுதந்திர முன்னணி ஏற்பாடு செய்திருந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், மகிந்த ராஜபக்ஷ ஆதரவு கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இந்தியா- இலங்கைக்கு இடையில் பொருளாதார, தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்பாடு (எட்கா) செய்து கொள்ளப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

எட்கா உடன்பாட்டினால், இலங்கைக்கு இந்தியத் தொழிலாளர்கள் படையெடுக்கும் நிலை ஏற்படும் என்றும் இதனால் இலங்கையர்களின் வேலைவாய்ப்பு பறிபோகும் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

எட்கா உடன்பாடு குறித்து அரசதரப்புடன், இந்திய அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் நேற்று முன்தினம் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே, புறக்கோட்டையில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. (இ-7-10)

# தேசிய பாதுகாப்பு குறித்து முக்கிய கலந்துரையாடல்



(கொழும்பு)

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளது தொடர்பாக பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி, அமைச்சுக்களின் செயலர்கள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுடன் நீண்ட கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார்.

இலங்கை பாதுகாப்பு அமைச்சில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இலங்கை எதிர்கொள்ளும் பாதுகாப்பு மற்றும் புதிய சவால்கள் தொடர்பாகவே இந்தக் கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு ஏனைய அமைச்சுக்களின் பங்களிப்பை பெற்றுக் கொள்வது குறித்து இந்த நீண்ட கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் விமானப்படைத் தளபதி மற்றும் முப்படைகளின் அதிகாரிகள், பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள், அமைச்சுக்களின் செயலர்களும் கலந்து கொண்டனர். (இ-7-10)

# இன்று ஒரு தகவல்

பிள்ளைகளை நை நை என்று நைக்கிறீர்களா?

''ஏய் அடி பிச்சுப்புடுவேன்! மரியாதையாக கையைக் கட்டி வாயைப் பொத்திக்கொண்டு மூலையில் போய் உட்காரு!போடு சம்மணம்! ஊம்!''

என்று மிரட்டி உருட்டி உங்கள் இல்லத்துக் குழந்தைகளை வார்த்தைக் கயிறுகளால் கட்டிப்போடுவதுண்டா? இனி வேண்டாம்.

உலகையும் சூழ்நிலைகளையும் ஆண்டவனின் படைப்புக்களையும் அவை புரிந்து கொள்ள வேண்டிய காலத்தில் இந்தக் கெடுதலான காரியத்தைச் செய்ய வேண்டாம். மலர வேண்டிய ஒரு மொட்டை மலரவிடாமல் பிடித்துக்கொண்டிருப்பதாவது?

''ஏய் அங்கே உட்காராதே! அதைப் பார்க்காதே! இதைத் தொடாதே! இப்ப நீ சும்மா இருக்கப் போறியா இல்லையா?'' என்றெல்லாம் மிரட்டப்படும் குழந்தைகளின் எதிர்காலத்தை சம்பந்தப்பட்டவர்கள் ஏனோ எண்ணிப் பார்ப்பதில்லை.

பிள்ளைகள் கேள்வி கேட்கத் தெரியாத நாட்களில் மொழி அதற்கு ஒரு பெரிய தடையாக இருக்கும் நாட்களில் கண்களும் கைகளும் அறிவைச் சேமிக்கும் கருவிகளாக இருக்கின்றன.

குழாயில் எப்படித் தண்ணீர் வருகிறது? எங்கிருந்து வருகிறது? எதனால் வருகிறது? என்கிற கேள்விகள் அதன் அறிவுத் தாகத்தை அதிகமாக்குகின்றன. ஆனால் கேள்வி கேட்கத் தெரியாத அக்குழந்தை தன் ஆர்வத்தை அடக்க முடியாமல் குழாயைப் போய் திருகுகிறது. ஆனால்நாமோ ''இந்தா வந்துட்டேன். குழாயைத்தொடு இனிமே கொன்னுப்புடுவேன்!'' என்கிறோம். அவ்வளவுதான்! அறிவுக்கதவு அங்கே அடைக்கப்படுகிறது.

பிள்ளைகள் கையில் கண்ணாடி டம்ளரை கொடுக்க மாட்டோம். உடைத்துவிடும் என்பது நம் பயம். இது தவறு. கண்ணாடி டம்ளரைக் கையில் தந்து ''உட்கார்ந்து தாம்மா குடிக்கணும். உட்கார்ந்துக்கோ உள்ளங்கையால் கீழே பிடிச்சுக்கோ. இன்னொரு கையால் நடுவில் பிடிச்சுக்கோ!''என்று இளம் வயதிலும் பொருட்களைக் கையாளக் கற்றுத்தர வேண்டும்.

''நீ செய்யாதே! நான் செய்துவிடுறேன்'' என்று எல்லாவற்றையும் நாமே செய்வதும் தவறு. இதனால் அதற்குப் பிறரை நம்பியே காலத்தை ஓட்டும் மனப்பக்குவம் வளர்ந்து விடுகிறது. இது அதன் வாழ்க்கையையே பாதிக்கும் சமாசாரம்.

செய் என்றாலும் செய்யாதே என்றாலும் கூடவே அப்படிச் செய்வதன் காரணத்தையும் விளக்கிவிட வேண்டும். இல்லாவிட்டால் பயனில்லை.

உடைமைக்கும் உடலுக்கும் சேதப்படுத்தாத-மரியாதைக் குறைவற்ற எந்தச் செயலைக் குழந்தைகள் செய்தாலும் அவற்றைக் கண்டிக்கக்கூடாது, கண்டுக்கக்கூடாது. பத்து நிமிடத்திற்கு ஒருமுறை எதையாவது சொல்லி மிரட்டிப்படி இருக்கக்கூடாது.

கொஞ்சம் கொட்டி, கொஞ்சம் உடைத்து, கொஞ்சம் வீணாக்கி, கொஞ்சம் அடிபட்டு வலியை ஏற்றுச் சில பாடங்களைப் பெறவும் அவர்களை அனுமதியுங்கள். அனுபவத்தைவிடச் சிறந்த ஆசிரியன் வேறு யார்?

புரிந்துகொள்வதும் தெரிந்து கொள்வதும் கண்டுபிடிப்பதும் உருவாக்குவதும் நம்மால் ஏன் கெட்டுப்போனதாக இருக்கவேண்டும்?

இனிமேலாவது,

குழந்தைகளை ''அடைகாக்கும்'' வேலையை விட்டுவிடுவோம்!

**லேனா தமிழ்வாணன்**



# சிறுவர் அரங்கம்

## சிங்கம் – அசிங்கம்

...அப்பொழுது அவ் வழியே சிங்கம் வந்தது. சிங்கம் அமைதியாக அவ்வ ழியே அவர்களை கடந்து செல்கையில் புலியும், நரி யும் தாங்கள் இனியாரும் சிங்கத்திற்கு பயப்படமாட் டோம் என்று அதன் காதில் விழுமாறு சற்று சத்தமா கவே சொன்னன.

சிங்கம் அதைக் கேட்டு ஒன்றும் சொல்லாமல் அமைதியாக சென்று விட் டது.

புலியும், நரியும் இப்படி சொல்லியும் சிங்கம் அமைதி யாக சென்றதால் சிங்கம் உண்மையிலேயே தன்னு டைய பலத்தை இழந்து விட்டது என்றும் அது பய ந்து தான் அமைதியாக செல்கிறது என்றும் தங்க ளுக்குள் பேசிக் கொண் டன.

சிங்கத்தை அடிக்கடி புலி, நரி, கரடி, சிறுத்தை, ஓநாய் முதலிய மிருகங்கள் கேலி செய்து வந்தன. சிங்கமும் அமைதியாக அவர்களின் பேச்சை காதில் வாங்காமல் சென்று விடும்.

ஒருநாள் சிங்கம் வேட் டைக்குச் சென்று ஒரு மானைக் கொன்று அதைத் தன்னுடைய வாயில் கவ்



விக் கொண்டு குகையை நோக்கி வந்து கொண்டிருந் தது.

சிங்கம் வழக்கம் போல் குகைக்கு செல்லும் வழியில் நரி, புலி, கரடி, சிறுத்தை, ஓநாய் முதலிய மிருகங்கள் நின்று கொண்டிருந்தன.

சிங்கம் தூரத்தில் இரு ந்தே அவர்களை பார்த்து விட்டபடியால் அமைதியாக நடந்து வந்தது. நரி மற்ற மிருகங்களிடம் தான் சிங் கத்தின் வாயில் கவ்விக் கொண்டிருக்கும் மானை பறித்து வருவதாக கூறி சிங் கம் வரும் வழியில் குறு க்கே சென்று நின்றது.

சிங்கமும் நரியின் அருகே வந்து விட்டது.

நரி சிங்கத்திடம் சிங்கத் தின் வாயில் உள்ள மானை தன்னிடம் கொடுத்து விட்டு திரும்பிப் பார்க்காமல் ஓடி விடுமாறு கூறியது .இல்லா விட்டால் தான் சிங்கத்தை அடித்தே கொன்று விடுவ தாக மிரட்டியது. சிங்கத்தின் வாயில் கவ்விக் கொண்டி ருக்கும் மானை பிடித்து இழுத்தது. சிங்கம் ஏற்க னவே பசியில் வேறு இருந் தது.

தான் கஷ்டப்பட்டு வேட்டை யாடி விட்டு தனக்காக கொண்டு வரும் இரையை மற்றொருவர் அபகரிக்க நினைப்பதால் அது இவ் வளவு நாட்கள் காத்த தன் னுடைய பொறுமையை இழ ந்து விட்டது. கவ்வியிருந்த மானை கீழே வைத்து விட்டு மிகக் கடுமையான கோபத் துடன் நரியை பிடித்து இழு த்து அதை இரண்டே அடி யில் அதனுடைய உடலை இரண்டாக கிழித்து எறிந்து விட்டது.

இவற்றை எல்லாம் மரத் தடியில் நின்று பார்த்துக் கொண்டிருந்த புலி, ஓநாய், கரடி, சிறுத்தை ஆகியோர் அங்கிருந்து நாங்கள் தப் பித்தோம் பிழைத்தோம் என்று ஓடி மறைந்து விட் டன.

சிங்கம் மானை தன்னு டைய வாயில் கவ்வி தன் னுடைய குகையை நோக்கி கம்பீரமாக நடந்து சென்றது. சிங்கம் சொன்னதை தவ றாக எடுத்துக் கொண்ட நரி சிங்கத்திடம் வாலாட்டி தன் னுடைய முடிவைத் தானே தேடிக் கொண்டது.

நரிக்கும் மற்ற மிருகங் களுக்கும் தெரியாமல் போய விட்டது, சிங்கத்தின் வீரமும் பலமும் எப்பொழுதும் அதை விட்டுப் போகாதென்று.

(முற்றும்)

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

09-2016 29

- கிமு 480 - தெமிஸ்டோகில்ஸ் தலைமையிலான கிரேக்கக் கடற்படை பேர்சியப் படையை சலாமிஸ் என்ற இடத்தில் தோற்கடித்தது.
- 1227 - புனித ரோமப் பேரரசன் இரண்டாம் பிரெடெரிக் சிலுவைப் போரில் பங்கு பற்றாமல் போனதை அடுத்து திருத்தந்தை ஒன்பதாம் கிரகரி அவனை மதவிலக்கம் செய்தார்.
- 1567 - பிரான்சில் இரண்டாம் சமயப் போர் ஆரம்பமானது.
- 1833 - மூன்று வயதுள்ள இரண்டாம் இசபெல்லா ஸ்பெயின் அரசியாக முடிசூடினாள்.
- 1848 - ஹங்கேரியப் படையினர் குரொவேசியர்களை பாகொஸ்ட் என்ற இடத்தில் இடம்பெற்ற ஹங்கேரிப் புரட்சிப் போரில் தோற்கடித்தனர்.
- 1850 - இங்கிலாந்திலும் வேல்சிலும் ரோமன் கத்தோலிக்க உயர்சபையை திருத்தந்தை ஒன்பதாம் பயஸ் மீண்டும் அமைத்தார்.
- 1885 - உலகின் முதலாவது மின்சார திராம் வண்டி இங்கிலாந்தில் பிளாக்பூல் நகரில் சேவையை ஆரம்பித்தது.
- 1911 - இத்தாலி ஒட்டோமான் பேராட்சிக்கெதிராகப் போர் தொடுத்தது.
- 1916 - ஜோன் ரொக்பெல்லர் உலகின் முதலாவது கோடீசுவரர் ஆனார்.
- 1918 - முதலாம் உலகப் போர்: பல்கேரியா கூட்டுப் படைகளுடன் அமைதி ஒப்பந்தத்தை ஏற்படுத்தியது.
- 1938 - செக்கோசிலவாக்கியாவின் சுவிட்சிலாந்துப் பகுதியை ஆளும் உரிமையை ஜேர்மனிக்கு வழங்குவதற்கான உடன்படிக்கையில் பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி, மற்றும் இத்தாலி ஆகியன கைச்சாத்திட்டன.
- 1941 - உக்ரேனின் கீவ் நகரில் குறைந்தது 33,771 யூதர்கள் நாசி ஜேர்மனியரினால் கொல்லப்பட்டனர்.
- 1962 - கானடாவின் முதலாவது செய்மதி அலூட் 1 ஏவப்பட்டது.
- 1971 - அரபுக் கூட்டமைப்பில் ஓமான் இணைந்து கொண்டது.
- 1972 - ஜப்பான் மக்கள் சீனக் குடியரசுடனான தூதரக உறவை மீள அமைத்து, சீனக் குடியரசுடனான உறவை முறித்துக் கொண்டது.
- 1991 - எயிட்டியில் இராணுவப் புரட்சி இடம்பெற்றது.
- 1993 - மகாராஷ்டிரா மாநிலத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 10,000 பேர் கொல்லபபட்டனர்.
- 1998 - இலங்கை, பலாலி விமானநிலையத்தில் இருந்து இரத்மலானை நோக்கி 56 பேருடன் புறப்பட்ட லயன் எயார் பயணிகள் விமானம் புறப்பட்டு 10 நிமிடங்களில் காணாமல் போனது.
- 2003 - சூறாவளி ஜுவான் கனடாவின் ஹாலிபாக்ஸ் துறைமுகத்தைத் தாக்கிப் பேரழிவை விளைவித்தது.

பிறப்புக்கள்

- 1901 - என்ரிக்கோ பெர்மி, இத்தாலிய இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் .(இ. 1954)
- 1920 - அரங்க. சீனிவாசன், தமிழகக் கவிஞர், எழுத்தாளர். (இ. 1996)
- 1928 - பிரிஜேஷ் மிஸ்ரா, இந்தியாவின் முதல் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்.
- 1936 - சில்வியோ பெர்லுஸ்கோனி, இத்தாலியப் பிரதமர்.
- 1951 - மிசெல் பாச்செலெட், சிலியின் குடியரசுத் தலைவர்
- 1975 - ஸ்டுவட் கிளார்க், அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்.
- 1988 - கெவின் டுரான்ட், அமெரிக்க கூடைப் பந்து ஆட்டக்காரர்.

இறப்புகள்

- 1969 - சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா, இலங்கையில் இலவசக்கல்வித் திட்டத்தை அறிமுகப்படுத்தியவர். (பி. 1884)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 50 | 30 | 40 | 50 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 95 | 120 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 100 | 60 | 50 | 60 | 70 | 100 | 100 |
| தக்காளி | 80 | 80 | 60 | 80 | 70 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 60 | 65 | 80 | 70 | 80 | 70 |
| கோவா | 80 | 60 | 45 | 100 | 80 | 80 | 80 |
| கரட் | 100 | 100 | 70 | 120 | 100 | 140 | 100 |
| பூசணி | 50 | 20 | 20 | 30 | 40 | 60 | 30 |
| புடோல் | 40 | 40 | 30 | 80 | 50 | 60 | 50 |
| வாழைக்காய் | 100 | 60 | 40 | 80 | 60 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 80 | 100 | 100 | 100 | 90 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 75 | 100 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 120 | 90 | 80 | 160 | 80 | 150 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 60 | 60 | 100 | 80 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | — | 120 | 120 | 120 | 120 |
| பயற்றங்காய் | 100 | 80 | 60 | 80 | 80 | 100 | 100 |
| லீக்ஸ் | 140 | 100 | 80 | 140 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 40 | 40 | 30 | 40 | 40 | 80 | 50 |
| கறிமிளகாய் | 120 | 100 | 80 | 120 | 80 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 120 | 100 | 60 | 120 | 150 | 80 | 100 |
| போஞ்சி | 150 | 200 | 130 | 140 | 160 | 200 | 180 |
| கத்தரித்தம்பிள்ளை | 80 | 20 | 20 | 40 | 50 | 40 | 50 |
| கீரை - 1பிடி | 40 | 10 | 25 | 30 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 400 | 450 | 350 | 400 | 300 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 15-30 | 40 | 25 | 25-35 | 50 |
| இராசவள்ளி | — | — | — | — | — | — | 160 |
| வெங்காயப்பூ | 80 | 120 | — | 120 | — | 160 | 180 |
| முள்ளங்கி | [illegible] | 20 | 25 | 60 | 50 | 80 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 30 | 50 | 40 | 25 |
| வல்லாரை | 15 | 10 | 10 | 10 | 20 | 20 | 15 |
| சுரப்பலா | 50 | 30 | — | — | — | 80 | — |

# இரண்டாம் ஆண்டு நினைவுகளில்
# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

காலமாகிப் போகவில்லை-இவன்
காலத்தை வென்றிந்த ஞாலத்தில்
எம் நெஞ்சில் -உயிர் காவியமாய்
உயிர்த்துள்ளான்






அமரர் **தயாபரன் சிவதர்ஷன்**
(உரிமையாளர்,சிவதயா அச்சகம்)
திதி:சதுர்த்தசி 29.09.2016

தோற்றம்
27
09
1990



மறைவு
23
09
2014

மகனே நீ பிரிந்து
ஈராண்டு போயிற்றாம்
நூறாண்டு போனாலும்
நீ இருப்பாய் எம்முள்ளே

வாழ்வாங்கு வாழவென
வளர்த்திட்டோம் உனை நாங்கள்
விரைவாக இறை உன்னை
அழைத்ததேனோ நாமறியோம்

காலம் விதித்த விதி
கடும் விதிதான் என்றாலும்
ஞாலம் உள்ளவரை
நீ உயிர்ப்பாய் எம்முள்ளே

சிவதர்ஷா உன் ஆன்மா
இறைநிழலில் இளைப்பாறும்
தவமிருப்போம் நாம் உனக்காய்
தளராத மனதோடு

என் உயிர்த்திருக்கும் உன் நினைவுகளுடன்
அப்பா,அம்மா,தம்பிமார்– யதுர்ஷன், குகதர்ஷன்

தயா அச்சகம் , 575,கே.கே.எஸ் வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

(5660)

தயா வெளியீடு,வெற்றி இலக்கு,
077 396 5214.

---


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 856

Search for people, places and things · Nagendram · Home

### விதுஷன்

காதலி:பைக்ல யாரு
கூட போன?
காதலன்:-தங்கச்சிடி
காதலி:-அப்புறம் எதுக்கு
சோல போட்டு அவ
முகத்த கவர்
பண்ணி இருந்தா?
காதலன்:- அது உன்னோட
தங்கச்சிடி

### ரோஜா




### கம்சனா



"அழகு என் கூடவே
பிறந்தது..."

"நானும் அதைத்தான்
சொல்றேன்... உன்னைவிட
உன் தங்கைதான் அழகு.."

Jayant Prabhakar

### மதுரா

கடலில் இருக்கும் அத்தனை நீரும்
ஒன்று சேர்ந்தால் கூட ஒரு கப்பலை
மூழ்கடிக்க முடியாது - கப்பலுக்குள்
புகுந்தால் மட்டுமே அது சாத்தியம்.
"வாழ்வின் எந்த பிரச்சினையும்
உங்களை பாதிக்கவே முடியாது -
நீங்கள் அனுமதித்தால் தவிர"

### சங்கர்




### டிலக்ஷனா

டீச்சர் : இந்தப் பறவையோட
காலைப் பார்த்து இது என்ன
பறவைன்னு கண்டுபிடி
பார்ப்போம்"
பாபு : "தெரியலை"
டீச்சர்: "இது தெரியலியா?
நீயெல்லாம் உருப்படவா போற!!
உன் பேரு என்னடா?"
பாபு : "என் காலைப் பார்த்து
நீங்களே கண்டுபிடிங்க
பார்ப்போம்!!"
டீச்சர் : ?

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# நீண்டகாலப் போருக்குப் பின்னர் கொழும்பின் அமைதிக்கான தேடல்



(நேற்றைய தொடர்ச்சி)

வடக்கு,கிழக்கில் இராணுவத்தால் விடுதிகள், சுற்றுலா மையங்கள், கோல்ப் விளையாட்டு மைதானங்கள் போன்றவற்றை உருவாக்கி அவற்றின் மூலம் வருமானத்தை ஈட்டுகின்றனர். இராணுவ வசமிருந்த மூவாயிரம் ஏக்கர் நிலப்பரப்பு மீளவும் மக்களிடம் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் 7000 ஏக்கர் நிலப்பரப்பானது தற்போதும் இராணுவத்தினர் வசம் உள்ளது. போரால் பாதிக்கப்பட்ட இடங்களில் இராணுவ முகாம்கள் காணப்படுகின்றன.

இராணுவத்தினரின் பிரசன்னம் தற்போது சற்றுக்குறைந் துள்ளதால் வடக்கில் வாழும் மக்கள் கடந்த காலத்தை விட சுதந்திரமாக வாழ்கின்றனர்.

ஐ.நா. அமைதி காத்தல் மற்றும் அனைத்துலக கண்ணிவெடியகற்றல் திட்டங்களுக்கான புதிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. தற்போது 5000 இற்கும் மேற்பட்ட இராணுவம் மற்றும் பொலிஸார் ஐந்து பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளனர். அதாவது மாலி நோக்கி 750 இராணுவ அதிகாரிகள் மற்றும்படையினர் பயணிக்கவுள்ளனர்.

அமெரிக்காவுடனான பாதுகாப்பு ஒத்துழைப்புக்கள் மேற்குலகுடன் இலங்கை உறவை மேம்படுத் துவதற்கான மையமாக உள்ளது. ஜூலை 24 தொடக்கம் ஓகஸ்ட் 23 வரையான காலப்பகுதியில் 13 கரையோர ஆய்வுப் பிரிவு, ஒரு பசுபிக் கட்டளைக்குழு மற்றும் நீர்மூழ்கிக் கப்பலான யுஎஸ்எஸ் பிராங்க் கேபிள் போன்றன இலங்கைக்கு வருகை தந்துள்ளன.

பசுபிக் கட்டளை மற்றும் பிராந்திய இராணுவ வல்லுநர்களால் ஒருவார கால பசுபிக் ஏஞ்சல் நடவடிக்கையானது வடக்கு மாகாணத்தில் இடம்பெற்றது.

மருத்துவ மற்றும் மனிதாபிமான உதவிகளை வழங்குவதே இதன் நோக்காக இருந்தது.

வரலாற்று ரீதியாக நோக்கில், இந்தியாவானது இலங்கையுடன் பாதுகாப்பு உதவி மற்றும் இராணுவப் பயிற்சித் திட்டங்களை மேற்கொண்டு வருகிறது. கிட்டத்தட்ட 1500 வரையான படையினருக்கு பயிற்சிகளை இந்தியா வழங்குகிறது. இலங்கையுடனான பாதுகாப்பு உறவை மேம்படுத்துவதற்காக இலங்கையின் கடற்படைக் கப்பல் கட்டுமானம்



உட்பட இராணுவ ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கும் பலப்படுத்துவதற்கும் இந்தியாவானது பல்வேறு பயிற்சிகளையும் உதவிகளையும் வழங்கி வருகிறது.

பூகோள மூலோபாய ஈர்ப்பிற்கான ஒரு பிராந்திய மையமாக இந்திய மாக்கடல் மாறியுள்ளது. இலங்கை பல்வேறு முக்கிய கடற்பாதைகள் வழியான தொடர்பாடல்களைப் பேணி வருகிறது.

21ஆம் நூற்றாண்டானது இந்திய-பசுபிக் நூற்றாண்டாக உள்ளதால் இலங்கை தனது கேந்திர மையத்தின் நலன்களைப் பெற்றுக் கொள்கிறது என இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் அதுல் கெசாப் தெரிவித்திருந்தார்.

இந்திய மாக்கடல் தொடர்பான கடல் சார் மூலோபாயக் கொள்கையை டில்லி மாற்றிவரும் அதேவேளையில், புலிகளைத் தோற்கடித்த இலங்கை தனது கடற்படையின் ஆளுமையை மேலும் விருத்தி செய்ய வேண்டிய நிலையிலுள்ளது.

2014இல் இரு தடவைகள சீன நீர்மூழ்கிக்கப்பல்கள் இலங்கையின் கரையோரத்தில் தரித்து நின்றமையானது இந்தியா மற்றும் இலங்கை க்கு இடையிலான உறவில் பாரியதொரு விரிசலை ஏற்படுத்தியது.

இந்த நிலையில், இந்தியமாக்கடலில் ஏற்படும் பூகோள சக்தி மாற்றம் தொடர்பாக சிங்கப்பூரில் உரை நிகழ்த்துமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு



இந்திய நிறுவனம் ஒன்று அழைப்பு விடுத்தது.

இந்திய மாக்கடலில் எவ்வித மோதல்களும் ஏற்படாத வகையில் இதற்காக வரையப்பட்டுள்ள சட்ட விதிகளை இலங்கை ஆதரிப்பதாக பிரதமர் தெரிவித்திருந்தார். லக்ஸ்டமன் கதிர்காமரால் தென்னாசியா



தொடர்பாகக் கூறப்பட்ட பிரபலமான வரையறை போன்றே, பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவும் இந்திய மாக்கடல் மீதான இந்தியாவின் எழுச்சியும் தென்னாசியாவின் அதிகாரத்துவத்தையும் கோடிட்டுக் காண்பித்திருந்தார்.

இலங்கையின் காலித்துறை முகத்திற்கும் அம்பாந்தோட்டைத் துறைமுகங்களுக்கும் கீடாக ஒவ்வொரு நாளும் இருநூறு வரையான கப்பல்கள் பயணிக்கின்றன.

2005 - 2007 வரையான காலப்பகுதியில் புலிகள் அமைப்பின் பத்துக் கப்பல்களை மூழ்கடித்த இலங்கை கடற்படையின் தற்போதைய பணியானது மேலும் கடினமாகியுள்ளது.

ஏனெனில் இது தற்போது முக்கிய கடல் வழிகளை மிகவும் விழிப்புடன் கண்காணிக்க வேண்டிய நிலையிலுள்ளது. நவம்பரில் காலியில் இடம்பெறவுள்ள வருடாந்த ஒன்று கூடலானது வன் மற்றும் மென்சக்திகளின் தேவைகளை உள்ளடக்கிய இந்திய மாக்கடல் மீதான அதிகாரத்தைத் தீர்மானிப்பதாக இருக்க முடியும்.

(முற்றும்)

வழிமூலம் - The Pioneer
ஆங்கிலத்தில் - மேஜர் ஜெனரல் அசோக் கே. மேத்தா
மொழியாக்கம் - நித்தியபாரதி

# குரங்குகளை கட்டுப்படுத்துவதற்கு 18கமக்கார அமைப்புகளுக்கு துப்பாக்கிகள் வழங்கி வைப்பு



முல்லைத்தீவு மாவட்டத்தின் 18 கமக்கார அமைப்புக்களுக்கு விவசாய நடவடிக்கையை பாதிக்கும் குரங்குகளை கட்டுப்படுத்தும் நோக்குடன் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவநேசன் துப்பாக்கிளை வழங்கிவைத்தார்.

2016 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து சுமார் 5 இலட்சத்துக்கும் அதிகமான பெறுமதியுடைய 18 துப்பாக்கிகளை 18 கமக்கார அமைப்புக்களிடமும் நேற்று முற்பகல் 11 மணியளவில் முள்ளியவளை கமநலசேவை நிலையத்தில் வைத்து வழங்கிவைத்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் குரங்குகளின் தாக்கம் அதிகரித்து வருவதாகவும் இவற்றை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டங்களில் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வந்த நிலையில் இந்த துப்பாக்கிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதன்போது மன்னாகண்டல், ஆலங்குளம், பழைய முறிகண்டி, பாரதிநகர், சின்னச்சாளம்பன், பெரியகுளம், 5ஆம் கண்டம் காதலியார் சமணாங்குளம், ஒதியமலை, பூதன்வயல், மதவாளசிங்கன் குளம், கிச்சிராபுரம், வற்றாப்பளை, முள்ளியவளை மத்தி, முள்ளியவளை வடக்கு, முள்ளியவளை தெற்கு, உண்ணாப்பிலவு, கணுக்கேணி கிழக்கு, தண்ணிமுறிப்பு உள்ளிட்ட 18 கமக்கார அமைப்புக்களுக்குமே துப்பாக்கிகள் வழங்கிவைக்கப்பட்டன.(2-281)

# எலும்புக்கூடு முழுமையாகவுள்ளது

"லசந்த விக்கிரமதுங்கவின் சடலத்தினது எலும்புக்கூடு, முழுமையாக காணப்படுகின்றது. இதற்குக் காரணம், குறித்த சடலம், பொலித்தீன் உறையொன்றினால் முழுமையாகச் சுற்றிவைக்கப்பட்டிருந்தது.

இதனாலேயே, சடலத்தைத் தோண்டி எடுக்கும் போது அதன் எலும்புக்கூடு முழுமையாக இருந்தது" என சடலம் தோண்டியெடுக்கப்பட்ட இடத்திலிருந்த அரச தரப்பு சட்டத்தரணி சீ.ரணகல தெரிவித்தார்.

சம்பவ தினத்தன்று, தாக்குதலுக்கு உள்ளாகியிருந்த லசந்த விக்கிரமதுங்கவை, சத்திர சிகிச்சைக்கு உட்படுத்திய டாக்டர் மொஹான் சில்வாவின் அறிக்கைக்கும் அவரது மரணத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையின் அறிக்கைக்கு இடையே, பரஸ்பர வேறுபாடு காணப்படுகின்றது.

அதனால்தான், இது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட படுகொலையா? அல்லது வெளிநாடொன்றிலிருந்து தருவிக்கப்பட்ட கூரிய ஆயுதமொன்றினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலினால் ஏற்பட்ட மரணமா? என்பது தொடர்பில் சந்தேகம் எழுந்துள்ளது.

அவ்வாறு, ஆயுதமொன்றினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலாயின், அவ்வாயுதம் தொடர்பில் கண்டறிவது அவசியமாகும்.

இவ்வாறான காரணங்களுக்காகவே, குறித்த சடலத்தை மீண்டும் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# நியமனம் பெற்ற புதிய அதிபர்களுக்கு உரிய பாடசாலை வழங்க அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

அதிபர் சேவை தரம் மூன்றுக்கு புதிதாக நியமனம் பெற்ற அதிபர்களுக்கு உரியபாடசாலைகளை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

எனவே அவர்கள் விரைவில் தமக்கான பாடசாலைகளைப் பொறுப்பேற்கவுள்ளனர். இதேவேளை குறித்த பாடசாலைகளில் தற்போது அதிபர்களாக பதில் கடமையாற்றுபவர்கள் மாகாண மற்றும் தேசியப் பாடசாலைகளில் பிரதி அதிபர்களாக கடமையாற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

கல்வியமைச்சில் நேற்று முன் தினம் மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையிலுள்ள 10 ஆயிரத்து 161 பாட சாலைகளில் 4 ஆயிரத்து 400 பாடசாலைகளில் அதிபர்களுக்கான வெற்றிடம் நிலவியது.

அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்காக உரிய முறையில் போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டது. போட்டிப்பரீட்சைக்கு 21 ஆயிரம் பேர் விண்ணப்பித்திருந்தனர்.

அதில் 19 ஆயிரம் பேர் பரீட்சைக்குத் தோற்றினர். எனவே 3 ஆயிரத்து 901 அதிபர் சேவையின் மூன்றாம் தரத்திற்கு தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான நியமனம் வழங்கப்பட்டது.

எனினும் அவ் அதிபர்களுக்கு பாடசாலை வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டது. ஆகையினால் அது தொடர்பில் கல்வியமைச்சால் அமைச்சரவைக்கு அமைச்சரவைப் பத்திரம் ஒன்று முன்வைக்கப்பட்டது.

எனவே குறித்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி மற்றும்பிரதமரினால்குழுவொன்று அமைக்கப்பட்டு அதன் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கிணங்க அமைச்சரவைக் கூட்டத்தின்போது குறித்த அதிபர்களுக்கு உரிய பாடசாலை வழங்குவதற்கான அனுமதி கிடைக்கப் பெற்றது.

ஆகவே நியமனம் பெற்ற அதிபர்களுக்கு விரைவில் உரிய பாடசாலைகள் வழங்கப்படவுள்ளது.

மேலும் மூன்று வருடங்களுக்கு மேல் பாடசாலைகளில் அதிபர்களாக பதில் கடமையாற்றியவர்களுக்கு மீண்டுமொரு பரீட்சை நடத்தி அதில் தெரிவு செய்யப்படுபவர்களை அதிபர் சேவையின்தரம்மூன்றுக்கு இணைத்துக்கொள்வதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படவுள்ளது.

அத்துடன் புதிய அதிபர்கள்பொறுப்பேற்கும்பாடசாலைகளில் தற்போது பதில் கடமையாற்றுபவர்களை மாகாண மற்றும் தேசியப் பாடசாலைகளில் பிரதி அதிபர்களாக கடமையாற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# 10ஆண்டுகளுக்குப் பின் மோசமான வீழ்ச்சியை சந்தித்துள்ள இலங்கையின் தேயிலை உற்பத்தி

இலங்கையின் தேயிலை உற்பத்தி 10 ஆண்டுகளுக்குப் பின்னர் மோசமான வீழ்ச்சியைச் சந்தித்துள்ளதாக, தேயிலைச் சபையின் தரவுகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஓகஸ்ட் மாதம் தேயிலை உற்பத்தி 23 மில்லியன் கிலோவாக வீழ்ச்சி கண்டது. இது முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், 13 சதவீத வீழ்ச்சியாகும்.

2006ஆம்ஆண்டு ஓகஸ்ட் மாதம் 21.5 மில்லியன் கிலோ தேயிலை உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. அதற்குப் பின்னர், இந்த ஆண்டிலேயே தேயிலை உற்பத்தியில் மோசமான சரிவு ஏற்பட்டுள்ளது.

அதேவேளை, 2016ஆம் ஆண்டின் ஜனவரி தொடக்கம் ஓகஸ்ட் வரையான 8 மாதங்களில், தேயிலை உற்பத்தியில் 27 மில்லியன் கிலோ அல்லது 12 வீத வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்தக் காலப்பகுதியில், 198.6 மில்லியன் கிலோ தேயிலை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை இந்த எட்டு மாதங்களில், ஒரு மாதத்தின் மொத்த தேயிலை உற்பத்தியை நாடு இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# செய்தித்துளிகள்

## நவராத்திரி விழா ஆரம்பம்

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி பீட வழிபாட்டு மன்றத்தின் நவராத்திரி விழாவை முன்னிட்டு நாளை 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை விஜயதசமி அன்று சிறப்பு அபிஷேகம், விசேட பூசை என்பன இடம்பெற்று விழா நிறைவடையவுள்ளது. (இ-3)

## சர்வதேச முதியோர் தினம்

வட பிராந்திய மூத்தோர் அவை இலங்கை முதியோர் சுகவாழ்வுக் கழகம், வடமாகாண ஓய்வூதியர் சங்கங்கள் , யாழ்ப்பாண நீரிழிவுக் கழகம் என்பன ஒன்றிணைந்து நடத்தும் சர்வதேச முதியோர் தினம் நாளை மறுதினம் முதலாம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இல. 161, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள யாழ்.சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் மண்டபத்தில் (யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை) நடைபெறும்.

இந் நிகழ்வில் பிதம விருந்தினராக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் கலந்துகொள்ளவுள்ளார். (இ-3)

## நவராத்திரி விழாவை முன்னிட்டு விசேட நிகழ்வுகளுக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம் இராமகிருஷ்ண மிஷன் நவராத்திரி விழாவை முன்னிட்டு நாளை மறுதினம் முதலாம் திகதி சனிக்கிழமை முதல் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை தினமும் காலை 7 மணி முதல் 10 மணி வரை தேவி மகாத்மியம் பாராயணம், மாலை 5.30 மணி முதல் இரவு 7 மணி வரை பஜனை, ஆராத்தி எனும் நிகழ்வுகளை நடத்தவுள்ளது. (இ-3)

## பல் வைத்தியர் நியமனம்

யாழ். வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச வைத்திய சாலைக்கு புதிதாக பல் வைத்திய அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இம்மாதம் முதலாம் திகதி முதல் பல் வைத்தியர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் பல் வைத்திய சேவை மருதங்கேணி பிரதேச வைத்தியசாலையில் முழுமையாக இடம்பெற்று வருவதாக மருதங்கேணி பிரதேச வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (இ-3-64)

## தேசிய அடையாள அட்டை கண்டெடுப்பு

மரியதாஸ் அன்ரன் அமலதாஸ்( 581952180 V) என்பவரின் அடையாள அட்டையும் திருமதி சற்குணமலர் அமலதாஸ் (595234123V) என்பவரின் அடையாள அட்டையும் யாழ்.பல்கலைக்கழக தாவரவியல் துறையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதை தவறவிட்டவர்கள் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

## யெகோவாவின் சாட்சிகளின் மாநாடு

"கடவுளுக்கு (யெகோவாவுக்கு) உண்மையாக இருங்கள்" எனும்பொருளில் யெகோவாவின் சாட்சிகளின் மூன்று மாநாடு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நாளை 30 ஆம் திகதி, ஒக்டோபர் 1.2 திகதிகளில் வெள்ளி தொடக்கம் ஞாயிறு வரை தினமும் காலை 9.20 இற்கு ஆரம்பமாகி நடைபெறும். இயேசுவைப் போல் கடவுளுக்கு உண்மையாக இருங்கள் மற்றும் கஷ்டங்கள் வந்தாலும் கடவுளுக்கு உண்மையாக இருக்கலாம் போன்ற பொருள்களில் சொற்பொழிவுகளும் 36 வீடியோ படக்காட்சிகளும் 2 திரைப்படங்களும் காண்பிக்கப்படவுள்ளன. நிகழ்ச்சிகள் அனைத்தும் இலவசம். (இ)

## பேஸ்புக் தொடர்பான முறைப்பாடுகள் அதிகரிப்பு

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் பேஸ்புக் தொடர்பில் ஆயிரத்து 589 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக இலங்கை கணனி அவசர நடவடிக்கை பிரிவு தெரிவித்துள்ளது. இவற்றில் போலியான கணக்குகள்தொடர்பிலேயே அதிகளவான முறைப்பாடுகள்கிடைக்கப்பெற்றுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. மேலும், பேஸ்புக் கணக்குகளினுள் அத்துமீறி பிரவேசித்து தகவல்களை மாற்றியமைத்தமை தொடர்பிலும் சில முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இணையத்தளத்தின் ஊடாக இடம்பெற்ற நிதி மோசடிகள் தொடர்பில் 100 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் இலங்கை கணனி அவசர நடவடிக்கைப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (இ-7-10)

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி!

தேங்காய்களை திருடுவதற்காக வந்ததாகக் கூறப்படும், தேங்காய் பறிப்பவர், துப்பாக்கிப் பிரயோகத்தில் பலியான சம்பவமொன்று வெலிவேரிய இம்புல்கொட பகுதியிலுள்ள தென்னந்தோட்டத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். 46 வயதான ஒருவரே இவ்வாறு பலியாகியுள்ளார். தென்னந்தோட்ட காவலாளியால் இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்த பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தனர்.(இ-7-10)

# போராளிகளின் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள்



படங்கள்: பொ.சோபிகா

யாழ். மாவட்டத்தில் உள்ள புனர்வாழ்வு பெற்ற போராளிகள், யுத்தத்தில் பிள்ளைகளை இழந்த முன்னாள் போராளிகளின் குடும்பங்கள், அரசியல் கைதிகளின் குடும்பங்கள், ஏனைய போராட்டக் குழுக்களில் இருந்து உயிர் நீத்த போராளிகளின் குடும்பங்கள் ஆகியோருக்கான உதவிப் பொருட்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்றைய தினம் யாழ். ஆனைப் பந்தியில் உள்ள மாகாண கிராம அபிவிருத்தி பணிமனையில் இடம் பெற்றது.

வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சரின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் திட்டத்தின் கீழ் இந்த வருடம் 25 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் 100 குடும்பங்களைத் தெரிவு செய்து. ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா ஐம்பது ஆயிரம் ரூபாய் வீதம் வாழ்வாதார ஊக்குவிப்பிற்கான உள்ளீடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 100 பயனாளிகளில் முதற்கட்டமாக 45 பயனாளிகளுக்கான, அவர்கள் தெரிவு செய்த வாழ்வாதாரத் திட்டங்களான பசுமாடுகளுக்கான காசோலைகள், ஆடு வளர்ப்புக்கான காசோலைகள், மரவேலை செய்வதற்கான இயந்திர உபகரணங்கள், இரும்பு ஒட்டு வேலைகள் செய்வதற்கான இயந்திர உபகரணங்கள், அலுமினிய வேலைகளுக்கான இயந்திர உபகரணங்கள், கடைகளுக்கான குளிர் சாதனப் பெட்டிகள், வாடகைப பாத்திரங்கள், தோட்டச் செய்கை செய்வதற்கான நீர் இறைக்கும் இயந்திரங்கள், தையல் தொழிலை செய்கின்ற பயனாளிகளுக்கான தையல் இயந்திரங்கள் அவற்றுடன் தொடர்புடைய பொருடகள என வெவ்வேறு வாழ்வாதார உள்ளீடுகள் என்பன வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் மதகுருக்கள், வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன், விவசாய கால்நடைகள் அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களான பா.கஜதீபன் மற்றும் அ.பரஞ்சோதி, வலி. மேற்கு பிரதேச சபையின் முன்னைநாள் உறுப்பினர், கிராம அபிவிருத்தி திணைக்கள மாகாண பணிப்பாளர் ஜே.ஜே.சி.பெலிசியன், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-9)



கரவெட்டி பிரதேச செயலகத்தில் முதியோருக்கான விளையாட்டு நிகழ்வு நடைபெற்றது. அந்நிகழ்வை கரவெட்டி உதவி பிரதேசசெயலாளர் ரஜீவ் , சமுகசேவை உத்தியோகத்தர்கள் நெறிப் படுத்தினார்கள் . இவ் நிகழ்வில் வேக நடை , சங்கீதக்கதிரை மற்றும் பலூன்உடைத்தல் நிகழ்வுகள் நடைபெற்றன. போட்டியில் வெற்றியீட்டிய முதியோர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

படங்கள்:-கரணவாய் செய்தியாளர்

# தமிழ் சினிமா வரலாறு

## ஜெமினிகணேசன் மறைந்தார் 262

மரணம்

22.03.2005 அன்று அதிகாலை 1.15 மணிக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டது. 2 மணி அளவில் அவர் உயிர் பிரிந்தது. மனைவி பாப்ஜி மற்றும் குடும்பத்தினர் அருகில் இருந்தனர்.

அஞ்சலி

பிறகு ஜெமினிகணேசனின் உடல் பொதுமக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டது.

தி.மு.கழகத் தலைவர் கருணாநிதி மனைவி தயாளு அம்மாளுடன் வந்து இறுதி மரியாதை செலுத்தினார்.

முதலமைச்சர் ஜெயலலிதா நேரில் வந்து மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். ஏராளமான நடிகர், நடிகைகளும் அரசியல், திரை உலக பிரமுகர்களும் கண் ணீர் அஞ்சலி செலுத்தினார் கள்.

நாகேசும் மனோரம்மாவும் அஞ்சலி செலுத்தியபோது கதறி அழுதார்கள்.

உடல் தகனம்

ஜெமினிகணேசனின் உடல் ஊர்வலமாக பெசன்ட் நகர் சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. முதலமைச்சர் ஜெயலலிதா உத்தரவின் பேரில் 21 குண்டுகள் முழங்க பொலிஸ் மரியாதையுடன் ஜெமினிகணேசனின் உடல் தகனம் நடைபெற்றது.

ஒரே மகனான சதீஷ் அமெரிக்காவில் இருந்ததால் வரமுடியவில்லை. இதனால் மகள் கமலா செல்வராஜும் ஜெமினிகணேசனின் தம்பி மகனும் இறுதிச் சடங்குகளை நிறைவேற்றினார்கள்.

குடும்பம்

ஜெமினிகணேசன்-பாப்ஜி தம்பதிகளுக்கு 4 மகள்கள்.

(1) ரேவதி சுவாமிநாதன்

(2) கமலா செல்வராஜ் ஜி.ஜி. மருத்துவமனையை நடத்துகிறார். தென்னாட்டில் முதன் முதலாக சோதனைக் குழாய் குழந்தைகளை உருவாக்கியவர்.

(3) நாராயணி

(4) ஜெயலட்சுமி ஸ்ரீதர்ராஜன்

டைரக்டர் ஸ்ரீதர் தயாரித்த நினைவெல்லாம் நித்யா படத்தில் ஜிஜி என்ற பெயரில் நடித்தவர். பிறகு டாக்டருக்கு படித்தார். டைரக்டர் ஸ்ரீதர் ராஜனை மணந்தார்.

ஜெமினிகணேசன்- புஷ்பவல்லி தம்பதிகளுக்கு 2 மகள்கள்.

(1) ரேகா பிரபல இந்தி நடிகை

(2) ராதா சையத்

ஆண் வாரிசு

ஜெமினிகணேசன்- சாவித்திரிக்கு ஒரு மகள், ஒரு மகன்.

(1) விஜயசாமுண்டீஸ்வரி



ஜெமினிகணேசன் உடலுக்கு முதல்-அமைச்சர் ஜெயலலிதா அஞ்சலி செலுத்துகிறார். அருகே கமலா செல்வராஜ்.

(2) சதீஷ் விஜயசாமுண்டீஸ்வரியின் தம்பி. ஜெமினிகணேசனின் ஒரே ஆண் வாரிசு.

ஜெமினிகணேசன், சாவித்திரி தம்பதிகளுக்கு விஜயசாமுண்டீஸ்வரியின் தம்பி ஜெமினிகணேசனின் ஒரு ஆண் வாரிசு.

ஜெமினிகணேசன், சாவித்திரி தம்பதிகளுக்கு விஜயசாமுண்டீஸ்வரி என்ற ஒரு மகளும் சதீஷ் என்ற மகனும் உள்ளனர்.

தங்கள் பெற்றோர் பற்றி அவர்கள் மனந்திறந்து பல தகவல்களைக் கூறினார்கள்.

விஜயா என்கிற விஜயசாமுண்டீஸ்வரி கூறியதாவது,

அப்பாவைப் பிடிக்கும்

ஜெமினிகணேசன், சாவித்திரி பிரபலமான இரண்டு பேருக்குப் பிறந்த குழுந்தைங்க நாங்க. நான் என் தம்பி இரண்டு பேருக்குமே அப்பாவைப் பிடிக்கும்னு சொல்றதைவிட அவர்கிட்ட இருக்கிற பிளஸ் பொயிண்ட்ஸ், மைனஸ் பொயிண்ட்ஸ் இரண்டுமே பிடிக்கும். வாழ்க்கையை வாழ மட்டுமில்லை, தைரியமா சந்திக்கிற சக்தியையும் எங்களுக்குள்ளே உருவாக்கினது அவருடைய இந்த இரு குணாதிசயங்கள் தான்.

மக்களிடையே புகழ் பெற்றவராக அவர் இருந்திருக்கலாம். எங்களைப் பொறுத்தவரை அவர் ஒரு அப்பா. எல்லா அப்பாவையும் போல் நல்லது கெட்டது இரண்டையும் சொல்லிக்கொடுத்தவர்.

(தொடரும்)

தவறு ஒன்றுதான் அரசின் தயவை வேண்டும்.
உண்மைக்கு அது வேண்டியதில்லை.
– தாமஸ் ஜெபர்ஸன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## உங்களோடு ஒத்து ஊதினால்தான் இனவாத நஞ்சை கக்காதிருப்பீரோ!

எழுக தமிழ் பேரணி எவரும் எதிர்பாராத வகையில் மிகப் பெரும் எழுச்சியுடன் நடந்ததால் தென்பகுதிப் பேரினவாதிகள் சீறிப்பாய்ந்து இனவாத நஞ்சைக் கக்கத் தலைப்பட்டுள்ளனர்.

இவர்கள் எல்லாம் மனிதப்பிறவிகளா? அல்லது வன விலங்குப் பிறப்புகளா? என்று நினைக்கும் அளவில் பேரினவாதிகள் சிலர் அநாகரிகமாக நடந்து கொள்வதைக் காணமுடிகிறது.

குறிப்பாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் மீது பேரினவாதிகள் சீறிப்பாய்வதன் காரணம்தான் என்ன? என்பது புரியாமல் உள்ளது.

தமிழ் மக்களின் உரிமைகளை மிக நிதானமாகத் தெரிவிப்பது தவறு என்று பேரினவாதிகள் கருதுகின்றனரா? அல்லது தமிழ் அரசியல் தலைவர்கள் சிலரைப் போல் வடக்கின் முதலமைச்சரும் தங்களோடு ஒட்டி உறவாடி தாங்கள் தருகின்ற உதவிகளைப் பெற்று, தமிழ் மக்களுக்காகக் கதைப்பது போல நடித்து அரசுடன் இணங்கிப்போக வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்களா? என்பது புரியாமலே உள்ளது.

உண்மையில் இந்த நாட்டின் எதிர்க்கட்சித் தலைவராக இருகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் மீது பேரினவாதிகள் இன்றுவரை எந்தக்குறையும் கூறியது கிடையாது.

வரவு செலவுத் திட்டத்தின் போது கூட இரா.சம்பந்தர் அரச தரப்பிற்கு ஆதரவாகச் செயற்பட்டார்.

முன்பு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர் அ.அமிர்தலிங்கம் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது சிறில்மத்தியு என்ற அன்றைய அமைச்சரும், நெவில் பெர்னான்டோ என்ற பாணந்துறை எம்.பியும் அமிர்தலிங்கத்தை படுத்தாப்பாடு படுத்தினர். காலி முகத்திடலில் வைத்து அமிர்தலிங்கத்தைப் பிளக்க வேண்டும் என்று கர்ச்சித்தனர்.

இதற்குக் காரணம் அமிர்தலிங்கம் அவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் மிகத் தெளிவாக – துணிவாக பாராளுமன்றத்தில் உரையாற்றியதுடன், வெளிநாடுகளுக்கும் நிலைமையைத் தெரிவித்ததேயாகும்.

ஆனால் இன்றைய எதிர்க்கட்சித் தலைவருக்கு பேரினவாதிகள் மிகுந்த மதிப்புக் கொடுக்கின்றனர். அதேவேளை வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் எழுக தமிழ்ப் பேரணியின் இறுதியில் ஆற்றிய உரைகண்டு சீறிப்பாய்கின்றனர்.

எனினும் இந்த சீற்றம் குறித்து தமிழ்த் தலைவர்கள் கண்டனம் தெரிவிக்காமல் மௌனமாக இருப்பது ஏன்? என்பதுதான் தெரியவில்லை.

வடக்கின் முதலமைச்சர் எழுக தமிழ்ப் பேரணியில் ஆற்றிய உரையை விட; பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோர் கலந்து கொண்ட மேடைகளில் ஆற்றிய உரைகளே மிகவும் காத்திரமானவை.

மிகத் துணிச்சலோடு ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் சொல்ல வேண்டியதை சொல்லியுள்ளார். அப்போதெல்லாம் பேசாமல் இருந்த பேரினவாதிகள் பேரணிக்குப் பின்பு இத்துணை ஆவேசம் அடைவது எதற்காக? யாருக்கு உதவி செய்வதற்காக? என்ற கேள்விகள் தமிழ் மக்களிடம் எழவே செய்யும்.

எதுவாயினும் யாரையேனும் காப்பாற்றும் நோக்கில் பேரினவாதிகள் கொக்கரிப்பார்களாயின் அது வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கான பேராதரவை தமிழ் மக்களிடம் மென்மேலும் அதிகரிக்கும் என்பதே உண்மை.

இதைப் பேரினவாதிகள் உணர்ந்து கொள்ளாவிட்டாலும் அவர்களுக்குப் பின்னணியாக இருப்போர் உணர்வது அவர்களின் எதிர்கால பதவிகளுக்கு ஆரோக்கியமாக அமையும் எனலாம்.

# லசந்தவை மறந்துவிடுங்கள் பிரதியமைச்சர் ரஞ்சன் அடாவடி

(கொழும்பு)

பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கும் ஊடகவியலாளர் ஒருவருக்குமிடையே கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டுள்ளதோடு அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க வீடியோ கமராவை தாக்கியுள்ளார்.

சிறப்பு பரிசோதனைகளுக்காக மீண்டும் தோண்டி எடுக்கப்பட்ட சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் விடயம் தொடர்பில் விளக்கமளிப்பதற்காக நேற்று முன்தினம் மாலை தனது வீட்டில் ஊடகவியலாளர் சந்திப்பை ரஞ்சன் ராமநாயக்க ஆயத்தப் படுத்தியிருந்தார்.

ஊடகவியலாளர் மாநாடு ஆரம்பமாவதற்கு முன்னர் ஊடகவியலாளர்கள் சிலர்,

“லசந்த ஆயுதம் ஒன்றால் பலமாக தாக்கப்பட்டே உயிரிழந்திருந்தார். இது யாவரும் அறிந்த விடயம். எனினும் தற்போது அவருடைய சடலத்தை தோண்டியெடுப்பது தேவையற்ற விடயமாகும்” என்றனர்.

இதனையடுத்து சற்று கோபமடைந்த அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க,

“லசந்த என்பவர் யார். அவர் ஒரு ஊடகவியலாளர். நீங்கள் ஊடகவியலாளர்களாக இருந்துகொண்டு இப்படி கதைக்கின்றீர்களே. நீங்கள் எல்லோரும் நல்ல ஊடகவியலாளர்கள். இந்த விடயத்தை மறந்து விடுங்கள்,

“ஏன் லசந்தவை பற்றி எந்தநேரமும் கதைத்து கொண்டிருக்கின்றீர்கள். அவரை மறந்து விடுங்கள் என கோத்தபாய ராஜபக்ஷ சொன்னது போன்று நாமும் மறந்து விடுவோம். இலங்கையில் உள்ள ஊடகவியலாளர்களின் தன்மை இதுதான் என்றார்.

இதனையடுத்து ஊடகவியலாளர் ஒருவர், அமைச்சரே நாங்கள் யாராவது லசந்த தாக்கப்பட்டு கொலை செய்யவில்லை என்று கூறினோமா? என்றார்.

அதற்கு அமைச்சர், “லசநத என்னுடைய நெருக்கமான நண்பராவார். அவரை எட்டு தடவைகளுக்கு மேல் சந்தித்துள்ளேன். அவர் எனக்கு பல தகவல்களை வழங்கியுள்ளார். அதேபோன்று நானும் அவருக்கு நாட்டில் நடந்த முக்கியமான ஊழல் செய்திகளை வழங்கியிருந்தேன்.

பத்திரிகை ஆசிரியர் ஒருவரின் திருமண நிகழ்வொன்று கொழும்பில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் நடைபெற்றது. இந்த திருமண நிகழ்வில் மொத்த செலவையும் மகிந்த ராஜபக்ஷவே ஏற்றுக் கொண்டார்.

இதேபோன்று மற்றுமொரு பத்திரிகையின் ஆசிரியர் தனது மகன் மற்றும் மகளை ஒக்ஸ்போட் பல்கலைக்கழகம் அருகில் அமைந்திருக்கும் மற்றுமொரு பிரபல பல்கலைக் கழகத்தில் சேர்த்தார்.

அவர்களின் பிள்ளைகளை பிரித்தானியாவில் உள்ள அநுர ஹேகொடவின் வீட்டில் தங்க வைத்தார். வீட்டு வாடகை பணமான பல இலட்ச பணத்தை வழங்கினார்.

இந்த விடயத்தை நான் லசந்தவுக்கு வழங்கினேன். பின்னர் அநுர ஹேகொட எனக்கு தொலைபேசி மூலம், பிள்ளைகளின் கல்வி சம்பந்தமான விடயம் என்பதால் இதனை பிரசுரிக்க வேண்டாம் என்றார். ஆனால் லசந்த இந்த விடயத்தை பத்திரிகையில் பிரசுரித்தார். இதனையடுத்து குறித்த ஆசிரியர் இன்று வரை என்னோடு கதைக்க மாட்டார்.

தற்போது லசந்தவின் சடலம் தோண்டியெடுக்கப்பட்டுள்ளது. நீங்கள் இவ்விடயம் தொடர்பில் சரியான முறையில் செய்திகளை வெளியிட்டு உந்துதல் அளிக்கும் போது இந்த சம்பவத்துடன் தொடர்புடைய உயர்மட்டத்தில் உள்ள நபர்களை கைது செய்ய முடியும்.

நாம் எல்லோரும் கசிப்பு விற்பனை செய்யும் நபரை கைது செய்ய வந்த பொலிஸ் அதிகாரி மீது தாக்குதல் நடத்தும் சமூகமாக உள்ளோம்.

இதன்போது குறுக்கிட்ட ஊடகவியலாளர், பொலிஸ் அதிகாரி இலஞ்சம் வாங்குவதால் தாக்குதல் நடத்துகின்றார்களோ தெரியவில்லை என்றார்.

இதற்கு அமைச்சர் உங்களை போன்ற ஊடகவியலாளர்கள் இலஞ்சம் பெறுவது போன்றுதான் என்றார்.

இதற்கு ஊடகவியலாளர் என்னை காட்டி அவ்வாறு கூறாதீர்கள். நான் ஒருபோதும் இலஞ்சம் வாங்கியதில்லை.

அமைச்சர் : நீங்கள் இலஞ்சம் வாங்கவில்லை. ஆனால பலரின் பெயர் பட்டியல் எங்களிடம் உள்ளது.

ஊடகவியலாளர்: இதே போன்று இலஞ்சம் வாங்கிய பல அரசியல்வாதிகளின் பெயர்கள் எங்களிடம் உள்ளன.

கடும் கோபமடைந்த அமைச்சர் : “தம்பி என்னை திருடன் என்று சொல்கின்றீர்கள். எனக்கென்று சொந்த வீடு,வாகனம் இல்லை. இன்னமும் வாடகை வீட்டில்தான் உள்ளேன். அரசாங்க வாகனத்தையே பாவிக்கின்றேன்.

நான் ஒருபோதும் திருட்டு வேலைகளை செய்ததுமில்லை. கொள்ளையடித்ததும் இல்லை. எதனோல், போதைப்பொருள் கொண்டு வரவில்லை. தவறு எதனையும் செய்யாமையினால்தான் இவ்வளவு உறுதியாக நான் கதைக்கின்றேன்.

இதனால்தான் பயம் இல்லாமல் கதைக்கின்றேன். எனவே எனக்கு மரியாதை செலுத்த வேண்டும்.

மகிந்த ராஜபக்ஷ எனக்கு 50 கோடி ரூபா தருவதாக கூறி அவருக்கு ஆதரவு வழங்கக் கூறினார். ஆனால் பணத்துக்கு அடிபணிந்து அங்கு செல்லவில்லை. பல தியாகங்களை செய்து தான் இந்த நிலைமையில் உள்ளேன்.

லசந்த என்னுடைய நண்பர் என்பதாலே நான் இந்த ஊடகவியலாளர் மாநாட்டை ஆயத்தம் செய்தேன்.

திருட்டு வேலைகளை செய்த ஏனைய அரசியல்வாதிகளுக்கு நீங்கள் என்ன வேண்டுமென்றாலும் கூறும். எனக்கு அம்மா,அப்பா,பிள்ளைகள என யாரும் இல்லை. யாருக்கும் கடன் இல்லை. நான் எனக்கு விருப்பமான வகையில் தனிமையில் வாழ்ந்து வருகின்றேன்எனக்கடும்தொனியில் தெரிவித்தார். (இ-7)

# புதிதாய் வாழ்வோம் மகாநாடு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின்பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் அழைப்பில் “புதிதாய் வாழ்வோம்” என்னும் தலைப்பில் யாழ். மறை மாவட்டத்தில் மேய்ப்புப்பணி மகாநாடு ஒன்று இன்று 29 ஆம் திகதி முதல் ஒக்டோபர் முதலாம் திகதி வரை யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியில் நடைபெறவுள்ளது. யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் கலாநிதி யோசப்தாஸ் ஜெபரட்ணம் அடிகளாரின் நெறிப்படுத்தலில் இம் மகாநாடு இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகிறது.


“புதிதாய் வாழ்வோம்” என்னும் தலைப்பில் “செயலற்ற விசுவாசம் உயிரற்றது” என்னும் கருப்பொருளில் நடைபெறும் மேற்படி மகாநாடு 1. நாங்கள் ஒரு இறை மக்கள் குழுமம் 2. நாங்கள் ஒரு வழிபடும் குழுமம் 3. நாங்கள் ஒரு சான்று பகரும் குழுமம் என்னும் 3 பிரிவுகளில் நடைபெறும் இம் மகாநாட்டில் இன்று 29ஆம் திகதி வியாழக்கிழமை முதல நாள் நிகழ்விற்குத் திருகோணமலை மறை மாவட்ட ஆயர் மேதகு கலாநிதி கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவல் ஆண்டகை சிறப்பு விருந்தினராக கலந்து கொள்வார்.

நாங்கள் ஒரு இறை மக்கள் குழுமம் என்ற கருப்பொருள் இன்று அலசி ஆராயப்பட்டு ஏற்கனவே தயாரிக்கப்பட்ட நிலைப்பாட்டு ஏடுகள் படிக்கப்பட்டு அடுத்த 5 ஆண்டுக்கான இக்கருப்பொருளின் திட்டங்கள் தீட்டப்படவுள்ளன. (இ-7-10)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் வழி யோக மார்க்கங்களின் சீர் அமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை வரை யாழ்.பிரதேசத்தில் மாதனை பிரதேசம், தோப்பு பிரதேசம் (அச்சுவேலி) ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில தோணிக்கல், சிவன்கோயில் பிரதேசம், குட்செட் வீதி, தெற்கிலுப்பைக்குளம் கிராமம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில எருவிட்டான், அச்சங்குளம், அருவிக் கண்டல், அறுகுக் குன்று, நொச்சிக்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## சத்திய தரிசனம்



### தவறைச் சுட்டிக் காட்டினால் மகிழுங்கள்

❖ தவறு செய்யாத மனிதன் இல்லை. ஆனால் மீண்டும் மீண்டும் தவறு செய்யாது இருக்க வேண்டும்.

❖ வேலைப்பாடு அமைந்த பெரிய தேரையும் முட்டுக்கட்டை தவறான வழியில் செல்லாமல் தடுத்து நிறுத்துகிறது. அதுபோல உயர்ந்த கல்வியாளர் தவறான வழியில் சென்றால், சாதாரணமானவர்கள் திருத்தக் கூடும்.

❖ பிறர் தவறு செய்யும்போது மட்டும் நமது கண்கள் பூதக்கண்ணாடி அணிந்து கொள்கின்றன. வாய் ஒலி பெருக் கியாய் விடுகிறது.

❖ ஆசான் தன்னைக் கண்காணிக்கிறான் என்று மாணவர்கள் அறிந்தால் குறும்பு செய்வது இல்லை. இறைவன் நம்மைக் கண்காணிக்கிறான் என்று நாம் நம்பினால் தவறு செய்யமாட்டோம்.

❖ அடுத்தவர் உங்கள் தவறினைச் சுட்டிக்காட்டி எள்ளி நகையாடினால், இருமடங்கு மகிழுங்கள். மீண்டும் அந்தத் தவறு செய்யாவண்ணம் இருக்க அவர் உதவினார்.

❖ அறியாமையால் செய்த தவறுகளுக்கும், பாவங்களுக்கும் உண்மையாகப் பச்சாதாபப்படுங்கள். மறுபடியும் அந்தத் தவறுகளையோ, பாபங்களையோ செய்யாது இருக்க முயலுங்கள். சரியான பாதையிலேயே நீங்கள் போவதற்கு வேண்டிய பலத்தையும், தைரியத்தையும் உங்களுக்கு அருளும்படி ஆண்டவனிடம் பிரார்த்தனை செய்யுங்கள்.

❖ உங்களுக்குத் தெரிந்து உங்களிடம் இல்லாத தவறுகள் பற்றி மற்றோர் எது சொன்னாலும் பொருட்படுத்தாதீர்கள். உங்களிடம் உள்ள தவறுகளை மற்றோர் உங்களுக்கு சுட்டிக்காட்டுவதற்கு முன்பே சரி செய்துவிட முயலுங்கள். உங்கள் தவறுகளைச் சுட்டிக்காட்டுபவர்கள் மீது கோபமும், பழிவாங்கும் எண்ணமும் கொள்ளாதீர்கள். அதற்காக பதிலுக்கு அவர்களுடைய தவறுகளை நீங்கள் சுட்டிக்காட்ட வேண்டாம்.

❖ தன்னம்பிக்கை என்பது தங்க பஸ்டம். அதுமட்டும் இருந்தால் ஆரோக்கியம் என்னும் ஆனந்தம் கிட்டும்.

# லீக் சுற்றுக்குள் நுழைந்தது நாவாந்துறை சென்.மேரிஸ்

குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக்கழகம் நடத்தும் 7பேர் கொண்ட வடமாகாண ரீதியிலான உதைபந்தாட்ட போட்டியில் 25.09.2016 அன்று நடந்த மின்னொளியிலான போட்டியில் மணற்காடு சென். அன்ரனிஸ் அணியை 5:1 என்ற கோல் கணக்கில் நாவாந்துறை சென்மேரிஸ் அணி வெற்றிகொண்டது.

அவ் அணி சார்பாக நிதர்சன் 3 கோலினையும் தங்கள், ஜெனிற்றன் தலா ஒரு கோலினை போட்டனர். (க)





# இறுதிப்போட்டியில் மட்டுவில் வளர்மதி

அண்ணா வி.க.நடத்துகின்ற தரப் பந்தாட்ட போட்டிகளில் B பிரிவினருக்கான 24.09.2016 அன்று இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியில் மட்டுவில் மோகனதாஸ் அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி அணி மோதியது.

இப்போட்டியில் வளர்மதி அணி 3:2 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. (க)

# கிளிநொச்சிக்கு 2ம் இடம்



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 28 ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு போட்டி பதுளை வின்சன் டயஸ் மைதானத்தில் இடம்பெற்று வருகிறது. 2016.09.23 இடம்பெற்ற 20 வயதுக்கு மேற்பட்ட உயரம் பாய்தல் நிகழ்வில் யோ.சுகிர்தா 2 ஆம் இடத்தினை பெற்றுள்ளார். (க-281)

# குருநகர் பாடும்மீன் வெற்றி



இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் பிரிவு 2க்கான போட்டி 24.09.2016 அன்று மட்டக்களப்பு மருதமுனையில் இடம்பெற்றது. நடைபெற்ற தொடரின் மூன்றாவது ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து மருதமுனை யுனிவர்ஸ் அணி மோதியது. இடம்பெற்ற இப் போட்டியில் குருநகர் பாடும்மீன் அணி 6-0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

# முல்லை. மாவட்ட மட்ட கராத்தே சுற்றுப்போட்டி

(முள்ளியவளை)

முல்லைத்தீவு மாவட்ட மட்ட கராத்தே சுற்றுப் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட செயலக திறந்த மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் வெற்றியீட்டியோருக்கான பதக்கங்களை மாகாண சபை உறுப்பினர் க.சிவநேசன், மாவட்ட செயலக கணக்காளர் ஆகியோர் அணிவித்து கௌரவித்ததுடன் சான்றிதழ்களும் வழங்கி வைத்தனர். (க-302)





# சமநிலை தவிர்ப்பு உதையில் இறுதிப்போட்டியில் ஞானமுருகன்

புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடத்திய உதைபந்தாட்ட அரையிறுதி ஆட்டத்தில் கிளிநொச்சி உருத்திரபுரம் அணியை வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதிபெற்றது ஞான முருகன் விளையாட்டுக்கழகம்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியின் ஆரம்பத்தில் கிடைத்த பனால்டி வாய்ப்பை ஞானமுருகன் வீரன் தீபன் வீணடிக்க முதற்பாதி கோல் எதுவும் பெறாமல் முடிவுற்றது.

இரண்டாம் பாதியில் அபாரமாக ஆடிய உருத்திரபுரம் அணி ஒரு கோலினை போட்டு சில நிமிடங்களில் ஞானமுருகன் வீரன் வகின்சன் அதிரடியாக ஒரு கோலினை போட ஆட்டம் சமநிலையானது.

மீண்டும் கோல் போட இரு அணிகளும் கடுமையாக முயற்சித்த போதும் பின்கள வீரர்கள் அவற்றை முறியடிக்க இறுதியில் 1:1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவுற்றது.

தொடர்ந்து நடைபெற்ற சமநிலை தவிர்ப்பு உதைகளில் ஞான முருகன் கோல்காப்பாளர் சைந்தனின் சிறப்பான தடுப்பின் மூலம் 4:3 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று இறுதிக்குள் நுழைந்தது ஞானமுருகன் அணி. (க)

# பாரதி உதைபந்தாட்ட தொடர் இறுதிப்போட்டியில் யங்ஹென்றீஸ்



பொலிகை பாரதி உதைபந்தாட்ட தொடர் மின்னொளியில் நடைபெற்று வருகின்றது. இதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டியில் யங்கம்பன்ஸை எதிர்த்து யங் ஹென்றீஸ் மோதியது.

முதல் பாதியில் யங்கம்பன்ஸ் அணியின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் 6 ஆவது நிமிடத்தில் ரதன் கோல் போட ஆட்டம் தொடர்ந்தது. 13 ஆவது நிமிடத்தில் கிடைத்த தண்ட உதையை கோலாக மாற்றினார். யங்கம்பன்ஸ ரதன் முதல் பாதியாட்டம் 02:00 என்ற அடிப்படையில் நிறைவுற்றது. இரண்டாவது பாதியாட்டத்தில் யங் ஹென்றீஸ் ஆதிக்கம் 31 ஆவது நிமிடத்தில் யங்ஹென்றீஸ் வீரர் மதுசன் கோல் போட்டு அணியின் முதல் கோலை பதிவு செய்ய பதிலுக்கு 33ஆவது நிமிடத்தில் யங்கம்பன்ஸ் பிரகாஷ் கோல் போட ஆட்டம் பரபரப்பானது யங் ஹென்றீஸ் மகீபனால் 35/45 ஆவது நிமிடங் களில் இரண்டு கோல்களை போட்டு ஆட்டத்தை சமநிலையாக்கினார். இறுதியாட்ட நேர முடிவில் 03:03 என்ற அடிப்படையில் ஆட்டம் சமநிலையானது. வெற்றியை தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சம நிலை தவிர்ப்பு உதையில் யங்ஹென்றீஸ் கோல் காப்பாளரின் சிறந்த கோல் காப்பின் மூலம் 04:02 என்ற ரீதியில் யங்கம்பன்ஸ் அணியை வீழ்த்தி இறுதி போட்டிக்கு தெரிவானது யங் ஹென்றீஸ் அணி.

ஆட்ட நாயகனாக யங்ஹென்றீஸ் வீரர் மகீபன் தெரிவு செய்யப்பட்டார். யங்கம்பன்ஸ் அணி சார்பாக ரதன் 2 கோலினையும் பிரகாஷ் 01 கோலினையும் போட்டனர். (க)

## மகிந்தவின் பாது...

சரீரப் பிணையிலும் விடுதலை செய்யுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

சொத்துக்கள் மற்றும் உடமைகள் தொடர்பில் உரிய தகவல்களை வழங்கவில்லை எனக் கோரியே குறித்த வழக்கு இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு மீண்டும் அடுத்த வருடம் ஜனவரி 13ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (செ)

## தேசிய விளையாட்டு...

வரும் 2ஆம் திகதி வரை நடைபெறும். இறுதிநாள் நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (செ)

## நாட்டை வேடு...

வந்த அவர் வேடர் குல அரசி குவேணியை மணம் புரிந்தார்.

பின்னர் வேடர் குல அரசியை விரட்டிவிட்டு, தென்னிந்தியாவில் இருந்து தமிழ் இளவரசியை அழைத்து வந்து திருமணம் புரிந்துக்கொண்டார். தமிழ் பெண்களையும் அழைத்து வந்து தன் நண்பர்களுக்கு திருமணம் செய்து கொடுத்தார்.

எனவே பெண்களை தென்னிந்தியாவுக்கும், ஆண்களை மத்திய இந்தியாவுக்கும் அனுப்பி நாட்டை வேடர்களுக்கு கொடுத்து விடுவோமா, என நேற்று முன்தினம் இரவு பிரபல தொலைக் காட்சியிலும், நேற்று காலை பிரபல தனியார் வானொலியிலும், உரையாற்றிய தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சரும், தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவருமான மனோ கணேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் அமைச்சர் மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

எடுத்ததுக்கு எல்லாம் தமிழர்களை இந்தியாவுக்கு விரட்டுவோம் என சொல்வது ஏன்? இந்த நாடு தமக்கு மட்டுமே சொந்தம். ஏனைய எல்லோரும் வெளியில் இருந்து வந்தவர்கள் என்ற வாதத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. இதை இவர்கள் கைவிட வேண்டும்.

வடமாகாண முதலமைச்சருடன் சட்டரீதியாகவும், அரசியல்ரீதியாகவும் மோதுங்கள். அதற்காக அனைத்து தமிழரையும் விரட்டுவோம் என்று கூக்குரல் இட முடியாது. மீண்டும் நாம், கடந்த இருண்ட காலத்துக்குள் செல்ல முடியாது.

இதேவேளை அமைச்சருடன் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பொது எதிரணியை சார்ந்த இரத்தினபுரி எம்.பி ரஞ்சித் சொய்சாவும், பொதுபல சேனாவின் பொதுச்செயலாளர் ஞானசார தேரரை கண்டித்தார்.

இவர் ஒரு இனவாத பாவ பூதம். இவரினால்தான் அன்று இனவாதம் அதிகரித்து அதன் காரணமாக எம் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் தோல்வியடைந்தார்.

அமைச்சர் மனோ கணேசன் இவரை எங்கள் கட்சி பட்டியலில் போடக்கூடாது. இவரை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த நாட்டில் வாழும் எல்லோருக்கும் இந்த நாடு சொந்தம். இங்கே வாழும் எவரையும் எவரும் வெளிநாடுகளுக்கு விரட்ட முடியாது என எம்.பி ரஞ்சித் சொய்சா பதில் கூறினார். (செ-11)

## சர்வதேச நீதிபதி...

போர்க்குற்ற விசாரணைகளுக்காக இலங்கை அரசாங்கம் அமைக்கவுள்ள உள்ளக நீதிமன்ற விசாரணைப் பொறிமுறைக்கு வெளிநாட்டு நீதிபதிகளை உள்வாங்க வேண்டும் என்ற விடயத்தில் ஐ.நா செயலாளர் நாயகம் அழுத்தம் கொடுக்கவில்லை என ஜனாதிபதி கடந்த வாரம் அறிவித்திருந்தமை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே பான் கீ மூனின் பிரதி ஊடகப் பேச்சாளர் பர்ஹான் ஹக் இந்தத் தகவலைத் தெரிவித்திருக்கின்றார்.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ மூனின் பிரதி ஊடகப் பேச்சாளர் பர்ஹான் ஹக் நேற்று நடத்திய வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது இலங்கை விடயத்தில் ஐ.நா தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டுள்ளதா என ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த பான் கீ மூனின் பேச்சாளர், ஐக்கிய நாடுகள் சபை இலங்கை விடயத்தில் மிகத் தெளிவான நிலைப்பாட்டில் இருப்பதாகவும், இதனை ஆரம்பம் முதல் தொடர்ச்சியாக வெளியிட்டுவரும் அனைத்து அறிக்கைகளிலும் மிகத் தெளிவாக உறுதிப்படுத்தியுள்ளதாகவும் பர்ஹான் ஹக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது, குறிப்பாக யுத்தக்குற்ற விசாரணைகளுக்காக அமைக்கவுள்ள உள்ளக நீதிமன்ற விசாரணைப் பொறிமுறை விடயத்தில் இலங்கை அரசின் தீர்மானங்களுக்கு முழுமையான ஆதரவு வழங்குவதாக ஐ.நா செயலாளர் நாயகம் தெரிவித்த தாக சந்திப்பு முடிந்த பின்னர் சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்திருந்தார்.

போர்க்குற்ற விசாரணைகளை மேற்கொள்வதற்காக அமைக்கப்படவுள்ள உள்ளக நீதிமன்ற விசாரணைப் பொறிமுறைக்கு வெளிநாட்டு நீதிபதிகளை உள்வாங்கப் போவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டு மக்களுக்கு உறுதிபட அறிவித்துள்ளார்.

எனினும் ஜெனிவாவில் 2015 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் இலங்கை அரசாங்கத்தின் அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் போர்க் குற்ற விசாரணைகளுக்காக அமைக்கப்படும் உள்ளக நீதிமன்ற விசாரணைப் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகள், சட்டத்தரணிகள் மற்றும் வழக்குத் தொடுநர்களை இணைத்துக் கொள்வதற்கும் இலங்கை அரசாங்கம் இணக்கம் தெரிவித்திருந்தது.

இதனை இலங்கை அரசாங்கம் முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் மற்றும் மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் உசைன் ஆகியோர் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (செ-11)

## முதலிடம் பெறு...

நேற்று கொழும்பில் ஆரம்பமான தகவலறியும் உரிமை தொடர்பான சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில,

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு மக்களினால் வழங்கப்பட்ட ஆணைக்கு அமைவாக தகவல் அறியும் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது. இதனையிட்டு நாம் மகிழ்ச்சி அடைந்தாலும், ஒரு விடயத்தில் கவலையடைகிறோம். அதாவது சார்க் வலையத்தில் இந்த தகவல் அறியும் உரிமை சட்டமூலத்திற்குள் செல்கின்ற இறுதிநாடாக இலங்கை பதிவாகிறது.

2001 ஆம் ஆண்டே இதனைக் கொண்டு வந்திருந்தால் சார்க் பிராந்தியத்தில் நாம் முதலாவது நாடாக இருந்திருப்போம். இந்தியாவில இந்த உரிமையை மக்களே கோரி போராட்டம நடத்தினர். ஆனால் இலங்கையில் இந்த கோரிக்கையை எதிர்க்கட்சியே முன்வைத்தது.

நாங்கள் சுயாதீன ஆணைக்குழுக்களையும், தகவல் அறியும் உரிமையையும் நாங்கள் கோரிய போது முன்னைய அரசாங்கத்தை கவிழ்ப்பதற்காகவே இவ்வாறு செய்கின்றோம் என்று கூறினர். இறுதியில் எமது ஜனாதிபதியின் கீழ் இதனை செய்திருக்கின்றோம்.

இந்த விடயத்தில் ஊடகங்களின் பங்களிப்பு முக்கியமானதாகும். ஊடகங்களினால் ஒரு கதாபாத்திரத்தை உருவாக்கவும் முடியும அழிக்கவும் முடியும். மேலும் ஸ்கொட்லாந்து, பங்களாதேஷ் போன்ற நாடுகளில் இந்த சட்டமூலத்தை முழுமையாக அமுல்படுத்த ஆறு வருடங்கள் சென்றது.

ஆனால் எமது நாட்டில் இதனை விரைவாக செய்ய முடியும் என நம்புகிறோம். இவ்வாறான சட்டமூலங்களை கொண்டுவருவது அரசாங்கத்திற்கு பாதகமாகவே அமையும். ஆனால நல்லாட்சிக்கு இது அவசியம் என்பதால் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்த நாங்கள் இதனை செய்திருக்கின்றோம். இதில் மக்கள் அக்கறை காட்டவேண்டும் என்றார். (செ-11)

## விடைபெறுகிறார்...

றாண்டு காலம் பதவி வகித்த வை.கே. சின்ஹா எதிர்வரும் நவம்பர் மாத நடுப்பகுதியில் தனது பணியில் இருந்து விடைபெறவுள்ளார்.

இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவராக தரன்ஜித் சிங் சந்து நியமிக்கப்பட்டுள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சு ஏற்கெனவே அறிவித்திருந்தது.

இந்நிலையில், பிரித்தானியாவுக்கான இந்தியத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள வை.கே.சின்ஹா, தனது புதிய பதவியை ஏற்றுக்கொள்ளும் வகையில் எதிர்வரும் நவம்பர் மாத நடுப்பகுதியில் கொழும்பில் இருந்து வெளியேறுவார் என்று இந்திய வெளிவிவகார அமைச்சு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அறிவித்தல் வெளியிட்டுள்ளது. (செ-11)

# மரண அறிவித்தல்



(6057)

## வரப்பிரகாசம் மரியதாஸ் (ராசா)

(ஓய்வுபெற்ற தொலைபேசி இயக்குநர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை)

அல்லைப்பிட்டியை பிறப்பிடமாகவும் வேலன்சீமா ஏழாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வரப்பிகாசம் மரியதாஸ் (ராசா) (ஓய்வுபெற்ற தொலைபேசி இயக்குநர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை) கடந்த (27.09.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வரப்பிரகாசம் - தங்கமுத்து தம்பதிகளின் புதல்வனும், காலஞ்சென்ற நடராசா - புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பத்மலோசினி அவர்களின் அன்புக் கணவரும், ராஜமேனகன் (பொது சுகாதார பரிசோதகர் - தெல்லிப்பழை), தட்சாயினி (லண்டன்), வாகீசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், றோகினி, தயானந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அக்சயா, அனுஜா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற பத்மினி, யூலியஸ், குணபாலசிங்கம், நித்தியலக்சுமி, சரோஜினி, லிங்ககுரு ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.09.2016) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக முற்பகல் 10.30 மணியளவில் ஏழாலை மத்தி உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வேலன் சீமா,
ஏழாலை மேற்கு, சுன்னாகம்.
021 321 0928

தகவல்: ம.மேனகன் (மகன்)
ம.வாகீசன் (மகன்)
ந.நந்தகோபன் (மைத்துனர்- ஆசிரியர்)

## அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு அரசசார்பற்ற அமைப்புக்களின் ஒத்துழைப்பு அவசியம் - சந்திரிகா

நல்லிணக்கம் உட்பட அரசாங்கத்தின் செயற்றிட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுக்க வேண்டுமானால் அரச சார்பற்ற அமைப்புக்களின் முழுமையான ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியம் என அரசாங்கத்தின் நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டுக்கான விசேட செயலணியின தலைமை அதிகாரியான முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் நடவடிக்கைகளை முழுமையாக அவதானிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று கொழும்பில் வலியுறுத்திய நிலையிலேயே சந்திரிகா மற்றுமொரு நிகழ்வில் நேற்று பங்கேற்றிருந்த நிலையில் இவ்வாறு தெரிவித்தார்.

விவசாயத்தை கட்டியெழுப்புவதன் ஊடாக பட்டினி இல்லாத நாட்டைக் கட்டியெழுப்புவோம் மற்றும் ஊட்டச்சத்தை அதிகரிப்போம் என்ற தொனிப்பொருளில் செயற்திட்டமொன்று கொழும்பில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தற்போதைய அரசாங்கம் முதன்முறையாக தனியார்துறை மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுவது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளது. ஒரு குறிப்பிட்ட செயற்றிட்டங்களிலாவது அவர்களை இணைத்துகொண்டு பணியாற்றுவது தொடர்பில் சிந்திக்கின்றது.

என்னுடைய தலைமையில் இடம்பெறும் நல்லிணக்க செயற்றிட்டங்கள் பெரும்பாலும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்புடனேயே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அரசாங்கத்தால் மாத்திரம் சில விடயங்களில் தனித்து செயற்பட்டு நினைத்த இலக்கை அடைய முடியாது.

சிவில் சமூகத்தினர் இந்த நாட்டில் முக்கிய பங்கினை வகிக்கின்றனர். அவர்களின் பங்களிப்புடனேயே கடந்த ஜனவரி மாதம் அமைதியான இரத்தம் சிந்தா புரட்சியை ஏற்படுத்த முடிந்தது. நாட்டிற்காக சில அமைப்புகள் செயற்றிறன் மிக்க பங்களிப்பினை வழங்கக் காத்திருக்கின்றன என சந்திரிகா தனது உரையில் மேலும் தெரிவித்தார். (செ)

## ஆட்டோ மோதியதில் இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பாதசாரிக் கடவையினால் வீதியினைக் கடக்கும் போது வேகமாக வந்த ஆட்டோ மோதியதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று இரவு 7 மணியளவில் பருத்தித்துறை வீதி, நீர்வேலிச் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

இதில் நீர்வேலி பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த சந்திரன் சியாந்தன் (வயது 29) என்ற இளைஞனே படுகாயமடைந்தவராவார்.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (செ-30)

அனைத்து நாடுகளுக்குமான விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK-550*/=Kg
DELIVERY IN 3-5 DAYS
மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
தொடர்புகளுக்கு: 0768226240
●யாழ்ப்பாணம் ●கிளிநொச்சி ●நெல்லியடி ●பருத்தித்துறை ●வல்வெட்டித்துறை
V2 TRAVELS (C-5920)

DMI ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
A/L-2017 புவியியல்
ஆசிரியர் - N.BABU
(சனி, ஞாயிறு வகுப்புக்கள்)
*8 am - புறவிசை
*10 am - உலகின் விவசாயம்
*11 am - வரைபடம், வரிப்படங்கள்
*12 மணி - PAPER CLASS


# பினாமி சொத்துக்களை மீட்கவே...

மீட்டெடுப் பதற்காக பாதயாத்திரைகளையும் ஆர்ப்பாட்டங்களையும் இவர்கள் நடததுகின்றனர்.

இவ்வாறு ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் விரிவுரையாளரும், ஜே.வி.பியின் செயற்பாட்டாளருமான தம்பர அமில தேரர் ஊடகங்களிடம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், ஆட்சியை இழந்த மகிந்த ராஜபக்ஷ மீண்டும் எதையாவது செய்து ஆட்சியைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். அதற்காக பாதயாத்திரைகளையும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்துகின்றார். இது நாட்டுக்காக அல்ல மகிந்தவின் தனிப்பட்ட தேவைக்காக.

மகிந்த தரப்பினரின் சொத்துக்கள் பினாமிகள் பெயரில் உள்ளன. ஆட்சி கவிழ்ந்ததும் அந்தப் பினாமிகள் சொத்துக்களை மீள வழங்க மறுக்கின்றனர். ஆட்சிக்கு வந்தால் தான் அவற்றை மீட்க முடியும் என்ற நிலை இருப்பதால் அதற்கான ஏற்பாடுகளை அவர்கள் இப்போது செய்கின்றனர். இவர்களின் இந்த முயற்சி வெற்றி பெறாது.

ஊழலில் ஈடுபட்ட மகிந்த தரப்பினர் இப்போது கைது செய்யப்படுகின்றனர். இது அரசியல் பழிவாங்கல் என்று கூறி அதனூடாகவும் மக்கள் செல்வாக்கைத் திரட்டுவதற்கு முயற்சி செய்கின்றனர். அதுவும் வெற்றியளிக்காது. அந்தக் கைதுகள் எவையும் அரசியல் பழிவாங்கல் கிடையாது.

இந்த ஆட்சியில் 70 பிக்குகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அவர்கள் குற்றம் சுமத்துகின்றனர். அவர்களுள் அரைவாசிப் பேர் ஹோமாகம நீதிமன்ற வளாகத்தில் அராஜகம் செய்தவர்கள். யானைத் திருட்டு உள்ளிட்ட இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள்தான் கைது செய்யப்படுகின்றனர். எவரும் சும்மா கைது செய்யப்படவில்லை.

ஆகவே, ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக, அவர்களின் சொத்துக்களை மீளப் பெறுவதற்காக இவர்கள் நடத்தும் அரசியல் நாடகத்தை மக்கள் விளங்கி வைத்திருக்க வேண்டும் என அவர் தெரிவிததார். (செ-11)

# டிப்ளோமாதாரர்...

ளோமா தாரர்களது ஆவணங்களை பரிசீலனை செய்வதற்காக நாளை 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு செம்மணி வீதி, நல்லூரில் அமைந்துள்ள வடமாகாணக் கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளதாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் குறிப்பிடப்பட்ட டிப்ளோமாதாரிகளை கல்விச் சான்றிதழ்களுடன் பிறப்புச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டை என்பவற்றின் மூலப் பிரதி மற்றும் போட்டோ பிரதிகளுடன் தவறாது சமுகமளிக்குமாறு கேட்கப்படுகின்றார்கள். (நியமனம் பெற்றவர்களின் பெயர்பட்டியல் 04ஆம் பக்கம் பார்க்க) (செ)

# வடக்கு - கிழக்கை இணைக்க...

நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில், எழுக தமிழ் பேரணிக்கு எதிரான தமிழர்களும் இருக்கின்றனர். இது பற்றி முஸ்லிம் மக்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

வடக்கில் விக்னேஸ்வரன் செயற்பட்டது போல், தெற்கிலுள்ள முதலமைச்சர் ஒருவர் செயற்பட்டிருந்தால், இனவாதத்தை தூண்டுகிறார் எனக்கூறி இந்நேரம் அவரை கைது செய்திருப்பார்கள். ஆனால், விக்னேஸ்வரன் விடயத்தில் சட்டம் இன்னும் செயற்படவில்லை.

விக்னேஸ்வரன் என்பவர் நீதியரசராக செயற்பட்ட நபர். எனவே, அவரின் அறிவிப்புகள் வியப்பாக இருக்கின்றது. அவர் கூறுவது போல் நடவடிக்கை எடுத்தால், அவரின் பிள்ளைகளுக்கும் சிக்கல் ஏற்படும்.

அவரின் பிள்ளைகள், சிங்களவர்களையே திருமணம் முடித்துள்ளனர். எனவே, அவர்களையும் வெளியேறவா சொல்கின்றார்?

எனவே, குறுகிய அரசியலை நடத்தாது, அறிவிப்பை மீளப்பெறுமாறு வலியுறுத்துகின்றோம்.

நாட்டை ஐக்கியப்படுத்துவதற்காகவே நாம் யுத்தம் செய்தோம். அந்த ஐக்கியம் தொடர்ந்தும் பாதுகாக்கப்பட வேண்டும். இலங்கை ஒரு சிறிய நாடு. அது இந்தியாவோ, அமெரிக்காவோ அல்ல. சிலமணிநேரங்களில் அனைத்து இடங்களுக்கும் சென்று வரலாம். எனவே, எதற்காக இந்தப் பிரிவினை?

அரசியலமைப்பு திருத்தம் என்ற போர்வையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களை மீண்டும் ஒன்றிணைப்பதற்குரிய முயற்சியில் அரசு இறங்கியுள்ளது.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்குவதாகக் கூறி, வேறொரு திட்டம் அரங்கேற்றப்பட்டு வருகின்றது. மாகாண சபைகள் இணைக்கப்பட்டால் பாரிய சிக்கல்கள் உருவாகும் நிலை இருக்கின்றது என அவர் தெரிவித்தார். (செ-11)


தேசிய வாசிப்பு மாதம் - ஒக்டோபர் 2016
இணுவில் பொது நூலகம்
சனசமூக நிலையம்
புத்தகக் கண்காட்சி
மற்றும் சிறப்புரை
"வாசிப்பும் மேம்பாடும்"
காலம் : 01.10.2016 சனிக்கிழமை மாலை 3.00 மணி
இடம் : இணுவில் பொது நூலக கலாசார மண்டபம்

சிறப்புரை வழங்குபவர் :
பேராசிரியர் கலாநிதி (திருமதி)
ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன்
தமிழ்நாடு, இந்தியா.
Prof. Dr. JEYANTHASRI BALAKRISHNAN
M.A., M.Phil., Ph.D (English)., M.Ed., M.A., Ph.D (Tamil)
வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்
தலைவர் - திரு. ம. கபிலன்
பிரதம விருந்தினர் - திருமதி. பி. செல்வின் இரனியஸ்
(மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர், அபிவிருத்தி பிரிவு, வட மாகாண கல்வித் திணைக்களம்)
புத்தக கண்காட்சியும் விற்பனையும்
01.10.2016 முதல் 04.10.2016 வரை
நேரம் - காலை 9.30 மணிமுதல்
இரவு 7.00 மணிவரை
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
அனுமதி இலவசம் - இணுவில் பொது நூலகம்

ECONOMICS HALL
நாவலர் வீதி, யாழ். நகர் (புகையிரத கடவை முன்பாக)
A/L 2018, 2017
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம்: 01.10.2016 சனி காலை 8 மணி
A/L 2017க்கான துரித மீட்டல் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும்.

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

Economics Hall
நாவலர் வீதி யாழ்ப்பாணம் (புகையிரதக்கடவை முன்பாக)
பொருளியல் - R.தர்ஷன்
2017 - 8-9 பணம், வங்கி, பொதுவிலைமட்டம்.
9-10 பேரின பொருளாதார சமநிலை
2018 - 11-1 கேள்வி கோட்பாடு.
புதிய பிரிவு ஆரம்பம்
01.10.2016 சனி காலை 08 மணி
கடந்த கால 15 வருட வினாத்தாள்கள், FWC, கொழும்பு வணிக வளம் தமிழ்சங்கம், றோயல் கல்லூரி வடமாகாண மாதிரி வினாத்தாள்கள் அலகுரீதியாக உயர்தர விளக்கத்துடன் கற்பிக்கப்படும்.
2015ம் ஆண்டு மாவட்ட நிலை 01,02 உள்ளடங்களாக 14 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.
077431 6814

ECONOMICS HALL
கணக்கீடு
A.P.பகீரதன்
B.B.A (FM spl.)
A/L 2018
வங்கி இணக்கக்கூற்று Sat, Sun 9 - 10
செம்மையாக்கங்கள் Sat, Sun 10 - 11
A/L 2017
பங்குடமை முடிவுக்கணக்கு
பிரிவு I Sat, Sun 11 - 12
பிரிவு II Sat, Sun 8 - 9
சொத்து விற்பனை
பிரிவு I Sat, Sun 12 - 1
பிரிவு II Fri 3 - 5
Paper Class Sat, Sun 7 - 8
ஆரம்பம் 01.10.2016 (Sat)
077 459 8499

அன்னை முத்துமாரி பஸ்சேவை
Annai Muthumari
கொழும்பு - யாழ்ப்பாணம் - பருத்தித்துறை - வல்வெட்டித்துறை
புதிய நான்கு A/C பஸ்களுடன் இருவழிச் சேவையை இரவு, பகல் என விஸ்தரித்துள்ளது.
வீட்டில் இருந்தவாறே பயணச்சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம்
காலை (புறப்படும் நேரம்) | மாலை (புறப்படும் நேரம்)
பருத்தித்துறை 9.00 am | பருத்தித்துறை 7.00 pm
யாழ்ப்பாணம் 10.00 am | யாழ்ப்பாணம் 8.00 pm
வெள்ளவத்தை 9.00 am | வெள்ளவத்தை 7.00 pm
கொட்டாஞ்சேனை 10.00 am | கொட்டாஞ்சேனை 8.00 pm
சகல நாடுகளுக்குமான சர்வதேச விமானப்பயணச் சீட்டுக்களை எமது சகல கிளைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.
யாழ்ப்பாணம் 077 544 8503
கொழும்பு 077 544 9251
வல்வெட்டித்துறை 077 544 7359
நெல்லியடி 077 285 0285
JETEX
SRILANKA'S FASTEST SERVICE MALL
உள்நாடு, வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள், பொதிகள் துரித கதியில் அனுப்பிட இன்றே நாடுங்கள்.
133, (A9) கண்டி வீதி, கச்சேரியடி, யாழ்ப்பாணம். தொ.பே.இல:- 021 221 6773 | 077 544 8503
நெடியகாடு பிள்ளையார் கோவிலடி, வல்வெட்டித்துறை. தொ.பே.இல:- 021 221 6773 | 077 544 7359
208A, காலி வீதி (றோயல் பேக்கரி அருகாமை), வெள்ளவத்தை. தொ.பே. இல:- 011 236 1766 | 077 544 9251


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.09.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.